
# பாலைவனத்தில் பன்னீர்

காஞ்சனா ஜெயதிலகர்



# பாலைவனத்தில் பன்னீர்!

## 1

வேண்டிய மட்டும் அழுதாயிற்று. இப்போதும் ராஜனின் நினைப்பு வர, நெஞ்சு துக்கத்தில் உதைக்கிறதுதான். ஆனால் கண்ணீர் பொங்கி வழியவில்லை.

கண்ணீர்ச் சுரப்பிகள் வற்றிவிட்டன போலும். ஆனால் உள்ளே துக்கம் கனமாய்த் திரண்டு அடைத்திருக்கிறது.

சட்டென்று சிரிப்பு மலரவில்லை.

இயல்பாய்ப் பேச்சு வரவில்லை.

ஆர்வமாய் வெளிவாசலுக்குப் போய் வர மனமில்லை. உறவின் ஆறுதல் வார்த்தைகள் வெறும் ஜாலப்பந்தலாய்க் கருதித் தள்ளப்பட்டது.

அழைப்பு மணி ஒலிக்க,

எழுந்து போனாள் ராகினி.

எளிய நைலக்ஸ் சேலைதான். ஆனால் அதன் கருநீலம் அவளுக்கு வெகு பொருத்தம். ஒன்றரை மாதங்களாய் வீட்டிலேயே அடைபட்டிருந்த அவளது சருமம் வெளுத்திருந்தது. உணவு பிடிமானதில் உடம்பு வற்றி வடிந்திருந்தது.

அண்ணன் ராஜன் அவளைக் 'குண்டுகுஷ்' என்றுதான் அழைப்பான்.

"ந்தா, நான் 57 கிலோதான். குண்டோட சேர்த்தியேயில்லை!" சீறுவாள்.

"ஒரு ஆறு கிலோ மெலிஞ்சா சுமாராயிருப்பே!"

"அவங்கவங்க தங்களைப் பார்த்துக்க முடியறதில்லையே!" வானத்தை நோக்கி அங்கலாய்ப்பாள்.

"அதிலேதான் அண்ணனாய் நான் பார்த்து உனக்குக் காரணப் பெயராய் வச்சிருக்கேன்!"

"எனக்கு அப்பா வச்ச பேரே பிடிச்சிருக்குதுப்பா..."

"இதுதான் உனக்குப் பொருத்தம்!"

இப்போது ஆறு கிலோ நிச்சயம் குறைந்திருப்பாள். ஆனால் உடம்பைப் பற்றிய உணர்வேயில்லை. கண்களுக்குக் கீழே கருமை வளையமிட்டிருந்தது. வெண்ணெய் தடவினாற்போல சதா மின்னும் உதடுகள் வரண்டிருந்தன. ஆனால் எது பற்றியும் ராகினிக்கு இப்போது கவலையில்லை.

கதவின் கண்ணாடிக் குமிழ் வழியே பார்த்தவள் கதவைத் திறந்தாள்.

Uploaded by Naghu

"வாங்க மாமி!"

செழித்த உடலைச் சற்றே சாய்த்துச் சாய்ந்து, நடந்து உள்ளே வந்தாள் அம்புஜா மாமி. அடுக்கு மாடியில் எதிர் வீட்டில் குடித்தனம்.

"கொஞ்சம் வெல்லம் வேணும்டியம்மா, குழந்தே."

"இருக்கு மாமி - தரேன்."

"எந்நாத்தி பொண்ணுக்குப் போன மாசம் கல்யாணம்னு சொன்னேனில்லியோ? அவா வந்திருக்கா. பாசிப் பயிறுப் பாயசம் செய்யறேன். அதுவும் உனக்குப் பிடிச்ச அவியலும் பிறகு அனுப்பறேன். கூட ரெண்டு வாய் சாப்பிடு, என்ன?"

ராகினி புன்னகைத்தாள். உதடுகளைப் போலப் புன்னகையிலும் வரட்சி.

"அப்பா வெளியே போயிருக்கார் போல?"



"பாங்க் வரை போயிருக்காங்க."

"அவரும் கூடாயிட்டார். புத்திர சோகம் லேசுப்பட்டதா? ஆனா நமக்குச் சொச்ச வாழ்க்கையிருக்கேடீம்மா, அப்பாக்கு நீ. உனக்கு அவருன்னு தேத்திண்டு போக வேண்டியதுதான்."

நடைமுறைக்கு ஏற்ற ஆலோசனைதான் - ஆனால் அமல்படுத்துவது அத்தனை சுலபமாயில்லை.

"ஏலம், பருப்பெல்லாம் இருக்குதா, மாமி?"

"இருக்குடிம்மா, மூணரைக்கு மேலே காபியானதும் வர்றேன் என்ன - உங்கிட்ட ஒரு சமாச்சாரம் பேச வேண்டியிருக்குது..."

வெல்லத்துடன் கிளம்பினாள் மாமி.

அம்மா இல்லாத இவ்வீட்டில் அப்பாவும் இவளும்தான். ராஜன் ராகினியை விட 4 வயது பெரியவன். ஆனால் தாய் ஸ்தானத்தை அவன் இயல்பாக எடுத்துக் கொண்டாள்.

அப்பா நல்லவர் - ஆனால் ரொம்ப வல்லவர் என்றில்லை.

பள்ளி ஆசிரியராயிருந்து ஓய்வு பெற்ற அமைதியான மனுஷர். அவருக்குக் கல்யாணமாகி எட்டு ஆண்டுகள் கழித்துப் பிறந்தவன் ராஜன். ஆக பிள்ளை என்றால் உருகிப் போவார். ராகினி ஆறு வயதாயிருக்கையில் மனைவி இறந்துவிட, ஏற்கெனவே வெண்ணெயான அவர் மனது நெய்யாகி வழிந்தது.

ஃப்ளாட் சொந்தத்தில் என்பதால் அப்பாவின் வருமானம் போதுமாயிருந்தது. மதுராந்தகத்திலிருந்த பூர்வீக வீட்டை விற்று வாங்கியது இந்தக் குடியிருப்பு. கட்டிடக் கலை நிபுணனாக வர வேண்டுமென்பது அவன் விருப்பம்.

சிறு வயதிலிருந்தே உறவினரது வீடுகளுக்குப் போனால் சகஜமாய்ச் சுற்றிப் பார்ப்பான்.

'இந்த ஜன்னலை மறுபக்கம் வச்சிருந்தால் கூடுதல் வெளிச்சம் கிடைச்சிருக்கும்.'

'வெளிச்சுவரில் ஷெல்ப் வைக்கக்கூடாது மாமா - மழைக் காலத்தில் அதுல வைக்கிற புத்தகமோ, துணியோ ஈரம் கசிஞ்சு பாழாயிடும்!' என்பான் பெரிய மனிதத் தோரணையில்.

தான் ஆசைப்பட்ட படிப்பையே எடுத்துத் திருப்தியாய்ப் படித்தான். 'கன்னிமாரா' நூலகத்தில் கிடைத்த அத்தனை அயல்நாட்டுப் புத்தகங்களையும், பத்திரிகைகளையும் கரைத்தே குடித்தான்.

'அப்பா! நானே டிஸைன் பண்ற வீட்டிலே இன்னும் பத்து வருஷத்தில் நாம குடியேறிடுவோம்!' என்பான்.

'நல்லது ராஜா - அப்ப இந்த வீடு?'

'வித்திடலாம்பா - 750 சதுர அடியில் மோசமாய்க் கட்டின புறாக்கூடு இது.'

எத்தனை கனவுகள் அவனுக்குள்... கனவுகள் நனவாகக்கூடிய திறமை - இளமை. அத்தனைக்கும் மகுடமாய் அழகு - அன்பு.

விதி ஏன் அப்படிப்பட்டவனை இத்தனை விரைவாகப் பறித்துக் கொண்டது?

அதுவும் இத்தனை கொடூரமாய்!

விமானத்தில் வந்து இறங்கிய அவன் உடல் கறுத்திருந்தது.

'போஸ்ட்-மார்ட்டம்' செய்து மறுபடி கோர்க்கப்பட்டிருந்த சடலம்.

'ஹா..ஐயோ...!' கதறிவிட்டாள் ராகினி.

அவன் வாழ்வின் கடைசி ஆறு மாதங்கள் இவர்களுடனில்லை. அதுவும் அப்பாவிற்குப் பெருங்குறை.

'முழுசா மூக்குமுழி பார்க்க முடியலியேம்மா.. என் ராஜாவை!' இன்னும் புலம்பிக் கரைந்து கொண்டிருக்கிறார்.

ராஜனுக்கு நூதனமான நண்பர்கள். அதில் ஒருவன்தான் ப்ரமோத் கேரி.



ஏழு மாதங்களுக்கு முன் அந்தப் பெயரில் வந்திருந்த கடிதத்தைப் பார்த்த ராகினி விசாரித்தாள்.

"விநோதமான பெயராயிருக்கேண்ணா? வித்தியாசமான கையெழுத்துக்கூட?"

"ம்... ப்ரமோத் - பாதி ராஜபுத், மீதி ஆங்கிலேயன்."

"எப்படியிருப்பார் பாக்கறதுக்கு?"

"ஜம்முனு இருப்பான். கெச்சலான உயரம், வெள்ளைக்காரச் சிவப்பு, பழுப்புக் கண்ணு, முறுக்கு மீசைன்னு..."

"எங்கேயிருக்கார்?"

"ராஜஸ்தானிலே - ஜெய்ஸல்மரில். ரொம்ப அதிசயமான ஊராம். அது ராக்தார்பாலைவனத்தின் விளிம்பிலிருக்குது - ஊர் முழுக்க ரெண்டு நூற்றாண்டுகளுக்கு, முன்னே கட்டின வீடுகள், 12ம் நூற்றாண்டுக் கோட்டை, அரண்மனைன்னு..."

"அப்ப ஜோராளு விட்டுருவியே - உனக்கேத்த தோஸ்துதான்!"

"13ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட குல்த்ரா கிராமம் பற்றி சுவாரஸ்யமாய் எழுதியிருக்கான். பாலிவல் பிராமணர்கள் ஏழு நூற்றாண்டுகளுக்கு முன்னே இதைக் கட்டிக் குடியேறினாங்களாம். அறுநூறு வீடுகளுடன் இருந்த இச்சிற்றூரை 535 வருடங்களுக்குப் பிறகு அவங்க காலி செய்துவிட்டுக் கிளம்ப, பாழடைந்து அப்படியே நிற்கிறது ஊர்."

"உனக்குக் கால் துறுதுறுங்குமே!" சிரித்தாள்.

"பின்னே, கண்டிப்பாய்ப் போகணும், ராக்குட்டி. நீ அப்பாட்ட சொல்லேன்."

"ஆஹா... காரியமிருந்தா குண்டுகுஷ் - ராக்குட்டியாயிடுமா?"

அலட்டலாய் முந்தானையை விசிறுவாள்.

படிப்பு பூர்த்தியானதுமே உயர்ந்த வேலை ராஜனைத் தேடி வந்தது. அதை ஒத்தி வைத்துவிட்டு ஜெய்ஸல்மர் போவது பற்றி அப்பாவிடம் பேசினான்.

Uploaded by Naghu

"மூணு மாசம்ப்பா - அங்கேயுள்ள பழங்காலக் கட்டிடங்கள், அதன் கலை நுணுக்கங்களை எல்லாம் பார்த்து வரேம்ப்பா..."

"செய்யப்பா - உன்னைப் படின்னு நான் கெஞ்சலை, மிரட்டலை. ஒவ்வொரு கல்லூரியா இடம் கேட்டு ஓடியலையலை. உதவிப் பணத்திலேயே சமாளிச்சே - ஆக காசைக்கூட நா வாரியிறைக்கலை - வேலைக்காக என் மண்டையக் காயவிடலை. அத்தனைக்குப் பொறுப்பான பிள்ளை நீ. நோக்கம் போலச் செய்..." என்று விட்டார்.

ஆனால் ராகினி முகம் தூக்கிக் கொண்டாள்.

வீடு திரும்பும் அண்ணனுக்குக் காத்திருந்து, உடன் அமர்ந்து சீண்டியபடி சாப்பிடவில்லை.

"என்ன ராக் கோபம்?" நிஜமான வாஞ்சையுடன் கேட்டான்.

"எங்கிட்ட அபிப்ராயம் கேட்க வேணாமா?"

"உன்னைத்தானே அப்பாகிட்ட தூது விட்டேன்."

"ஆனா நாம் போனேனா?"

"இல்ல... நானாத்தான் பேசி அனுமதி வாங்கினேன்."

"அதிலேருந்து தெரிய வேணாம்?"

"அதாவது நா வடஇந்தியா போறதிலே ராக்குக்கு இஷ்டமில்லை?"

"இல்லவே இல்லை, சகோதரா."

கைகளை விவேகானந்தர் போலக் கட்டி முகவாய் தூக்கி அழுந்தச் சொன்னாள்.

"நான் அயல் தேசத்துக்குப் போகவில்லையே, சகோதரி?"

"வேற்று மாநிலம் போவது என்னைச் சஞ்சலப்படுத்துகிறதே!"

'பூம்புகார்' விஜயகுமாரி போலக் 'கனீர்' எனப் பேசினாள்.



"அதிக நாளில்லையே ராகினி - மூன்று மாதங்கள். சொற்ப நாட்கள்தானே?"

"90 என்பது சொற்பமில்லையே - தொண்...ணூ...று இரவு பகல்கள்!"

தங்களது நாடக பாணி கண்டு தாளாமல் சிரித்து விட்டான்.

"ஏன் வேணாங்கறே?"

"எனக்கும் பரீட்சை முடிஞ்சு விடுமுறை ஆரம்பமாகுது. 'எம்.ஆர்க்' படிச்ச ரெண்டு வருஷமும் நீ கல்லூரி விடுதியிலிருந்தே - ஆக இப்போ உங்கூட ஆசைதீரப் பேசலாம் - சேர்ந்து ஊர் சுத்தலாம்னு இருந்தேன் - கலக்கியிருக்கலாம் ஊரை. அப்பா சம்மதிச்சிட்டாலும் - அவங்களும் என்னை மாதிரி ஆவலாய் நீ எங்களோட கழிக்கப் போற இந்த விடுமுறைக்காய்க் காத்திருந்தாங்க - தெரியுமா?"

"வேல எனக்கு உள்ளூரிலேயேதான் கிடைச்சிருக்குது. ஆக இப்பப் போனாலும் - திரும்பியதும் இங்கேயேதான் உங்களோடவேதான். உன் ஜாதகத்தை வெளியே எடுத்தாச்சு ராக். சுயம்வர சமயத்துக்கு நான் 'டாண்'னு வந்திடுவேன். அதுவரை பயலுங்க வரிசையா காத்து நிக்கட்டும்.."

கற்பதில், கட்டிடங்களில் அவனுக்கிருந்த ஆர்வம் தெரிந்தவர்களுக்கு மேலும் தடை சொல்ல மனதில்லை.

மூன்று மாதங்களுக்குப் பிறகு தங்களுடனேதானே இருக்கப் போகிறான் என்று சமாதானமாகிச் சம்மதம் தந்தது தப்பு.

மூன்று மாதங்கள் பிறகு ஆறு மாதங்களாக நீண்டது.

பிறகு அதுவே நிரந்தரப் பிரிவாகிப் போனது..

இந்தத் துக்கத்திலிருந்து இனி இவர்கள் மீளவே முடியாது...

## 2

மாமியின் பேரன் தந்து போன அவியல், பாயசத்தை அப்பா வந்த பின் இருவரும் கடமைக்கெனச் சாப்பிட்டனர்.

பாஸ்புக்கையும் வங்கியிலிருந்து எடுத்து வந்த பணத்தையும் இவளிடம் கொடுத்த அப்பா 'அக்கடா' எனப் படுத்துவிட்டார்.

சந்தா கட்டியதால் வீடு தேடி வந்து கிடந்த சில பத்திரிகைகளை எடுத்துப் புரட்டினாள். முன்பு அவளை ஆகர்ஷித்த தொடர்கதைகள் இப்போது அர்த்தமில்லாதவைகளாய்த் தோன்றின. மனித வாழ்வே 'பட்'டென்று அறுந்து போக, கற்பனைக் கதைகளும் அவற்றின் கதாபாத்திரங்களும் என்னவானால் என்ன?

அலுப்புடன் உறங்கிப் போனாள்.

நான்கு மணிக்கு எழுந்து முகம் கழுவிக் காபி கலந்து கொண்டு உட்கார்ந்தபோதுதான் மாமி வந்தாள்.

"விருந்தாளிங்க கிளம்பவே மூணாயிடுத்து. சித்த படுத்து எழுந்து வரேன் - நீயும் தூங்கினயா?"

"ஆமா மாமி - வாசிச்சேன் - அப்படியே கண்ணைச் செருகிடுச்சு"

"அவியல்...?"

"சாப்பிட்டோம், மாமி. நல்லாருந்துச்சு."

மாமி நம்பாதவள் போலச் சமையலறைக்குப் போய்ப் பாத்திரங்களைத் திறந்து பார்த்தாள்.

"ராத்திரிக்கு என்ன சமையல்?"

"யோசிக்கலை... இட்லி ஊத்திடுவேன். தொட்டுக்க தக்காளி சட்னி."

சற்றுச் சரிந்த தேர் போல நடந்து வந்த மாமி, ஓரமாய்க் கிடந்த ஸ்டூல் நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார, அது 'க்றீச்'சிட்டது.



கழுத்துக்குக் கீழே வெகுவாய் உப்பிவிட்டாலும், மனசும் முகமும் மாமிக்கு ரொம்ப அழகுதான்.

மஞ்சள் பூச்சும், பதக்கமாய்க் குங்குமமும் இட்டு ஜொலித்தாள்.

"யோசிச்சேன்டி குழந்தே. போன வாரம் அந்த கேரியின் லெட்டர் காட்டினியே?"

"ம்ம்.."

"சீப்பு எடுத்துண்டு வாயேன் - பின்னி விடறேன். அப்படியே பேசலாம்..."

ராகினி மனம் நெகிழ்ந்தது. தாயில்லாப் பெண் என்று மாமிக்கு இவளிடம் தனிப் பரிவுண்டு. ராஜனும் இறந்த பிறகு பரிவு அதிகந்தான்.

"வேணாம், மாமி."

"சிக்கும் சிடுக்குமா இருக்கே..."

"தூங்கி எழுந்தது..."

"ஜாதிப் பூ வாங்கினேன் - வழவழன்னு பின்னி விட்டு ஒரு இணுக்கு பூ வச்சா லக்ஷணமாயிருப்பே."

எண்ணெய் பாட்டிலும் சீப்புமாய் வந்து அமர்ந்தாள் ராகினி.

"தலை வறண்டிருக்கேடி - நாளை வெள்ளிக்கிழமை உச்சந்தலையிலே ஒரு கை நல்லெண்ணெ அரக்கி அலசு."

"சரி... ப்ரமோத் கேரியின் கடிதாசி பத்திக் கேட்டீங்க..."

"ஆங்... நேத்தி ராத்திரிக்கு யோசிச்சிண்டிருந்தேனா... ஒன்னு மாத்தி ஒன்னா ஏதேதோ நினைப்பு - அப்ப இந்தக் கடிதாசி நினைப்பும் வந்தது. ராஜனோட ஸ்நேகிதன் அந்த கேரி பிள்ளையாண்டான் உங்கப்பாவையும், உன்னையும் வரச் சொல்லி அழைச்சிருந்தானில்லியோ?"

"மாற்றம் உங்களுக்கு நல்லது. ராஜன் கடைசியாய்ப் பார்த்த, ரசித்த ஊரை நீங்களும் பார்த்தால் மனசு ஆறும்னு ஏதோ எழுதியிருந்தார்."

"அது வாஸ்தவம். ஆறு மாசமாய்ப் பார்க்காத பிள்ளை ஒரேயடியாப் போயிட்டான்னு தகவல் வந்தா யார் மனசு ஆறும்? உன் தவிப்பு வடக்கே போய் வந்தா கொஞ்சம் அடங்கும்னு ஒரு யோஜனை தோணித்து."

கூந்தலின் சிடுக்கைப் போலவே மாமியின் பேச்சும் தன் மனச் சிக்கலையும் நீவிப் பிரித்து விட்டது போலத் தோன்றியது.

எம்.எஸ்ஸி. ஹோம் சயின்ஸ் படிப்பு பூர்த்தியாக இன்னும் மூன்றே மாதங்கள்தான். இந்த டிசம்பர் விடுமுறை சில நாட்களில் ஆரம்பமாகும். பதினைந்து நாட்கள் - ஜெய்ஸல்மர் போய் வந்தால் என்ன?

படிப்பில் இன்னும் மனம் ஒன்றவில்லை.

ஆசிரியைகளும் தோழிகளும் விவரம் புரிந்து தாங்குவதால் பிரச்னையில்லை.

ஆனால் எத்தனை நாட்கள் பிறரது பரிவில் வண்டி ஓடும்?

பிரச்னையில் மூழ்கிக் கிடக்காமல் 'தம்' பிடித்து மீள வகை பார்க்க வேணும் - அதற்கு இது நல்ல முயற்சிதான்.

ஆனால் அப்பாவால் இரண்டு நாள் பயணத்தைத் தாங்க முடியுமா? தவிர பாலைவனத்தின் சூடும், மணற்தூசியும் இளைஞ்னான ராஜனுக்கே சேரவில்லை... அடுக்கடுக்காய்த் தும்மல், காய்ச்சல் என்று அவதிப்பட்டு, பிறகுதானே ரவிசந்திரன் வீட்டில் போய்த் தங்கினான்?

அது வம்பை விலை கொடுத்து வாங்கியதாகவே ஆனது.

அப்போதே ராஜன் முழுவதுமாய்க் கொள்ளை போய்விட்டான்.

"என்னடி... கூரைய மேயற?"



தலையசைத்தாள்.

"நல்ல யோசனைதான், மாமி. ஆனா போக வர நாலு நாள் பிரயாணம். நடுவே பத்து நாள் அங்க மொழி புரியாத பாலைவனத்தில்... ம்ஹூம்."

"கிழவியாட்டம் பேசாத, குழந்தே."

"அப்பாவால முடியாதே. அவங்களுக்கு அல்சர். வேளா வேளைக்குப் புளிப்பு, காரம் அதிகம் சேக்காம சாப்பிடணும். அங்க கிடைக்குமா? போன புதுசில் ராஜனுக்கே அந்த சீதோஷணம் சேரலை - உடம்புக்கு வந்து கஷ்டப்பட்டவன் நம் தமிழ் ஆள் - ரவிசந்திரன்னு ஒருத்தர் வீட்டுக்குப் போனபிறகுதான் தேறினான். நமக்குப் புது விலாசம் தெரிவிக்கையிலேதான் ராஜனுக்கு உடம்பிற்கு வந்த விவரமே நமக்குத் தெரியும்."

"ஆங்... அந்தத் தம்பிதான் விபத்தின்போது அத்தனை ஒத்தாசையும் செய்தது. ஆனா ஒன்னை யோசிக்கலை நான். அங்க போனாலும் கேரியோட நீ பாலைவனத்திலயா தங்க முடியும்? ரவிசந்திரன் ஆத்திலதான் தங்கியாகனும். அங்கதான் அந்தப் பொண்ணும் இருப்பா! அதாவது தன் அண்ணா ஆத்திலே!"

"ம்ம்... பானுமதி."

"நா மதியம் உக்காந்து தமிழ் படம் பாக்கறச்சே உங்கன்னா ராஜன் கேலி பண்ணுவன். 'ஹூம்... பாத்த க்ஷணமே காதல், பிறகு ஊடல், கல்யாணங்கற இந்தக் குப்பையெல்லாம் பார்த்துப் புத்தியை மழுங்கடிச்சுக்காதீங்கோ மாமி!'ம்பன். அவன் இப்படிப் 'பொசுக்கு'னு ஒரு பொண்ணு மேல ஆசை வைப்பான்னு யார் நினைச்சா?"

"அங்க போனால் பானுமதியைப் பார்க்கலாமில்லையா?"

"அதத்தான் சொல்ல வரேன். நீ ஒண்டி ஆம்பளையோட அதான் அந்த கேரியோட தங்க முடியுமோ? பானுமதி ஆத்திலதான் தங்கியாகணும்."

"அப்படின்னா... வேணாம் மாமி."

ராஜன் வடக்கே போன நான்காம் மாதமே தனக்கும் பானுவுக்கும் ஏற்பட்ட காதலைப் பற்றி எழுதிவிட, வீட்டில் பூகம்பம் வெடித்துப் பொங்கி வழிந்தது. அப்பா அதிகம் பேசவில்லை. குதித்ததெல்லாம் ராகினிதான்.

"மூணே மாசத்தில், திரும்பி வரேன்னுட்டு இப்ப ஐயா செய்தி அனுப்பறார். என்ன ஒரு இது? நேரே வந்து தன் காதல் கத்தரிக்காயைக் கடை விரிக்கட்டுமே? அதென்ன எழுதி விடறது? லேசான விஷயமா இது? நீங்க சுளுவாய் அனுப்பினீங்கல்லப்பா, அதுதான் இந்தத் திமிர் - வந்து விவரம் சொன்னால் யாரு வேண்டாங்கறாங்க?"

அன்பு கலந்த ஆற்றாமையில் குதித்ததுதான்.

அண்ணனுக்குச் சூடாகப் பதில் எழுதினாள் - பிறகு வேறு வழியின்றி மனதைத் தேற்றிக் கொண்டாள்.

அவர்களின் பாசச் சுவரில் அது ஒரு மயிரிழை விரிசல்தான்.

அண்ணனது பரீட்சை சமயங்களில் இவளும் கண் விழித்திருப்பாள். அவனுக்கு அவ்வப்போது தேநீர் போட்டுத் தந்துவிட்டு, ஏதேனும் வாசித்தபடி இருப்பாள்.

"ஒரு மணி வரையெல்லாம் கண்ணு விழிச்சா நாளை வகுப்பிலே தூங்கி விழுவே. ராக் - போய்ப் படு."

"ம்ஹூம் - மதிய வகுப்பில் ஒரு தூக்கம் போட்டிருவேன்."

"அடடே - அதுதான் உங்க செழிப்பான உடம்பின் ரகசியமா? தூங்கத் தூங்க... உப்பும்!"

"ச்சே! நன்றியில்லா ஜென்மமப்பா!" - என்று எழுபவள் கூடவே அவனையும் படுக்க எழுப்பிவிட்டு விடுவாள்.

அவன் தனது பற்பசை, சோப்பு, கைக்குட்டை, உடை, ஏன் உள்ளாடைகளைக்கூட வாங்கினதில்லை - அத்தனையும் ராகினியின் பொறுப்புதான்.

"சாக்ஸ் துவைச்சு எத்தனை நாளாச்சு?"



"ஒரு... ஒரே வாரந்தான்!" - சிரிப்பான்.

"பாவம், அப்பா - அவர் அறையை இப்படி நாறடிக்காதயேன்! துவைச்சுப் போடறது."

"இருக்குது ரெண்டே ஜோடி."

மறுநாளே மேலும் சில ஜோடி காலுறைகளை வாங்கி வைப்பாள். வீட்டில் துளி அழுக்கிராது. அம்மாவின் படத்தில் எப்போதும் ஒரு கண்ணி வாசனை மல்லி. அப்பா சாப்பிட முடியாதென்றாலும் ராஜனுக்குப் பிடித்த மசாலா சாப்பாட்டை மெனக்கெட்டுத் தனியே சமைத்துப் பரிமாறுவாள். அந்தப் பாசத் தங்கை.

அவனும் தங்கை மேல் உயிராய்த்தான் இருந்தான். ஆனால் இப்படி ஒரு பெண்ணைப் பார்த்ததும் விழ வேண்டுமா? மூன்றே மாதங்களில் இவள்தான் என் வாழ்க்கைத் துணைவி என்று முடிவை எடுக்க வேணுமா? எடுத்தால் நேரில் வந்து குடும்பத்திடம் சொல்வதற்கென்ன?

அப்படியென்ன பானுமதியில் கண்டான்?

புத்தி குறுகுறுத்தது - ஜெய்ஸல்மர் போய் வந்தால்தான் என்ன?

மாமி பின்னலில் செருகிவிட்ட பூவின் மணம் இதமாய்ப் பரவியது. "கேரியாவது ராஜனோட படிச்சவர் - இவனைவிட ஸீனியராம். ஆனா ரவி யார்னே தெரியாது. மாமி - ஒரு மூன்றாம் நபர். அவரின் வீட்டில் எப்படிப் போய்த் தங்கறது?"

"ராஜன் அவன் தங்கை பானுவைக் கல்யாணம் கட்டியிருந்தால் நெருங்கின உறவாகியிருப்பேன் - அத்தனை செலவு பண்ணி ராஜனின் சடலத்தை ப்ளேனில் அனுப்பி வைச்சவர் இவர்தான. அதுக்கான பணத்தைக்கூட வேண்டாம்னுட்டார். பெருந்தன்மை. ரெண்டொரு தடவை ஃபோனும் பண்ணினாராமே..?"

"ம்ம்..."

"கிளம்புடியம்மா - உங்கப்பாவின் அல்சரை நாம் பார்த்துக்கறேன் - பால் காய்ச்சி, சாதம் வடிச்சுப்பரே! பிறகென்ன?

மித்ததெல்லாம் எம் பொறுப்புனு விடு. எங்காத்துக்கு மேல் வேலைக்கு வர்ர வள்ளியையே உங்களாத்தையும் கூட்டித் துடைச்சுடச் சொல்றேன் - துணியையும் தோச்சுப் போடுவா..."

"நன்றி மாமி - ஆனா அப்பா சம்மதிக்கனுமே?"

"லேசுல சம்மதிக்க மாட்டார். அங்க போன பிள்ளை ஒரேயடியாய்ப் போயிடுத்து - இப்ப பொண்ணுமான்னுதான் பெத்த வயறு பதறும்."

"அப்ப நா போகலை."

"உனக்குள்ளே ஊஞ்சலாட்டம். இல்லியா? பாதி மனசு போகலாங்குது?"

"ம்... விடுமுறை சமயம் - அண்ணியாய் வந்திருக்க வேண்டியவளைப் பார்க்கலாங்கற ஆசை. ராஜன் கடைசி நாட்களில் பார்த்துப் பழகின இடம். ஆட்களைப் பார்த்தால் எம் மனசாறுமோங்கற ஒரு ஆசை."

"அப்பாவை மொள்ள சமாளிப்போம். அம்மி போல ஒவ்வொரு அடியா அசைச்சு எடுப்பம். நீ ரயில் டிக்கெட் கிடைக்குதான்னு பாரு - விடுமுறை சமயம். ஆக அதாம் மொத வேலை."

இதுபற்றிப் பேச்சு எடுத்ததுமே அப்பா உடைந்து போனார். அவர் எகிறி உதைக்கும் ரகமில்லை. ஆனால் அவர் குன்றிச் சோர்வதைப் பார்க்க மனமில்லை -

"சரிப்பா வேணாம் - நான் போகலை..."

## 3

மறுவாரம் ரயிலில் பெட்டி. பையை ஏற்றிக் கொண்டிருந்த வளுக்கு நம்பத்தான் முடியவில்லை.

சில நாட்களில் எப்படி அப்பா மனம் மாறினார்?



மாமி வலுவாகச் சொல்லியிருக்க வேண்டும்.

இங்கு துக்கத்திலும், நான்கு சுவர்கள் இடையேயும் அடைந்து கிடக்காமல் போய் வருவது மகளுக்குத் தேவையான மாற்றம் என்பது அப்பாவுக்கும் புரிந்திருக்க வேண்டும்.

தன்னைவிடப் பிறரைப் பற்றி யோசிக்கும் ரகம் அவர்.

ஆக அவரே வந்து பேசினார்.

"போயிட்டு வாம்மா ராகினி. ரெண்டு வாரம்தான். நானே அந்த ரவிசந்திரனுக்கும் கேரிக்கும் எழுதிப் போடறேன்."

"நீங்க வர முடியுமாப்பா - இஷ்டப்படறீங்களா?"

"இல்லம்மா - அந்த ஊருக்குப் போய் வர்ற வலு எம் மனசுக்கும் இல்லை, உடம்புக்கும் இல்லை."

"கீறிவிட்டா புண் சீக்கிரம் ஆறிடும்னு..."

"மாமி எங்கிட்டேயும் அப்படிச் சொன்னாங்க. ஆனால் கீறி விடற வேதனையைத் தாங்கவும் ஒரு தெம்பு வேணுமே. உனக்கது இருக்குது - போயிட்டு வா. வந்து ஊரு, கேரி, ரவி, அந்தப் பொண்ணு பானு பற்றி எல்லாஞ் சொல்லு. ரவி தன்மையாப் பேசினார் - எழுதினார். உறவாகியிருக்க வேண்டிய குடும்பம். ஆக நீ போய் வர்ரது தப்பில்லை - ஒருவருக்கொருவர் ஆறுதலாய் இருந்து வாங்க."

நான்கு நாட்கள் போகவும் ரயிலில் வரவுமாய்க் கழிக்க வேண்டுமே என்று புத்தகங்களோடுதான் போனாள். 'லக்ஷ்மி'யின் கனத்த நாவல், சில சிறுகதைத் தொகுப்புகள் என்று.

ஆரம்பித்த நாவலின் கால் பாகம்கூட எட்டவில்லை.

ரயில் பிரயாணத்தின் சுவாரஸ்யம் அப்படி.

பல மணி நேரம் ஒன்றாய் இருக்கப் போகிறோம் என்ற உணர்வில் உற்சாகமாய் அறிமுகங்கள் நடந்தன.

"எங்கேயிருந்து?"

"எந்த ஊர் நோக்கி?"

"பெயரென்ன? தொழிலென்ன?"

"போகும் நோக்கம்?" என்று கேள்விகளால் 'சளசள'வென்ற பேச்சு. ராகினிக்கு எப்போதுமே மொழித் தகராறு.

ஐந்து வயதில் தன் பரிச்சயமான தமிழும் ஆங்கிலமும்தான் சரளம். பிறகு கற்க முயன்ற மொழிகள் சண்டித்தனம் செய்தன - அல்லது இவள் மூளைதான் முரண்டியதோ!

இவள் சங்கடம் புரிந்த சக பயணிகள் சிரமப்பட்டுத் தங்களுக்குத் தெரிந்தவரை ஆங்கிலம் கலந்து தோரணம் கட்டினர்!

ஜெய்ஸல்மரில் தங்கள் குடும்ப நண்பர் இருப்பதால் அங்கு போவதாகச் சொல்லிக் கொண்டாள்.

"கண்டிப்பாய் ஸாம் போவீங்கல்லியா?"

"அதென்ன?"

"பாலைவனப் பகுதி - கண்ணுக்கெட்டின தூரம் வரை தங்க மணற்பரப்பு."

"ஒட்டகச் சவாரி பலே ஜோராய் இருக்கும்."

"படிக் கிணறுகள் உங்களை ஆச்சரியப்படுத்தும். நூற்றுக்கணக்கான கலைநயமான படிகளில் கீழிறங்கிப் போனால் பளிங்குத் தண்ணீர் ததும்பும் கிணறு இருக்கும்." -

என்று ஆளாளுக்கு ஒவ்வொன்று சொன்னார்கள். இவள் கட்டிப் போயிருந்த இட்லி, புளியோதரை 'பிரமாதம்' என்று புகழப்பட்டன.

மசாலா ரோட்டி, சப்ஜி, நெய் இனிப்புகள் என்று இவளுக்கும் விதவிதமாய் ஈயப்பட்டுக் கொண்டே இருந்தது.

இடையிடையே காற்று ஊதிய தலையணையும் போர்வையுமாய் நன்கு உறங்கினார்கள். ரயிலின் தாலாட்டு அலாதி சுகம்.



அத்தனை பேரின் பேச்சும் சிரிப்பும் எங்கோ குகைக்-குள்ளிருந்து கேட்பது போலிருக்க, அதன் நடுவே தூங்கியதில் ஒரு பாதுகாப்பு உணர்வும்கூட.

எழுந்து முகம் கழுவி வரும்போதெல்லாம் இவளுக்குச் சூடான 'சாய்' காத்திருந்தது.

"உங்க ஊரைப் போல இங்கே காபி நல்லாயிருக்காது. 'சாய்'தான்."

"பாலைவனப் பிரதேசம் என்றாலும் இரவில் கடுமையாகக் குளிரும் - ஸ்வெட்டர் இருக்குதா?"

"2 சீட்டுக் கட்டிலே 'கழுதை' ஆடறோம் - வாம்மா!" என்று அன்பான தோழமை.

அத்தனையையும் ரசித்து அனுபவித்தாள்.

மாற்றம் நல்லதுதான் - அப்பாவும் வந்திருக்கலாம்.

முற்றிலும் அறிமுகமில்லாத சக பயணிகள் இத்தனை இயல்பாகப் பழகும்போது அங்கு கேரியும் ரவிசந்திரனது குடும்பத்தினரும் இதமாய்ப் பழக மாட்டார்களா என்ன?

பத்து நாட்களின் முடிவில் ஒருவேளை பானுமதி தன்னுடன் சென்னை வரப் பிரியப்படலாம் - அப்பாவைப் பார்க்க, தான் மணக்க இருந்த ராஜனின் வீட்டில் சில நாட்களேனும் தங்கலாம் என்ற ஆசையுடன் கிளம்பலாம்... கூட்டி வர வேண்டும்.

சென்னையின் கடற்கரையை, அதன் கரையெங்கும் முண்டியடிக்கும் மனிதத் திரளை, நல்லி, குமரன் கடைகளை எல்லாம் சுற்றிக் காட்ட வேணும்.

கோயில்களும்தான் - ஆலயப் படிகளேற ஏறத் துயர் வெகுவாய் இறங்குமே.

ராஜனுக்கு 25 வயதுதான் - அப்படியானால் பானுமதிக்கு 20 அல்லது 21 தானிருக்கும் - தன்னை ஒத்த வயசு.

செல்வத்தில் வளர்ந்தவள் அவள் - அவள் குடும்பம் அயல் நாட்டிற்குமே ராஜஸ்தானின் பிரத்தியேக 'சான்ட்-ஸ்டோன்'களை ஏற்றுமதி செய்பவர்கள் - இந்தியாவிற்கும் சப்ளை அவர்கள் தானாம். வடக்கே மூன்றாம் தலைமுறையாக வாழும் தமிழர்கள். பழைய அரும்பொருட்களை விற்கும்'ஹவாலா' எனப்படும் கடையும் உண்டாம்.

முதல் சில கடிதங்களில் ராஜனின் கடிதங்கள் ரவிசந்திரனுக்கு 'ஆஹா ஓஹோ' என்று கொடி பிடித்தன - பிறகுதான் குட்டு வெளிப்பட்டது. 'அவரின் ஒரே தங்கை பானுமதியை நான் விரும்புகிறேன் - கல்யாணம் செய்ய நிச்சயித்திருக்கிறேன்' என்றபோது -

'ஊரின் உபகாரி'

'அத்தனை பணமிருந்தும் துளி கர்வம் கிடையாது'

'உள்ளூர் பள்ளி சங்கங்களின் ஆலோசகர்'

'வியாபாரிகளின் நடுவே உன்னதமான பெயர்' - இப்படியெல்லாம் தன் அண்ணன் பாராட்டிய ரவிசந்திரன் ரயில் நிலையத்திற்குத் தன் தங்கையுடன் வருவாரோ?

ராஜன் இறந்த மூன்றாம் நாள் மறுபடி இவர்களைத் தொலைபேசியில் ரவிசந்திரன் தொடர்பு கொண்டபோது இவள் பேசியதுண்டு -

மிக ஆழ்ந்த குரல் -

தங்கை பானுவிற்கு ராஜனின் மரணம் பெரிய அதிர்ச்சி என்பதால் தான் அவளைத் தனியே விட்டு விட்டுச் சென்னை வர முடியாததற்காய் வருத்தம் தெரிவித்தார்.

இத்தனை நாள் இழந்த சகோதரனைப் பற்றி மட்டுமே நினைத்தாள். இப்போது மற்றவர்களைப் பற்றியும் யோசிப்பது புரிந்தது ராகினிக்கு. கேரியுடன் தான் இணைந்து எடுத்துக் கொண்ட சில புகைப்படங்கள் ராஜன் அனுப்பியதுண்டு. ஆக வரவேற்க ரயில்



நிலையத்திற்கு வரும் கேரியை அடையாளம் காணுவதில் சிரமம் இராது - ஆறடி உயரமும் தந்த நிறமும் முறுக்கு மீசையுமாய் நிற்பவனை அதிகாலை அரையிருட்டிலும் அடையாளம் கண்டு கொள்ள முடியுமென்றுதான் தோன்றுகிறது.

ஒன்றரை நாள் பயணத்திற்குப் பிறகு இரவு வேறு ரயில் மாறினாள். ஜோத்பூரிலிருந்து ஜெய்ஸல்மருக்கு ஒரு இரவுப் பயணம்தான். இங்கு சக பயணிகள் படுத்துத் தூங்கினால் போதும் என்ற மனநிலையில் இருந்தனர். வாங்கி வந்த அல்லது கட்டிக் கொண்டு வந்த உணவை விழுங்கி விட்டு, கண்ணாடி ஜன்னல்களை இழுத்துச் சாத்திவிட்டுப் போர்த்திச் சுருண்டு விட்டனர்.

கடுங்குளிர் - காற்றைக் கிழித்துக்கொண்டு ரயில் ஓடியதில் பல் கிடுகிடுத்துவிட்டது.

கண் விழித்தால், பல புது மனிதர்கள், அனுபவங்கள் காத்திருக்கும் என்ற நினைப்பில் தூக்கம் பிடிக்கவில்லை.

புரண்டு புரண்டு படுத்தவளைக் குளிர் கொத்தியது.

பெட்டிக்குள்ளிருந்து கம்பளிச் சால்வையை எடுத்துப் போர்த்திய பிறகுதான் சற்றுக் கண் செருகியது.

காலை விழிப்பு வந்தபோது ரயில் நின்றிருந்தது - பயணிகள் எல்லோரும் பெட்டிகளுடன் இறங்கிக் கொண்டிருந்தனர். இவளும் பதறிச் சுருட்டி எழுந்தாள்.

பருத்த பெட்டியைக் கன்றுக்குட்டியைப் போலத் தன்னுடன் இழுத்துக் கொண்டு கிளம்பிய வெள்ளைக்காரப் பெண்ணிடம் கேட்டாள் -

"இது என்ன ஊர்?"

"ஜெய்ஸல்மர்."

"ஐயய்யோ... தூங்கிட்டேன்."

"பதறாதீங்க - இதுதான் கடைசி நிறுத்தம். நிதானமாய் இறங்கலாம்."

"ஓ... நன்றி."

இறங்கியவர்களில் பல வெளி தேசத்தார்.

ஜீன்னும் முரட்டுக் கம்பளி கோட்டுமாய்த் தங்களின் ஓரிரு சுமைகளைத் தாங்களே இழுத்து அல்லது சுமந்தபடி வெளியேறினர்.

நம்மவர்கள் ஏழெட்டு உருப்படிகளுடன் போர்டர்களைத் தேடி, பின் மும்முரமாய்ப் பேரம் பேசினார்கள்.

வெளியே குளிர் உலுக்கியது.

காதோடு போர்த்தியவள் இருமருங்கும் பார்வையை ஓட்டினாள். சற்று நேரத்தில் பெரும்பான்மைக் கூட்டம் கரைந்து போனது. இவளைத் தேடி யாரும் தயங்கித் திரிவதாய்த் தெரியவில்லை.

இப்போது குளிரைத் தவிர, வேறெதோ தன்னை ஆட்டுவதாய்த் தோன்றியது - இத்தனை அதிகாலையில் தன்னை இங்கு வரவேற்க வருவது சிரமம்தான் - சற்றுத் தாமதம் ஏற்பட்டிருக்கும். தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொண்டவள்' ஒரு தேநீர் வாங்கிப் பருகினாள்.

பத்து நிமிடங்கள் கழிந்து, யாரும் தனக்காய் வரவில்லை என்பது நிச்சயமானதும் நிலையத்தின் வெளியே போய்நின்றாள்.

ஒருவேளை வாகனத்துடன், 'ராகினி' என்றெழுதிய அட்டையுடன் வந்து வெளியே நிற்கிறார்களோ?

அங்கும் ஏமாற்றம்தான்.

ஆக இவள் வருவதில் அவர்களுக்கு இஷ்டமில்லை - ஏன்? எதனால்... ராஜனின் மரணம் விபத்தில்லையோ?

ஒருவேளை கொல்லப்பட்டானா?

நடந்த சதியை மறைக்கப் பார்ப்பவர்களுக்கு இவளின் வருகை தொல்லைதான்.

இதயம் படபடத்தது.



அப்படியானால் ஏன் வருந்தி, 'வா' என்று அழைக்க வேண்டும்?

ஒரேயடியாய்க் கற்பனை செய்வதும் தவறு - கடிதங்கள் அவர்களைச் சென்று அடையாமலும் இருக்கக்கூடும்.

புத்தி - 'இது சாத்தியம்' என்று சொல்ல, ஆட்டோ ஒன்றை அழைத்தாள்.

## 4

அரைவட்டமடித்து இவளருகே நின்றது ஆட்டோ. இறங்கிய டிரைவரைப் பார்த்து மிரண்டாள் ராகினி. ஆறடியை மீறிய உயரம். பெரிய மீசையும் கலைந்த கேசமுமாய் முரடனாய்த் தெரிந்த இளைஞன்.

அவசரமாய் ரவிசந்திரனின் விலாசத்திற்காய்த் துழாவினாள். தன்னை அழைத்துப் போக ஆள் வருவார்கள் என்ற நிச்சயத்தில் அவள் விலாசத்தை ஒருமுறைகூட வாசிக்கவில்லை - நல்ல வேளை கைப்பையினுள் வைத்திருந்தாள்.

எடுத்து நீட்டினாள்.

உதட்டைப் பிதுக்கினான்.

என்ன சொல்கிறான்?

'ஆட்டோ இங்கெல்லாம் வராது என்றா?'

பரிதாபமாய் அவனை ஏறிட்டாள்.

"ஆங்ரேஸி மாலூம் நை" என்றவன் விலாசத் துண்டினை அவளிடமிருந்து பறித்துக் கொண்டு போனான்.

ஆஹா - ஆங்கிலத்தில் எழுதியிருந்த விலாசத்தைப் படிக்கத் தெரியவில்லை. அவ்வளவுதான்.

ஆனாலும் போக வேண்டிய பகுதி எங்கிருக்கிறது - எத்தனை தொலைவு என்பதுகூடத் தெரியாமல், தனியாக இந்த அரவமில்லாத அகால வேளையில் ஆட்டோவில் போவது சரியா?...

வேறு வழியுமில்லை.

இரண்டாம் நிமிடம் ஓடி வந்த ஆட்டோ டிரைவரின் முகத்தில் பெரிய சிரிப்பு. இவள் பெட்டிகளை லாவகமாய்த் தூக்கி வாகனத்துள் வைத்தவன் அவளை ஏறி அமரச் சொன்ன விதத்தில் பணிவு தெரிந்தது.

அவன் பேசியதில் முன்னே சொற்களின் அர்த்தம் புரிந்தது - 'ஸாப், கர், தஸ் மினிட்' - பத்து நிமிடங்களில் போக வேண்டிய வீட்டிற்குப் போய் விடலாம் என்பதைப் புரிந்து கொண்டாள்.

குளிர் காற்றைக் கிழித்துக் கொண்டு தடதடத்த ஆட்டோவில் இறுகிக் குறுகி அமர்ந்திருந்தாள்.

திடீரென நிச்சயிக்கப்பட்ட பயணம், எதிர்பாராத ஆரம்பம் இன்னும் என்னென்னவோ - உடனே ஊர் திரும்பப் பயணச் சீட்டு கிடைக்குமா?

ஒருவேளை இங்கு இருவரும் ஊரில் இல்லையோ? வெளியூர் பயணமோ? பகீரென்றது.

அவர்களிடமிருந்து பதில் வராமல் தான் கிளம்பியது முட்டாள்தனம். ஜெய்ஸல்மரின் தொலைபேசி எண்ணும் இவர்களிடம் இல்லாததால் வெறும் கடிதத் தொடர்புதான் - இப்போது போகும் வீட்டில் யாரும் இல்லை என்றால்...?

ஊசிக் குளிரிலும் ராகினிக்கு வியர்த்தது.

நடமாட்டம் சற்றுக் குறுகிய தெருக்கள் - நிறைய நாய்கள் விச்ராந்தியாய்ப் படுத்துக்கிடந்தன. சில பகுதிகளில் பன்றிக் கும்பல்.

பல திருப்பங்களில் வளைந்து போன ஆட்டோ வேகம் குறைந்தது. காக்கித் துணி மறைப்பை விலக்கி வெளியே பார்த்தவளின் விழிகள் விரிந்தன.



சந்தன நிறத்தில், உயரமும் அம்சமுமாய் வேலைப்பாடுகளுடன் நின்றிருந்தது ஒரு கட்டிடம்.

பணிவாய் இவளை இறங்கச் சொன்னவன், பெட்டிகளையும் இறக்கி வைத்தான். பின் ஓடிப் போய் வாசற்படியேறி அழைப்பு மணியை அழுத்தினான்.

வாய் உலர்ந்து விட்டது ராகினிக்கு.

சில விநாடிகளில் வீட்டினுள் 'பட்பட்'டென விளக்குகள் உயிர் பெற, இவளுக்குள் மரத்தாற் போலிருந்த கால்களை இயக்கிப் படியேறினாள்.

கதவைத் திறந்தவள் பணிப்பெண் போலிருந்தாள்.

"கோன் ஹை?"

ஓட்டுனரும் அவளும் சற்று நேரம் இந்தியில் பேசிய பின், அவள் ராகினியை ஏறிட்டாள்.

"திரு.ரவிசந்திரனைப் பார்க்கணும் - தமிழ்நாட்டிலிருந்து வரேன் - வர்ரதா கடிதம் போட்டிருந்தேன்." இவள் ஆங்கிலத்தில் விளக்க,

"ஏக் மினிட்," என்று உள்ளே ஓடியவள் சற்றுநேரத்தில் மற்றுமொரு பெண்ணுடன் வந்தாள்.

"யாரம்மா, வாங்க - ஐயாவைப் பாக்கணுமா?" கணீரென்று விசாரித்த தமிழ்க் குரல் இவள் வயிற்றில் பாலூற்றியது.

"ஆமா... நான் ராகினி. ராஜனுடைய தங்கை. சென்னையிலிருந்து வரேன். வருவதாய்க் கடிதம் போட்டிருந்தேன்..."

"வாங்க. தனூர்! அம்மாவின் பெட்டியை உள்ளே எடுத்துப் போ ஆட்டோ, எவ்வளவாச்சப்பா?"

"இல்லையில்லை. நாங் கொடுத்துடறேன்."

"ஐயா கோவிச்சுக்குவாங்கம்மா!" என்றபடி இடுப்பின் சுருக்குப் பையைத் திறந்து விட்டாள் அவள்.

ஆட்டோக்காரன் இவளிடம் ஒரு பெரிய சலாமுடன் விடைபெற்றுக் கொண்டான்.

"அவர்... அவங்க இருக்காங்கல்ல?"

"ஆமாம்மா. ஆனா விருந்தாள் வர்ரதாய் எங்ககிட்டே சொல்லலை. அதான் ஏன்னு புரியலை. உங்க கடிதாசி கிடைச்சிருக்காதோ?"

சற்றுத் தனக்குத் தானே பேசியபடி நடந்தவளைப் பின் தொடர்ந்தாள் ராகினி.

அகலம் அதிகமின்றி சற்று நீளவாக்கில் நெடுகக் கட்டப்பட்ட வீடு. பழமையும் புதுமையும் கலந்து தனிக் கவர்ச்சியுடன் இருந்தது.

அதிக அலங்காரப் பொருட்கள் இல்லாவிடினும் கம்பீரமான நேர்த்தி. வலது புற அறை ஒன்றைத் திறந்து விட்டவள்,

"இது விருந்தாளி அறைங்கம்மா - படுங்க. குளிர்காலத்தில் ஏழு மணிக்கு முன்ன யாரும் இந்த ஊரில் எழுந்துக்கறதில்லை - நான் இங்கே வேலை பார்க்கறேன். சமையல், வீட்டுப் பொறுப்பெல்லாம் என்னுது. ரவி தம்பியோட அம்மாகிட்டேயிருந்து வேலையெல்லாம் பழகினேன். அவங்க இறந்தபிறகு எல்லாப் பொறுப்பும் எங்கிட்டதான் - பொறுப்பாய்ப் பார்த்துக்குவேன் - நல்ல குடும்பம்மா இது - அதுக்கேத்த விசுவாசத்தோட நாம இருக்கணுமில்லை?"

"உங்க பேர்?"

"பரிமளம். எனக்கு மதுரைப் பக்கம் - ஆனா இங்க வந்து அதாச்சு இருவத்தஞ்சு வருஸம்."

அறைக்குள்ளிருந்த குளியலறைக்குள் போய் வந்தாள். "கீஸர் போட்டிருக்கேம்மா - படுத்து எழுந்து பிறவு குளிங்க - பிரயாண் அலுப்பிருக்குமில்ல - இப்ப சாய் கொண்டாரவா?"

"இல்ல... முதல்லே அவரைப் பார்த்துடறேனே."



"முதல்ல சூடா ஏதும் குடிங்கம்மா. இல்லைன்னா ஐயா என்னைத்தான் கோவிச்சுக்குவாங்க."

"ம்ம்.. சரி."

கேட்ட தமிழும், உபசரிப்பும் இதமாயிருந்தன.

முகம் கழுவி, பல் விளக்கியவள், தலைமுடியைப் பிரித்துச் சிக்கெடுத்தாள் - எண்ணெயிட்டபோது மாமியின் நினைப்பு வந்தது. அப்பா நினைப்புதான் சதா உள்ளோடுகிறதே...

குளியலறைக்குள் மிருதுவான துவாலைகளும், வாசனை சோப், பவுடர் என்று எதற்கும் குறைவில்லை.

தலைக்கு ஊற்றினால்தான் சுத்தமான உணர்வு மீளும்.

மாற்றுடை எடுத்து வைத்தாள்.

பரிமளம் சிறு மரத் தட்டோடு அறைக்குள் நுழைந்தாள்.

சற்றுப் பருத்த குட்டையான உருவம் - உருண்டை முகத்தில் பாசமும் பணிவும் கலந்த புன்னகை.

காபியின் நறுமணம் சுகமாய்க் கிளம்பி அறைக்குள் பரவியது.

"டீ கொண்டு வர்ரேன்னு போனீங்க?"

"அப்புறந்தான் நீங்க நம்ப பக்கத்து ஆளுன்ர நினைப்பு வந்துச்சும்மா. காபி கலந்துட்டேன் - சரிதானா?"

"சரிதான் - நன்றி."

"பிஸ்கட் எடுத்துக்கோங்கம்மா."

"இப்ப எதுக்கு?"

"பிரயாணத்தில் சரியாய்ச் சாப்பிட்டிருக்க மாட்டீங்க."

"அப்படியில்லை... இது... இந்த அறையிலா எங்கண்ணன் தங்கியிருந்தான்?"

"இல்லம்மா - அவர் உள் பக்க அறையிலே தங்கியிருந்தார். இது வந்து போற விருந்தாட்களுக்கு."

"ப்ரமோத் கேரி ஊரிலேதான் இருக்காரா?"

"இருக்காரும்மா. நேத்துகூட வந்திருந்தாரே."

அப்படியானால் இருவருக்கும் கடிதம் வந்து சேரவில்லை போலும் - கடிதம் கைக்கு வருமுன் இவள் வந்துவிட்டாள்!

அருமையான காபி -

சரியான சூடு, இனிப்பு, சுவையுடன் - ரசித்துப் பருகினாள்.

"குளிச்சிட்டு வந்துடறேன்."

"சரிங்கம்மா."

சற்று நேரம் உடலை நீட்டிய பின், குளித்தாள்.

பதமான வெந்நீரில் அலுப்பும் அழுக்கும் போகக் குளித்த பிறகு மனமும் சற்றுத் தெளிந்திருந்தது.

ரோஜா நிற ஆர்கண்டி புடவையைக் கட்டியவள் தலைக்குச் சுற்றியிருந்த துவாலையைப் பிரித்துக் கோதி ஆற்றினாள்.

முகத்தில் துளி 'க்ரீம்' இட்டு நீவி, நெற்றியில் சாந்திட்ட சமயம் கதவு தட்டப்பட்டது.

"தோ வரேன்."

தட்டியது ரவிசந்திரனாக இருக்கலாம் என்பது தெரிந்திருந்தும்கூட கதவைத் திறந்தவள், சற்று விக்கித்து நின்றாள்.

"வாங்க! நான் ரவிசந்திரன்." கை குவித்தான்.

இயந்திரமாய் இவளும் வணங்கினாள். இத்தனை இளைஞனாய் இருப்பான் என்று ஏனோ எதிர்பார்க்கவில்லை. ஊரின் பெரிய மனிதர் என்ற ரீதியில் ராஜன் எழுதியிருந்ததால் நடுத்தர வயதில் இருப்பவர், தங்கையை விட வயதில் மிக மூத்தவர் என்றொரு அனுமானம்.

"நா..நான் ராஜனுடைய தங்கை ராகினி."

"ம்ம்.. பரிமளம் சொன்னாங்க - உக்காருவோம்..."

அவள் அறையுள் மிக இயல்பாக நுழைந்தவன் சுவரின் ஓரமாய்க் கிடந்த நாற்காலியில் அமர்ந்தான். எதிர் இருக்கையில்



இவள் அமரும்வரை ஏதும் பேசவில்லை. ஆனால் கூர்ந்து பார்த்தான்.

நல்ல உயரமானவன். அமர்ந்து நீள நீட்டியிருந்த கால்களை மட்டுமே இவள் பார்த்தாள்.

"ஆக, நான் அனுப்பின தந்தி உங்களுக்குக் கிடைக்கலை - இல்லியா?"

"ஆங்... என்ன... அப்படீன்னா என் அப்பாவின் கடிதமெல்லாம் உங்களுக்குக் கிடைச்சுதா?"

தலையாட்டியவன் தனது நீள விரல்களை ஆராய்ச்சி செய்வதுபோலச் சில கணங்கள் பார்த்திருந்தான்.

"ஆமா... எவ்வளவோ முயன்றும் தொலைபேசி மூலம் உங்ககிட்ட பேச முடியலை. நான் முன்னே உங்களைத் தொடர்பு கொண்ட அதே எண்தான் - எண் மாறிடுச்சா... இல்லை இணைப்பு பழுதான்னு புரியலை..."

இவளும் விழித்தாள்.

"ம்ம்... ஆமா... மாமி வீட்டு ஃபோன் அது. நாலு நாளாய் வேலை பார்க்கலைன்னாங்க - என்ன தந்தி?"

"நீங்க இப்ப இங்கே வர வேண்டாம்னு தகவல் தந்திருந்தேன்."

குன்றிப் போனாள்.

இது சர்வ முட்டாள்தனம்

ஏதோ உரிமையுள்ளவன் வீடு போல எழுதிப் போட்டுவிட்டுக் கிளம்பி வந்தது மகா தப்பு! இப்போது முகமறியாதவன் வீட்டில் அவன் சம்மதமுமின்றி எப்படித் தங்குவது?

"மன்னிக்கணும் - தப்புதான். எப்படியாவது எனக்குச் சென்னைக்குத் திரும்ப ஒரு டிக்கெட் வாங்கிட முடியுமா?"

கேட்ட அவளது உதடுகள் சன்னமாய் நடுங்கின.

# 5

ஒரே விநாடியில் சுண்டிப் போன அந்த இளம் முகத்தை, நடுங்கிய இதழ்களைப் பார்த்திருந்தான்.

"வர வேண்டாம்ன காரணத்தை நீங்க முதல்ல தெரிஞ்சுக்கணும்."

"ம்ம்..."

"பானுமதி இப்ப இங்கே யில்லை. அதாவது இந்த வீட்டிலில்லை."

கேள்வியோடு நிமிர்ந்தாள்.

"இன்னும் மருத்துவ மனையிலிருக்கா..."

"இன்னும்னா... ரெண்டு மாசமாவா? அவங்களுக்கு என்ன?"

"ராஜனுக்கு ஏற்பட்ட விபத்து எல்லாருக்கும் அதிர்ச்சிதான். உங்களைப் போல பானுவும் தனக்கு நேர்ந்த இழப்பாய் எடுத்துகிட்டா - அவளால தாங்க முடியலை. தூங்க முடியலை. சாப்பாட்டை ஒதுக்கினா - பகலெல்லாம் புலம்பினா - ஆக எங்க மருத்துவரிடம் அழைச்சிட்டுப் போனேன். 'டிப்ரஷன்'னார் - மன நோய்க்கான மருத்துவம்தான் தேவை. ஆக மருத்துவமனையிலே - அதை அப்படிக்கூடச் சொல்ல முடியாது - டாக்டரோட விருந்தினர் விடுதின்னு சொல்லலாம் - அங்கே ஒரு மாறுதலுக்காய் அவளைத் தங்க வச்சிருக்கோம் - பானு கூடவே ஒரு முழு நேர நர்ஸ் நேரந் தவறாம மருந்து... இதமான பேச்சுன்னு துணை இருக்காங்க..."

"கேட்க வருத்தமாயிருக்குது..."

"உங்களைப்போல என்... எங்க இழப்பு முழுமையானதில்லை. ஆனால் இந்த வீட்டோட சந்தோஷம் போச்சு."

"நான் பானுமதியைப் போய்ப் பார்க்கவாமா?"



"வேணாம்னு நினைக்கிறேன்."

'ஏன்' என்பது போல மறுபடியும் அவனைப் பார்த்தாள்.

"உங்களுக்கு ராஜனுடைய சாயல் இருக்குது - பானு மறக்க நினைக்கறதை உங்க வரவு மறுபடி ஞாபகப்படுத்தும் - தவிர இந்த வீட்டில் பெண் துணை இல்லாம இருக்க முடியாதோ... முறையில்லையோன்னுதான் நான் தந்தி அடிச்சேன்."

"அது... தகவல் வரலை. நான் இப்படி திடுதிப்புனு கிளம்பினது சரியில்லை. கேரி தன் கடிதத்திலே இங்க வர்ரது ஒரு மாற்றமா யிருக்கும்னு... ஆறுதல்னு எழுதியிருந்தார்...!"

"உண்மைதான்."

"அவர் தனியாள் - அங்கே நான் தங்க முடியாதுன்னுதான்..."

"தனியாள் மட்டுமில்லை. அது பாலைவனப் பிரதேசம் - இதுபோல ஊரில்லை. கடைகண்ணி ஏதுங் கிடையாது. ஒட்டகங்கதான் உலவும்."

புன்னகைத்த அவன் முகம் மேலும் இளமையாய்த் தெரிந்தது. "இங்க பெண் வேலையாட்கள் உண்டு. பரிமளம் எங்க குடும்ப அங்கத்தினர் போலத்தான். ஆக நீங்க தங்க நினைச்சளவு தாராளமாய்த் தங்கலாம். கேரியிடம் உங்க வரவு பற்றி சொல்றேன்."

"பத்து நாள் கழிச்சு ஊர் திரும்ப டிக்கெட் எடுத்திருக்கேன்..."

"எத்தனை நாள்னாலும் பிரச்சனையில்லை..."

"ந...நன்றி."

சட்டென்று எழுந்து நின்றான். அவனும் குளித்து வெளியே போகத் தோதாக உடை மாற்றியிருந்தான்.

காபி நிறப் பருத்தி பேண்ட்டும் அதனுள் செருகிய வெள்ளை சட்டையும் அவன் கம்பீரத்துக்கு வெகு பொருத்தம்.

மாநிறத்தைவிடச் சற்றுக் கூடின நிறம் - திருத்தமான, கன்னிய முகம் - காந்தம் கவர்ந்த கண்கள்.

அவளிடம் மிக நாகரீகமாய்ப் பேசினான் என்றாலும் அவன் முகத்தில் ஒரு இறுக்கமிருந்தது.

வேண்டாமென்று விலக்க நினைத்த ஒரு தொல்லை நேரே தலையில் வந்து இறங்கிய அவஸ்தையோ?

சங்கடமாய் நெளிந்தாள் உள்ளுக்குள்ளே.

"சாப்பிட வர்ரீங்களா, ராகினி?"

"இல்லை... அப்புறமாய்ச் சாப்பிடறேனே!"

அவளை வற்புறுத்த வாயெடுத்தவன் பிறகு தோளை லேசாய்க் குலுக்கினான்.

"உங்க இஷ்டம். ஆனா நேரா நேரத்துக்கு கண்டிப்பாய்ச் சாப்பிடணும்."

"சரி... சரிங்க."

"மதியம் நான் இன்னைக்கு வீடு வர முடியாது. முக்கியமான ஒரு சந்திப்பு இருக்குது. வெளிநாட்டு வியாபாரிகள் வர்ரதால் ஒத்திப் போட முடியாது. வீடு திரும்ப ஏழாயிடும் - இரவு சாப்பாடு எட்டு மணிக்கு என்று வைப்போமா? முன்னே பின்னே... உங்களுக்கு எப்படி வேணுமோ சொல்லுங்க. அந்நேரம் சாப்பிடலாம்."

நாசூக்கும் நாகரீகமுமாய் இரவு உணவிற்கு அழைக்கிறான்.

மறுக்க முடியாது.

"சரி. எட்டு மணி சரியாயிருக்கும்."

"வீட்டைச் சுற்றிப் பாருங்க - ஓய்வெடுங்க. வீட்டின் பின்புறம் உள்ள தெரு சுவாரஸ்யமாயிருக்கும் - நிறைய அழகான வீடுகள். கட்டி 200 வருடங்களுக்கு மேலே ஆன கட்டிடங்க - ஆனா யாரும் வசிக்கலை - காலியாய் நிற்கும் - நிறையப் பேர் குஜராத், தமிழ்நாடுகூடப் போய்த் தங்கிட்டாங்க. இந்த வெக்கையை யாரும் விரும்பலை."



"காலைல ரொம்ப குளிருச்சு"

"இது மார்கழி மாசம் - கோடை இங்க கொடுமையாயிருக்கும்."

"ம்ம்... அண்ணன் அப்பத்தானே இங்க முதன்முறையா வந்தது?"

"ம்... வரட்டுமா?"

பேச்சைச் சட்டென்று அறுத்துக் கொண்டு போனது போலிருந்தது.

அவன் போனபிறகும் அவன் பேசினவற்றையே அசை போட்டாள்.

உட்கார்ந்து யோசிக்க சிந்தனை தறிகெட்டு வேகமெடுத்தது. பற்பல சிந்தனைகள். வேண்டாத விருந்தாளியாய் இங்கு பத்து நாட்கள் இருப்பது இக்கட்டான நிலைமைதான்.

தவிர இளைஞனான இவனுடன் இந்த வீட்டில் தங்குவது...?

பானுமதியைச் சந்திக்க முடியாது போலிருக்கிறதே?

கேரி வந்தால் தன் பிரயாணத்தைச் சற்று முன்னமே தள்ளிப் போடலாமா என்பது பற்றிப் பேச வேண்டும்.

முதலில் அப்பாவிற்குத் தான் பத்திரமாய் வந்து சேர்ந்ததைத் தெரிவிக்கணும். ரவிசந்திரனின் தந்தி வேறு அவர்கள் கைக்குக் கிடைத்து, குழம்பிப் போயிருப்பார்கள்.

பரிமளம் வந்து சாப்பிட அழைத்தாள்.

விவஸ்தையில்லாமல் பசித்தது.

ஆக பரிமாறப்பட்ட மசால்தோசை, உப்புமாவை நன்றாகவே சாப்பிட்டாள்.

"தினம் நம்ப ஊர் சமையல்தானா இங்கே?"

"ரவி தம்பிக்கு ஓட்ஸ் கஞ்சி, இல்லை மூணுதுண்டு டோஸ்ட் போதும்மா. உங்களுக்காகத் தோசை போட்டேன். தம்பி சேமியா உப்புமாவும் கிளறச் சொன்னாங்க..."

"ஓ... நல்லாயிருந்தது..."

"நீங்க ஊருக்குப் ஃபோன் போடணும்னா இங்கேயிருந்தே பேசச் சொன்னாங்க, தம்பி."

"நல்லது - எங்க பக்கத்து வீட்டில் ஃபோன் உண்டு. அது நான் வரும்போது வேலை பார்க்கலை - இப்ப சரியாயிருச்சான்னு தெரியலை.."

"போட்டுப் பாருங்கம்மா - அப்பாவுக்கு உங்க குரலைக் கேட்டால் நிம்மதியாப் போகும்."

"ஆமா."

தொடர்பு கிடைத்தது.

மாமியின் குரல் கேட்டதே ஆறுதலாயிருந்தது.

ஆனால் இடையே ஏறக்குறைய 2000 மைல் தொலைவு இருக்கிறது என்ற உணர்வு துக்கத்தை அதிகமாக்கியது.

"பத்திரமாய்ப் போய் சேந்தியா, குழந்தே? - எங்கேருந்து பேசற?"

"திரு.ரவிசந்திரன் வீட்டிலேருந்துதான் மாமி, அப்பா எப்படியிருக்காங்க?"

"நீ இல்லைங்கறதைத் தவிர வேற குறையேயில்ல. அவருக்கு இப்ப வெளிய போயிருக்கார்."

"ஒம்பதரைக்கா? இத்தனை சீக்கிரமா எங்கே?"

"பால்ய நண்பன் ஒத்தரை முந்தாநாள் பாத்துட்டார் - நேத்தி முழுக்க அவர் இங்கதான் - இன்னைக்கு உங்கப்பா அவா ஆத்துக்குக் கிளம்பியாச்சு. உன் ஃபோன் வரும்னு நேத்து காத்திண்டிருந்தோம்."

"ஸ்டேஷன்ல பண்ண முடியலை, மாமி."

"தந்தி வந்ததும் கொஞ்சம் குழம்பிட்டோம். ஆனா நீ சமாளிச்சிடுவேன்னு உங்கப்பாவுக்குத் தைரியஞ் சொன்னேன் நான்."



ஓரளவு தந்தி பற்றி விளக்கம் சொன்னாள். பேசி முடித்ததும் சற்றுத் தெம்பும் தெளியுமாயிருந்தது.

பெட்டியிலிருந்த உடைகளைப் பிரித்து அலமாரியுள் அடுக்கினாள். அப்பாவிற்கு விவரமாய்க் கடிதமும் எழுதினாள் - தலூரிடம் கொடுத்தால் தபாலில் சேர்ப்பித்து விடுவான்.

இனி வீட்டை ஒரு சுற்று வரலாமென நடந்தாள்.

ஓங்கிய கூரை என்பதால் வீடு கோடையிலும் கூடத் தகிக்காது.

அறைக்கு ஒன்றாய்ப் பெரிய ராஜஸ்தானிய ஓவியங்கள்.

முக்காடிட்ட பூ முகங்கள், மீசை முறுக்கிய வீர மேவார்கள், ஒட்டகங்கள் என்று வித்தியாசமான ஓவியங்கள்.

அந்த வித்தியாசத்தாலேயே அதிகமாய்க் கவர்ந்தன.

ஜன்னல்களில் வெட்டிவேர் தட்டியைச் சுருட்டி மேலேற்றியிருந்தார்கள்.

"கோடையிலே இது தேவைப்படும் இல்லியா?"

"மார்ச் மாசமே வெயில் வறுக்க ஆரம்பிச்சிடும்மா - அப்ப இறக்கி தண்ணி தெளிக்க ஆரம்பிச்சிருவோம். அந்த வாசமும் குளிர்ச்சியும் தனி."

"ம்ம். பின்னால் நிறைய வீடுங்க இருக்குன்னார் ரவிசார்."

"அழகழகான வீடுங்க. ஒவ்வொன்னுஞ் சித்திரந்தான் - ஆனா இப்ப யாருமில்லாத கூடாய் நிக்குதுங்க."

"நா... பார்த்துட்டு வர்ரேன்."

"வாங்கம்மா. நம் வீட்டை விட்டு கொஞ்சந் தள்ளி ஒத்த வீடு ஒன்று நிக்கும். அதல இருக்கறது ஒரு தமிழ்க் குடும்பம்."

"அடடே... யாரு?"

"பெரிய ஐயா காலத்தில் அந்தக் குடும்பத்துப் பெரியவர் நம்மகிட்ட வேலை பார்த்தார். தூரத்து உறவுனுங்கூடப்

பேசிக்குவாங்க. பெரியவங்க ரெண்டு தரப்பிலேயும் இப்ப உயிரோட இல்லை. அவர் பிள்ளைங்க - ஆண் ஒன்று ரெண்டு பொண்ணுன்னு அங்கே இருக்காங்க. மூத்தவன் வாலிபன் 25 வயசிருக்கும் - கடைசிக் குட்டி மோனாவுக்கு எட்டு வயசுதான். அதோட பேச்சு - விளையாட்டுதான் இங்க எங்களுக்கு கொஞ்ச ஆசுவாசம்..." என்ற பரிமளத்தின் முகம் சற்றே மாறியது.

"இடையிலே ஒரு பொண்ணா?"

பேச்சை வளர்ப்பதற்காகக் கேட்டாள் ராகினி.

"ம்ம்.. சோனாலி. 'கிருஷ்ணகிரி' ஒட்டல்ல வேலை பாக்குது. ஸ்டார் ஒட்டலில் வேலை பார்க்கும் தெனாவெட்டு. யாரு கூடவும் பேசாது - ரவிதம்பியைத் தவிர." கடைசி வார்த்தைகள் சற்று இடக்காகச் சொன்னது போலத்தான் தோன்றியது.

"வடக்கத்திய பெயர்களா இருக்குதே?"

"பொழைப்புக்காக வந்த பிறவு இனி இதுதான் நம்ப ஊருன்னு இங்கத்திய பேரே வச்சிட்டாங்க போல..."

"வரட்டுமா பரிமளம்மா?"

"அசைவம் சாப்பிடுவீங்களாம்மா? எதெது பிடிக்கும், பிடிக்காது?"

"அசைவமும் சாப்பிடுவேன் - பிடிக்காதுன்னு எதுவுங் கிடையாது. சமைத்து மேஜையில வைக்கற சாப்பாட்டை நொட்டை சொல்ற அளவு நான் பெரிய வீட்டுப் பெண்ணில்லே..."

இருவரும் சிரித்தனர் -

பரிமளம் முகத்தில் சிநேகம் கூடியது.

அலட்டாத, இயல்பாய்ப் பேசிப் பழகும் விருந்தாளி வந்ததில் அவளுக்கு மகிழ்ச்சிதான்.

பின்கட்டு வாசலை விட்டு வீதிக்கு வந்தவள் அசந்து நின்றாள்.

"யப்பா... எத்தனை நேர்த்தியான வீடுகள்!"



நுணுக்கமான நகை வேலைப்பாடுடன் அல்லவா வீட்டு முகப்பையும் அமைப்பையும் செதுக்கி நிறுத்தியிருக்கிறார்கள்!

எல்லாமே மாடி வீடுகள்.

சந்தன நிற மாவுக் கற்களால் ஒன்று போல அச்சடித்தாற் போல நின்றன வரிசையாய்.

ஆனால் ஒற்றுமை அந்த மட்டோடுதான். பால்கனியின் சித்திர வேலைப்பாடுகள் வெவ்வேறாய் அழகு காட்டின. கட்டிடக் கலைஞர்களின் கற்பனைத் திறனைப் பாராட்டத் தோன்றியது. தனக்கே இப்படியென்றால் ராஜன் சொக்கிப் போயிருப்பான்.

இவற்றோடுகூட பானுமதியின் காதலும் சேர, தேனில் சிக்கிய ஈபோலக் கிளம்ப மனமின்றிக் கிடந்திருக்கிறான்.

இருபுற வீடுகளுக்கு நடுவே அதிக இடைவெளி இல்லை. மணற்சாலை - கடும் பாலைவனக் காற்றுக்கு அஞ்சியே இப்படி வீடுகளை நெருங்கக் கட்டினார்கள் என்று ராஜன் விளக்கிய ஞாபகம்.

நெடுக நடந்து மறுபடி திரும்பியபோதுதான் அந்த ஒற்றை வீடு கண்ணில் பட்டது. இப்போது வீட்டில் யாரும் இருப்பார்களா?

இன்று சனிக்கிழமை - பள்ளி விடுமுறை என்றால் சிறுமி - அவளின் பெயரென்ன? ஆங்.. மோனா மட்டும் இருக்கக் கூடும்.

சற்றுத் தயக்கமே படியேறினாள்.

கதவைத் தட்டியபோதுதான் அது தாழிடப்படாதது புரிந்தது. சற்றே விரிந்த கதவின் வழியே ஒரு சிறுமியின் பின்புறம் தெரிந்தது.

மேசையின் மீது எதையோ வைத்து வரைந்து கொண்டிருந்தாள். அரவம்கேட்டுச் சட்டெனத் திரும்பிய சிறுமியின் விழிகள் பயத்தில் ஒரு கணம் விரிந்தன.

"மன்னிக்கணும் - தட்டினேன் - கதவு திறந்திடுச்சு - நீ மோனாதானே?"

பயம் குறைந்த சிறுமியின் விழிகள் இவளை ஆராய்ந்தன.

எடை போடுவது போல அளைந்தன.

"ஆமா... நீங்க யாரு?"

"நான் ராகினி. இங்க ரவிசார் வீட்டிலே தங்கியிருக்கேன். இன்னைக்குக் காலையிலேதான் வந்தேன்."

"ரவி மாமா என்னைப் பத்திச்சொன்னாங்களாக்கும்?"

மறுக்க மனமில்லாது மௌனமாய் நின்றாள்.

"சேலை கட்டிட்டு நின்னீங்களா... நா.. நான் ஒரு நிமிஷம் பானுக்கான்னு நினைச்சு... நினைச்சுட்டேன்." மிரட்சியுடன் சொன்னாள்.

"பானுக்கான்னா பயமா?"

"இல்ல... நீங்க யாரோ மாதிரி இருக்கீங்க..."

இந்தக் குட்டியும் பேச்சு மாற்றுகிறாளோ?

"யார் மாதிரி? ராஜன் மாமா மாதிரியா?"

"ம்ம்...?" புருவஞ் சுருக்கி யோசித்த சிறுமியின் முகம் மலர்ந்தது.

"ஆம்மா...!" வியப்புடன் தலையசைத்தாள்.

"நான் அவரின் தங்கை."

"அழகா யிருக்கீங்க... ரொம்ப நாள் இங்க இருப்பீங்களா?"

"பத்து நாள்."

"ம்ம்... சீக்கிரம் போயிடுங்க." என்றாள் மோனா சற்று தீவிரமாக.

## 6

மதியம் தூங்கி எழுந்தவளுக்குச் சூடான சமோசாவும் காபியும் பரிமாறப்பட்டன.

"ஐயோ... என்ன பரிமளம்மா நீங்க - ஒருநாளைக்கு நாலு வேளை சாப்பிட்டா என்னாகிறது நான்?"



"மெலிஞ்சு தெரியறீங்களேம்மா - ரவி தம்பிதான் உங்களுக்குப் பிடிச்சதாப் பார்த்து சமைச்சுப் பரிமாறச் சொன்னார். மதியம் ஃபோன் பண்ணி எப்ப சாப்பிட்டீங்கன்னு கேட்டார். சமோசா செய்யச் சொன்னதும் அவர்தான்... நான் பண்ற சமோசா அவருக்குப் பிடிக்கும்... அதான்..."

"நல்ல விருந்தோம்பல் பண்பு - ஆனா அதைச் சாக்காய் வச்சு நான் ஒரு பிடிபிடிச்சா அது வம்பு!" சிரித்தாள்.

"உங்களை இப்படி கவனிக்கறதோட சரி - சில சமயம் வேலை நெரிசலில் தம்பி சாப்பிடவே மறந்திடுவாரு - இந்த வயசுக்கு வேலை ஜாஸ்திமா..."

காலை முழுக்க சுற்றிப் பார்க்க, சாப்பிட்டுத் தூங்க என்று கழிந்து விட்டது. மணி நான்குதான் - இரவு உணவிற்கு இன்னும் நான்கு மணி நேரமிருக்கிறது - எப்படிப் போக்குவது அதை?

மறுபடி மோனாவைப் போய்ப் பார்த்து வரலாமா?

ராஜன், பானுமதி, மற்றவர்களையும் பற்றி அச்சிறுமி அதிக விஷயங்களைச் சொல்லக் கூடும். மொழிப் பிரச்னையில்லாத நிம்மதி வேறு.

முதலில் சிறுமி தன்னை அச்சம் பொங்கப் பார்த்ததும், 'இங்கேருந்து சீக்கிரம் போயிடுங்க!' என்றதும் நெருடின.

'ஏன்', 'எதற்கு' - என்று ராகினி பேச்சு வளர்த்த முயன்றபோது மோனா வெகு சாமர்த்தியமாய்ப் பேச்சின் போக்கைத் திருப்பி விட்டாள்.

"புது ரஜினி படம் எப்படி வருது?"

"விஜய் டான்ஸ் உங்களுக்குப் பிடிச்சிருக்கா?"

"தமிழ்ல என்னல்லாம் காமிக்ஸ் வரும்?"

சென்னையின் கடற்கரை, பள்ளிகள், விளையாட்டு என்றெல்லாம் ஒரு அலசு அலசித் தள்ளி விட்டாள்.

இக்காலப் பொடிசுகள் மகா சாதுர்யம்!

சிறுமியிடன் பேசும் ஆவலுடன் கிளம்பி, அவள் வீட்டை நெருங்க நெருங்கப் பேச்சுக் குரல்கள் கேட்டன.

மற்றவர்களும் வந்திருக்கலாம் என்பது புரிய, தயங்கி நின்றாள்.

திரும்பி விடலாம் என்று புறமுதுகிட்ட நேரம் மோனாவின் பிஞ்சுக் குரல் அழைத்தது.

"ராகினிக்கா - வாங்களேன்."

குரல் கொடுத்தநோடு பின்னாலேயே ஓடியும் வந்தாள் சிறுமி.

"உள்ள வராம போறீங்க?"

"இல்ல... வீட்டில பெரியவங்க இருக்காங்க போலிருக்குது..."

"நீங்களும் பெரியவங்கதான - எங்க அண்ணன்தான் - சுரேந்தர்ணா."

"வேலையிலிருந்து களைச்சு வந்திருப்பாங்க - பிறகு வரேன்."

"ம்ஹூம். நீங்க வாங்க."

உரிமையாய்க் கை பற்றி இழுத்து நடந்தாள் குழந்தை.

சற்று வெளிறி மெலிந்து தெரிந்த குழந்தைக்குள் இத்தனை வலுவா? கட்டின கன்றாய் ராகினி அவள் போக்கிலேயே இழுபட்டாள்.

"அண்ணன் வந்ததுமே - என்ன விசேஷம்பாங்க - இன்னைக்கு விசேஷம் இருக்குண்ணா - நா என்னன்னு சொல்லமாட்டேன் - நீங்க பாத்துக்கங்கன்னேன்"

"அதாவது நாந்தான் விசேஷமா? பெரிய வாயாடிம்மா நீ!"

"எங்கக்கா என்னைவிட வாய் பேசும். அதப் பார்த்து கத்துகிட்டேன்."

தன் திறமைக்குக் காரணமும் தந்தாள் குழந்தை.



இவர்களின் குரல் கேட்டு வாசலுக்கு வந்து நின்றான் சுரேந்தர்.

இவளைப் பார்த்த அவன் முகத்திலும் குழப்பம்.

"நான் ராகினி - ராஜனுடைய தங்கை."

"அ...அட... வாங்க."

"அச்சச்சோ... ஏங்க்கா எடுத்ததும் நீங்க யாருன்னு சொல்லிட்டீங்க - அண்ணனைக் கண்டுபிடிக்கச் சொல்லி-யிருக்கலாம்ல?" - அலுத்தாள் மோனா.

ராஜனின் மறைவு பற்றி வருத்தம் தெரிவித்த சுரேந்தர் பழங்காலத் தேக்கு நாற்காலி ஒன்றை ராகினி அமர இழுத்துப் போட்டான்.

"காலையிலே இந்தப் பக்கம் வந்து... மோனாவைச் சந்திச்சேன் - அவள் தனியா இருந்தா மறுபடி பேசலாமேன்னு வந்தேன்."

"சந்தோஷம். உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும் - எங்க பெற்றோர் இப்ப உயிரோட இல்லை. நானும், சோனாலியும், வேலைக்குப் போயிடுவோம். ஆக மோனா இங்க தனியா இருப்பா... பேச்சுத் துணை ரொம்பப் பிடிக்கும் அவளுக்கு!" முயன்று சிரித்தான்.

25 வயதிற்கு அவனது முகம் முற்றித் தெரிந்தது - தோற்றத்தில் அதிக அக்கறை எடுத்துக் கொள்ளும் ரகமில்லை போலும். கசங்கிய ஆடைகள்.

"என்ன குடிக்கறீங்க? டீ தயாராயிருக்குது."

"இல்லை. நன்றி. இப்பதான் காபி, சமோசான்னு உள்ளே இறக்கினேன் - வயிற்றில் இடமேயில்லை."

"ரவிசாரின் விருந்தோம்பல் ரொம்ப பிரசித்தம்."

"மோனாகூட இங்க யாருமில்லைன்னா அங்க போய் இருக்கலாமே... அதாவது இங்க தனியா இருக்கறதுக்கு... அக்கம் பக்கமெல்லாம் யாருமில்லாத வீடுங்க..."

தான் அதிகப் பிரசங்கித்தனமாய்ப் பேசுகிறோமோ என்று நெருடியது. ஆனாலும் இப்படி வெறிச்சோடிய தெருவில் ஒரு பெண் குழந்தை தனியாய் இருப்பதும் நெருடியதே.

"பரிமளம்மா கெஞ்சியே பார்த்துட்டாங்க. ரவிசார் இருந்தால் போய்ப் பேசிட்டு வருவா - மற்றப்படி இங்கேயே ஏதாவது வாசிப்பா, வரைவா. இவளுக்காகவே நானும் வேலை முடிஞ்சதும் ஓடி வந்துர்ரது."

"எங்கே வேலை பாக்கறீங்க?"

"இதுன்னு இல்லை. இங்கே டூரிஸ்ட் அதிகம் வர்ரதால் 'கைட்'டாய் சுத்திக் காட்டுவேன். அரசு அங்கீகாரம் வாங்கி வச்சிருக்கேன். பல சினிமா படப்பிடிப்புகள் இங்கு நடக்கும். எதிர்பாராததெல்லாம் தேவைப்படும் - புதுப் பூங்கொத்து வேணும்பாங்க - வரவழைச்சுத் தருவேன் - அப்படிப் போகுது பிழைப்பு."

"ப்ரியமுடன் படம் பாத்தீங்களாக்கா? நம்மூரில்தான் எடுத்தாங்க."

உற்சாகமாய் இடைவெட்டினாள் குட்டிப் பெண்.

"யூனிட்டுக்குத் தேவையான ஜீப், எக்ஸ்ட்ராஸ், ஒட்டகம் வரை ஏற்பாடு செஞ்சு தந்தேன்."

"ஓஹோ! உங்களுக்கு ராஜனை நல்லா தெரிஞ்சிருக்கும் இல்லியா?" யாராவது தமையனைப் பற்றிப் பேசமாட்டார்களா என்ற ஆவல் அவளுக்கு.

"ம்ம்.. ஓரளவு - மோனா! நீ வரைஞ்ச படங்களை அக்காவுக்குக் காட்டினீயா?"

பேச்சை மாற்றுகிறான்.

அண்ணன் ராஜனின் பேச்செடுத்தாலே அனைவரும் சற்று இறுகிக் கொள்கிறார்கள் - பேச்சைத் திசை மாற்றுகிறார்கள் - ஏன்?

இங்கு வந்தது நல்லதிற்குத்தான்.



தனக்குத் தெரியாத விவரங்கள் - மர்மங்கள் இங்கிருக்கின்றன.

வீடு திரும்பியவள் தான் எடுத்து வந்திருந்த நாவலில் அமிழ முயன்றாள். ஆனால் பந்து நீரில் அமுங்குமா? அமுக்க அமுக்க எம்பித் திமிறி மேலேறி மிதப்பது போல நினைப்பு முழுக்க ராஜனைப் பற்றியும் அவனைப் பற்றி இவர்கள் மறைக்க முயலுவதென்ன என்பது பற்றியும்தான்!

எட்டடிக்கப் பத்து நிமிடங்கள் இருக்கையில் உணவின் மணம் தூக்கலானது. எழுந்து கூந்தலை மேலாக வாரினாள் -

புடவை கசங்கியிருப்பதுபோலத் தோன்ற ஆரஞ்சு நிற க்ரேப் ஒன்றை எடுத்துச் சுற்றிக் கொண்டாள்.

விழிகள் சற்று மங்கித் தெரிகின்றனவோ?

துளி மையெடுத்து விழி விளிம்புகளில் தடவினாள்.

பொட்டு சற்றுப் பெரியதானால் தேவலை எனப்பட, சரி செய்தாள்

பூசிய சந்தனப் பவுடரின் நறுமணத்தோடு அவள் சருமத்தைச் சந்தனத்திலிருந்து கடைந்தாற் போலக் காட்டியது.

சரியாக எட்டிற்கு கதவு தட்டப்பட்டது.

நுழைந்தது ரவிசந்திரன்தான்.

இரு விநாடிகள் இவள் மேலோடு கீழ் பார்த்தான்.

அப்பார்வை அவளைக் குற்றஞ் சொல்லியதோ?

அண்ணனை இழந்து துயரத்திற்கு ஆறுதல் தேடி வந்தவளாய்த் தோன்றவில்லையே, இந்த அலங்காரவல்லி என்று எள்ளியதோ?

ராகினியின் முகம் சிவந்தது.

ஏன் புடவை மாற்றி, முகத்தை மெருகேற்றினோம் என்ற குமைச்சலில் உடல் கூசியது.

"எப்படிப் பொழுது நகர்ந்தது உங்களுக்கு?" உபசரணையாய்க் கேட்டான்.

"நீங்க சொன்னது போல வெளியே ஒரு நடை போனேன். அற்புதமான வீடுகள் - நுணுக்கமான வேலைப்பாடுகளோட மோனாவையும் சந்திச்சேன்."

"முன்னே அடிக்கடி இங்கதான் இருப்பா - இப்ப வர்றதில்லை. பரிமளத்துக்குக்கூட அதிலே வருத்தம்."

"நீங்க யார் மாதிரியோ இருக்கீங்களேன்னு கேட்டா. அந்தப் பெரிய மனுஷி."

"வாய் ஜாஸ்திதான்." அவனும் புன்னகைத்தான்.

"நீங்களும் நான் ராஜன் போலிருக்கேன்னு சொன்னீங்க இல்லியா?"

"அடடே.... பரிமளம்மா இடியாப்பம் பிழிஞ்சிட்டிங்களா - கூடவே தேங்காய்ப் பால், கோழிக் குழம்பு - பிரமாதம்!" என்றான்.

பேச்சை மாற்றுகிறான்.

சாப்பிடும்போது பொதுப்படப் பேச்சை நகர்த்தினார்கள். சாப்பிட்டு முடிந்ததும் வரவேற்பறையில் வந்து அமர்ந்தனர்.

மங்கிய வெளிச்சம் சூழலை வெகு இதமாக்கியிருந்தது.

கண்களைக் கூசச் செய்யாத சுகம்.

"கேரிக்கு நான் வந்ததைச் சொன்னீங்களா?"

"ஆமா. நாளை காலை இங்க வருவான். அப்படியே உங்களை 'ஸாம்' அழைச்சுப் போறதாய்ச் சொன்னான்."

"அதாவது பாலைவன விளிம்புக்கு..? இல்லைங்க - எனக்குச் சுற்றிப் பார்க்க ஆர்வமேயில்லை... ஆனா... நன்றி மிஸ்டர் ரவிசந்திரன்."

"மிஸ்டரையும் சந்திரனையும் வெட்டி விட்டறலாமே. நீங்க? வெறும் ரவி போதும் - அதுதான் பேச வசதி."

"சரி - நீங்களும்.. அப்படியே.." குழறினாள்.



"நன்றி. இவ்வளவு தூரம் வந்த பிறகு இங்குள்ள சிறப்புகளைப் பார்க்காம போகக்கூடாது, ராகினி."

அவன் அவளது கண்களைப் பார்த்தே பேசினான். பார்வை ஊடுருவியது அவளை. அது சங்கடமும் நூதனமுமான அனுபவமாயிருந்தது.

ஆனாலும் பதிலுக்கு அவனைப் பார்த்து அழுந்தச் சொன்னாள் -

"ஆனா நான் வெறுமே ஊர் சுற்றிப் பார்த்துப் போக ஜெய்ஸல்மர் வரலியே! ராஜன் கடைசியாய்ப் பார்த்து, புழங்கிய ஊர் என்ற பரிதவிப்பு அண்ணனைப் பற்றி நீங்க சொல்லறதையெல்லாம் கேட்டு எங்க அப்பாட்ட சொல்லலாங்கற நோக்கம். பானுவைப் பார்த்துப் பழகலாங்கற வாஞ்சை.. ஆனால்..."

"ஆனா... நாங்க யாரும் ராஜனைப் பற்றி இயல்பாய்ப் பேசலை. இல்லியா?"

ஆமோதிப்பதாய்த் தலையசைத்தாள்.

"இப்ப கேரியையும் சாப்பாட்டுக்கு இங்க அழைத்து வரலாம்னு இருந்தேன். ஆனா முதல்ல உங்ககிட்ட விஷயத்தைத் தனியாய்ச் சொல்லிடலாம்னுதான் அவனை அழைக்கலை."

"என்... என்ன விஷயம்?"

அவளுக்கு வாய் உலர்ந்து நாக்கு ஒட்டிக் கொண்டது.

"முதல்ல பானு ராஜனை நேசிக்கறது போல எங்கிட்ட வந்து சொன்னபோது ஆச்சரியப்பட்டேன்.."

"எங்களுக்கும் அண்ணன் - அதாவது ராஜன், யாரோ பானுவை மனைவியாய் நிச்சயம் செய்திருப்பதாய் எழுதினது அதிர்ச்சி. பெண்ணின் புகைப்படம்கூட அனுப்பலை அவன் - நேரில் பாருங்கன்னு எழுதிட்டான்."

"ம்ம்.. எனக்கு அதிர்ச்சி பின்னால் வந்தது." சொன்னவனின் குரலில் சற்றுக் கடுமை ஏறியிருந்தது.

"அதாவது ராஜன் இறந்த பிறகு அவனைப் பற்றித் தெரிய வந்த உண்மைகள் அவை..."

"விவ... விவரமாய்ச் சொல்லுங்க."

இவளும் பதட்டமாகியிருந்தாள்.

"ராஜனின் விபத்து அவன் ஜோத்பூர் நோக்கிப் போனபோது ஏற்பட்டது"

"ம்... சொன்னீங்க."

"அங்கே அவன் வேலை விஷயமாப் போகலை. போனது ஒரு பொண்ணோட..."

"அவ... அவளுக்கு என்னாச்சுது?"

"பெரிசாய் எதுவுமில்லை. ஏன்னா அவதான் மோதிய காரிலிருந்து தப்பிப் போய் ஹாஸ்பிடல் ஆம்புலன்ஸிற்குப் போன் செய்திருக்கிறாள். இன்ன இடத்தில் இன்னார் அடிபட்டுக் கிடக்கிறார்னு சொல்லியவள் பிறகு மாயமா மறைஞ்சுட்டா. அவள் யார்ன்ற விவரம் தெரியலை."

"போலீஸ் விசாரணையிலுமா?"

"நேரே பார்த்த சாட்சி யாருமில்லை. லாரிதான் மோதியிருக்கணும்னு யூகிச்சிருக்காங்க - லாரிக்காரன் ஓடிட்டான்."

"எங்களுக்கு ஏன் ஏதும் சொல்லலை நீங்க?"

"காரணமாத்தான் - ராஜன் தனக்கும் அந்தப் பெண்ணுக்குமாய் ஜோத்பூர் ஹோட்டலில் அறை பதிவு செய்திருக்கிறான். திருமதி - திரு.ராஜன் என்ற பேரிலே! ஸ்பெஷல், தேனிலவுக்கான அறை அவர்களுக்காகக் காத்திருந்தது - அவன் வராதது கண்டு ஹோட்டல் நிர்வாகி இந்தத் தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்தான் எங்களுக்கு விவரம் தெரிஞ்சுது."

விக்கித்துப் போனாள் ராகினி.



# 7

'மஸ்காரா' இட்டுக் கண் இமைகளை அடர்த்தியாக்கி மேலேற்றிய சோனாலி அடுத்ததாய் உதடுகளில் கவனம் செலுத்தினாள். லிப்-லைனர் கொண்டு உதட்டு விளிம்புகளை வளைவாய் வரைந்து பின் செர்ரி நிறச் சாயமேற்றினாள்.

ரெண்டு எட்டுப் பின் நகர்ந்து பார்க்க, திருப்தியாயிருந்தது போலும். கைப்பையை எடுத்துக் கொண்டு கிளம்பியவள்.

"அக்கா! நா இன்னைக்கு ஸ்கூல் போகலை..."

என்று குழைந்த தங்கையை எரிச்சலாய்ப் பார்த்தாள்.

"ஏன், கணக்குப் பரீட்சையா?"

"ம்ஹூம்... சும்மாதான்."

"நாய் வால் சும்மா ஆடுமா? தனியா இங்கென்ன செய்யப் போற - கிளம்பு."

"எனக்கு வயிறு வலிக்குது."

"அ...ஆ... இந்தப் பொய் ஆகாது. அப்ப கிளம்பு. டாக்டர் வீட்டுக்குப் போலாம்."

"ஐயய்யோ... இஞ்சி தட்டிக் கொடுத்தாப் போதும்."

"போன தடவை ஸ்கூல்ல மெடிகல்-செக்கப் இருந்தபோதே நீ டிமிக்கி அடிச்சே... ஒருவேளை மறுபடி வைத்தியக் குழு ஸ்கூலுக்கு வர்ராங்களா என்ன?"

கரிசனையோடு இல்லாமல் கேலியாய்க் கேட்டாள் மூத்தவள்.

"எனக்கென்ன... நா எதுக்கு பயப்படணும்?"

"அப்ப கிளம்பு..."

"எங்க?"

"ஸ்கூலுக்குத்தான் - ரொட்டியிலே ஜாம் தடவி வச்சிருக்கேன், எடுத்துக்கோ."

"தினந்தினம் காலைக்கும் மதியத்துக்கும் இதேதானா?"

"சுரேந்தரைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லு. அண்ணிக்காரி வந்து விதவிதமாச் சமைச்சுப் போடுவா."

"ஏன் நீ செய்யலாம்லக்கா?" முனங்கினாள் மோனா.

"கரண்டி பிடிச்சு சுரண்டற வேலைல்லாம் நமக்குச் சரிவராது."

சோனாலியின் வெண்டை விரல்கள் நாசூக்காய் ஆடின.

"நீ கல்யாணம் கட்டிட்டுப் போனால் அங்க சமைக்கனுமில்ல?"

"நா போற இடத்தில் சமையலுக்கு நாலு ஆளுங்க இருக்காங்க அதாவது இருப்பாங்கன்னு வை. உனக்கெதுக்கு அந்தக் கவலை. கிளம்பு."

"எனக்குத் தலை வலிக்குதுக்கா..."

"வலி இடம் விட்டு இடம் பாயுதாக்கும்? சுரேந்தர் ஏதோ சினிமா யூனிட் வந்திருக்குன்னு அதிகாலமே போயாச்சு. உன்னோட மல்லுக்கட்ட என்னால முடியலை... ஏதோ செய்."

ஹீல் செருப்பு, குதிரையின் குளம்பொலி போல சப்திக்க வெளியேறினாள் சோனாலி.

அவளது அகமும் முகமும் மலருவது ரவிசந்திரனைப் பார்த்து மட்டும்தான்.

இப்போது இத்தனை அவசரமாய் அவள் ஓடுவதும்கூட அவனுக்காகத்தான். அவன் அலுவலகத்திற்குப் புறப்படும் நேரமிது. போனால் அவனோடு தொற்றிக் கொள்ளலாம்.

ஊர் கண்கள் முழுக்க மொய்க்க அவனோடு - ஊரில் மதிக்கப்படும், பணம் படைத்த கவர்ச்சியான இளைஞனுடன் -



உரிமையாய் அவன் காரில் உடன் அமர்ந்து வலம் வருவது சாமான்யமானதா?

பெரிய சந்தர்ப்பம் அல்லவா?

புத்தியுடன் பயன்படுத்திக் கொண்டால் அவனை வாழ்நாள் முழுக்கச் சிக்க வைக்கக்கூடிய தூண்டில் இது.

அரக்கப்பறக்க ஓடி வருபவளை அவன் பலமுறை ஏற்றி அவள் ஹோட்டெல் முன் இறக்கி விட்டிருக்கிறான்.

உடன் வேலை பார்ப்பவர்கள் பொரும, இவள் ரவியுடன் சிரித்துக் குழைந்து பேசிக் கையசைத்து வழியனுப்புவாள்.

ஜெய்ஸல்மர் சின்ன ஊர். அத்தனையும் ஒடுங்கிய சாலைகள். உலகம் முழுதிருந்தும் சுற்றுலாப் பயணிகள் வருவதால் சதா கூட்டமும் நெரிசலும். அதில் காரோட்டுவது வித்தைதான். எத்தனை வித்தைக்காரனும் அடிக்கடி காத்து நிற்க நேரிடும்.

அந்நேரங்களில் சோனா ரவியுடன் ஓயாமல் பேசுவாள். நொடிக்கொரு தரம் 'கிளுகிளு' என்ற சிரிப்பு வேறு.

ஆக அவள் திட்டத்தின்படி ஊரில் இவர்கள் இருவரையும் இணைத்துக் 'கிசுகிசு' பரவிப் படர ஆரம்பித்திருந்தது.

தன் அப்பாவின் முதலாளியின் மகனைத் தான் வளைத்துப் போட்டு விட்ட கர்வம் சோனாலிக்கு.

அவளுக்கு என்றுமே வீட்டைச் சுத்தமாய் வைப்பதும், எளிய உணவானாலும் ருசியாய்ச் சமைத்துப் பரிமாறுவதிலும் நோக்கம் இருந்ததில்லை. தன் அழகைப் பகட்டால் பேரழகாய்க் காட்டுவது ஒன்றுதான் நோக்கம்! இதில் அடிக்கடி 'சீக்கு' என முனங்கும் சின்னத் தங்கைக்குகூட நேரம் செலவிட்டதில்லை.

வீட்டுச் சாப்பாட்டு மேசையில் பாலும் ஜாம் பாட்டிலும் திறந்தே கிடக்க, எச்சில் தட்டு கரண்டிகளில் ஈக்கள் மாநாடு நடத்திக் கொண்டிருந்தன.

எட்டு வயதுத் தங்கையை வீட்டை மூடிப் போக சொல்லிவிட்டு, சிட்டாய்ப் பறந்து விட்டாள்.

மூச்சிரைக்க ஓடிவந்ததிற்குப் பயனில்லாமல் இல்லை!

ரவி அப்போதுதான் காரில் ஏறிக் கொண்டிருந்தான்.

"நல்ல வேளை, ரவி. ஜெர்மனியிலேருந்து ஒரு குழு காலையிலே வந்து இறங்கறாங்க. நானே அவங்களை வரவேற்கணும்னு சொன்னார் எம்.டி. எங்கே தாமதமாயிடுமோன்னு பயந்தேன்... ம்... ரொம்ப ஸ்மார்ட்டா இருக்கீங்க ரவி. க்ரீம் கலர் ஜீன்ஸ், கருநீல ஷர்ட்... யப்பா! உங்களுக்குன்னே உருவாக்கினது போலிருக்குது..."

அவனை மை விழிகளால் விழுங்கினாள்.

இரையை விழுங்கும் பாம்பு போல ஜொலித்தன விழிகள்.

இந்த நாடகத்தை வீட்டின் உள்ளிருந்து நோட்டமிட்டன மற்றொரு ஜோடிக் கண்கள்.

ராகினி பார்ப்பதைக் கண்டு, தானும் எட்டிப் பார்த்த பரிமளாவின் முகம் சுண்டியது.

"அது... அவங்கதான் சோனாலியா?"

"ம்ம்... முக்கால்வாசி நாளு தம்பியோடதான் சேர்ந்து போகும்."

"ஹோட்டெல் ரிஷப்ஷனிஸ்டா? அழகாய் இருக்காங்க."

"வெறும் மேல் பூச்சு - பொண்ணுன்னா இதமாய்ப் பேசிப் பழகணும்."

"ஆணும் அப்படிப் பழகினா நல்லதுதானே, பரிமளம்மா?"

"அதுசரி. இவ வீட்டைப் பேணனும் - அதுக்கு மிஞ்சி இப்ப வெளி வேலைகளும் பொண்ணுங்க பார்க்குதுங்க - வேணாங்கலை. அதுக்காக இப்படி குதிரையாட்டமா?"

"காலம் மாறுதும்மா. இந்த வேலைக்கு அவங்க இத்தனை அலங்காரம் செய்துக்கணும். கலகலப்பா பழகணும்."



"எல்லாரோடவும் சுமுகமாப் பழகினால் விகல்பமாத் தெரியாது. வயசுப் பசங்களோட மட்டுந்தான் இழையும்னா? உங்கண்ணன் வந்தபோதுகூட ஆலாப் பறந்து இழைஞ்சுது. பானுவுக்கும் அவருக்கும் நெருக்கம் ஏற்பட்ட பிறகு விலகிடுச்சு.."

அதிகம் பேசிவிட்ட பயத்தில் பரிமளம் அவசரமாய் வாயை மூடிக் கொண்டாள்.

"இயல்பாப் பழகுது போல..."

வேண்டுமென்றே வாயைக் கிளறினாள் ராகினி. "ஊர் முழுக்க தப்பு பேச வச்சுட்டாளேம்மா. ரெண்டு பேரும் தமிழ்க் குடும்பமா இருக்கறதால கல்யாணம் செய்துக்கப் போறதாப் பேச்சு. சதா இழைஞ்சு கூடவே போய் வந்தா... கௌரவமா இருக்குதா? சொல்லுங்க - பெரியவங்க இருந்தால் கண்டிப்பாங்க - எனக்குச் சொல்லவும் முடியலை... விழுங்கவும் மாளலை.."

புலம்பலோடு உள்ளே நடந்துவிட்டாள் பரிமளம்.

ஒருவேளை ராஜனோடு ஜோத்பூருக்குப் பயணப்பட்டது சோனாலியோ?

ஒரு கணம் இப்படியொரு எண்ணம் வந்ததற்காய்த் தன்மீதே வெறுப்பும் வந்தது.

நேற்றிரவு ராஜன் மீது குற்றம் சொன்ன ரவி மீது புலியாய்ப் பாய்ந்து விட்டு இப்போது தானே தன் அண்ணன் மீது சந்தேகம் கொள்ளக் கூடாதுதான்.

நேற்றிரவின் சம்பாஷணையை மீண்டும் அசை போட்டாள்.

ரவிசந்திரன் சொன்னதைக் கேட்டு ஒரு நிமிடம் திகைத்தாலும், "ராஜன் அப்படிப்பட்டவனே இல்லை!" என்று மறுத்தாள் ஆணித்தரமாய்.

"நான் அனுமானமாய் எதுவும் சொல்லலை - உண்மை இது."

"உண்மை இல்லைங்கறேன். அப்படியே தம்பதிகள் பேரிலே ஜோத்பூர் கிளம்பினது உண்மைன்னா... உடன் போனது உங்க தங்கையாத்தான் இருக்கணும் - அதாவது பானுமதி."

அடித்துப் பேசினாள்.

"பானு அப்போது வீட்டிலிருந்தா - விபத்து நேர்ந்த தகவலை அவகிட்ட போய்ச் சொன்னதே நாந்தானே."

அந்தக் கொடுமையான சூழ்நிலையை மறுபடி அனுபவிப் பவன் போலப் பெருமூச்சு விட்டான்.

"பானுவின் உடம்பெல்லாம் நடுங்குச்சு - அலற ஆரம்பிச்சிட்டா பிறகு. அதாவது சில நாட்கள் பொறுத்து ராஜன் போனது ஒரு பொன்னோடங்கறது தெரிய வந்ததும் - பாவம்! நொறுங்கிப் போனா - அவளை இளவரசி போல வளர்த்தேன்... இந்தப் புறக்கணிப்பு... ஏமாற்றத்தை அவளால தாங்க முடியலை."

"ராஜன் ஏமாற்றுக்காரனில்லை. சிறு வயசிலே என்னைச் சீண்டி அழ வச்சிருக்கான்... ஆனா ஒருபோதும் ஏமாற்றினதில்லை. கடைக்குப் போனா நானாவது இஷ்டத்துக்குத் தோணினதை வாங்குவேன். அவன் பட்டியல்படிதான் வாங்குவான். அப்பாவைக் கேட்காம எந்த முடிவும் எடுத்ததில்லை. அதாவது உங்க தங்கையைப் பார்க்கற வரை - சென்னையில் எந்தப் பெண்ணையும் துரத்தின தில்லை... அண்ணனுக்குப் படிப்பு மட்டுந்தான் குறி."

உணர்ச்சி மிகப் பேசியதில் அவளுக்கு மூச்சிரைத்தது - மூக்கு நுனியில் 'ஜிவுஜிவு' என்ற சிவப்பு.

"மறுபடியும் சொல்றேன் - நான் யூகம் செய்து பேசலை. ராஜன், வாடகைக் காரைத் தானே போய்ப் பேசி எடுத்து, ஜோத்பூர் வரை போய் வர மூன்று நாட்களுக்கு என்று பதிவு செய்திருக்கிறான் - அதற்குச் சாட்சி உண்டு. ஜோத்பூர் ஹோட்டெலில் அறையும் திரு - திருமதி ராஜன் என்ற பேரில் பதிவு செய்யப்பட்டுக் காத்திருந்தது."

அவன் கைப்பட எழுதிய கடிதமும் அவன் கையெழுத்திடப்பட்ட காசோலை - ஆயிரம் ரூபாய்க்கானது - அடுத்த சாட்சி. உடன் பயணப்பட்ட பெண் தகவல் சொன்னதால்தான் ஆம்புலன்ஸ் அவனின்... சடலத்தைப் போய் எடுத்து வந்தது - விபத்தின் செய்தியை நான்தான் பானுவிடம் போய்ச்சொன்னேன் -



ஆக நானும் எந்தப் பொய்யும் சொல்லலை, ராகினி - ராஜன் மீது பழி போட்டு எனக்கு ஆக வேண்டியதென்ன?"

ரவிசந்திரனின் முகம் பதட்டத்தைக் காட்டிக் கொள்ளவில்லை. ஆனாலும் இரு மாதங்களுக்கு முன் ஏற்பட்ட அனுபவங்களின் கசப்பு தெரிந்தது.

அன்றிரவு முழுக்க ராகினி உறங்கவில்லை.

அண்ணனைப் பற்றிக் கேள்விப்பட்ட புதுக்கதை குழப்பியது.

ரவி பொய் சொல்வதாய்த் தெரியவில்லை.

போஸ்ட்-மார்ட்டம் ரிப்போர்ட் எல்லாம் ராஜன் இறந்த மறுவாரமே இவர்கள் கைக்கு வந்து சேர்ந்துவிட்டது - விபத்தில் நெற்றிப் பொட்டில் ஏற்பட்ட வலிய அடி மரணம் ஏற்படுத்தியதாய்ச் சொன்னது அது.

புரண்டு புரண்டு தவித்தாள்.

இன்று காலை ரவியைச் சந்திப்பதைத் தவிர்த்தாள் -

இப்போது சோனாலியைப் பார்த்ததும் ராஜனுடன் அன்று காரில் சென்ற பெண் இவளாக இருக்குமோ என்ற சந்தேகம்.

தானே தன் அண்ணனின் நடத்தையில் சந்தேகம் கொள்வதாக அல்லவா ஆகிறது... ச்சே...

இங்கு வந்திருக்கக் கூடாது.

இல்லை - வந்தது - நல்லதுதான் - ராஜன் மீதுள்ள களங்கத்தைப் போக்க வேணும்.

காலை உணவும் இறங்கவில்லை - பரிமளத்திற்காக ஓரளவு சாப்பிட்டாள்.

"நா... நான் ராஜனோட அறையைப் பார்க்கலாமா?"

"வந்தப்பமே கேட்டீங்க... அங்க அவர் சாமான் எதுவு-மில்லையே..."

"சும்மா ஒரு ஆர்வம்."

"வாங்கம்மா - காட்டிடறேன்."

நடுத்தர அளவிலிருந்த அறை - நவீனமாய் இருந்தது.

ராஜனின் உடைமைகள் ஏதும் அங்கில்லைதான். ஆனால் அவன் ஆறு மாதங்கள் இங்குதான் தங்கினான் என்ற உணர்வில் இவளுக்குத் தொண்டை அடைத்தது.

வலப்புறம் முழுக்க சுவரோடு கட்டப்பட்ட அலமாரிகள்.

அதன் தேக்குக் கதவைத் திறந்தாள் - காலியாக இருந்தன. லேசான வெட்டிவேர் வாடை நடுக்கதவின் பின்னே...

"ஓ... இதுதான் பானுமதியா?"

"ஆமம்மா."

"ஹால்ல அவங்க படம் எங்கேயும் இல்லையேன்னு பார்த்தேன்."

"புகைப்படங்கள் எங்கயுமே இருக்காதும்மா. தம்பியப் பெத்தவங்க படங்க மட்டும் பூஜையறையிலே தொங்கும் - இது ராஜன் தம்பி வச்சிருந்தது - அப்படியே இருக்குது போல..."

சட்டமிட்ட படத்தில் பானுவின் முழுத் தோற்றம் சிறைப்பட்டிருந்தது. நல்ல அழகிதான் - சுருள் கேசமும் வட்ட முகமுமாய்... ஆனால் அந்தப் புன்னகை... மோனாலிசாவினுடையது போன்ற அரைச் சிரிப்பு அது.

'நீ போவதற்குள் உன் கேள்விகளுக்கெல்லாம் பதில் கிடைக்குமா இல்லையா?' என்ற சவாலான ஒரு கேள்வியை இவளிடம் கேட்பது போன்ற புதிரான புன்னகை!



௯

தனூர் ஓடிவந்து பரிமளத்திடம் ராகினியைச் சுட்டிக் காட்டி ஏதோ பரபரப்பாய்ச் சொல்ல, இவளுக்குப் படபடத்தது.

"என்ன... என்னவாம்?"

நேற்றுகூட ஃபோனில் பேசியபோது அப்பா நன்றாகத்தானே பேசினார் - அலைமோதின எண்ணங்கள்.

"ஒன்னுமில்லம்மா - கேரி தம்பி உங்களைப் பாக்க வந்திருக்காராம்."

"இவங்க பதட்டத்தைப் பார்த்துப் பதறிட்டேன்."

"அது ஒன்னுமில்லை. கேரி தம்பியப் பாத்தா வயசுப் பொண்ணுகளுக்கு ஒரு பதட்டம் தானா வந்துடும் - நம்ப தனூருக்குந்தான்!" குறும்பிய புன்னகைத்தாள் மூத்தவள்.

"கடவுளே... நேற்றே ரவி சொல்லியிருந்தார் - நா... நான்தான் மறந்துட்டேன்."

"ஒரு நிமிஷம் - தோ வந்துட்டேன்னு சொல்றீங்களாம்மா?"

"வாப்பா."

புகைப்படத்தில் இருப்பது போலவேதான் இருந்தான் என்றாலும் நேரில் அந்த ரோஜா நிறமும், உயரமும், வெளிர்க் கண்களின் ஜொலிப்பும் ஆளை அசத்தின.

ஆரம்ப அறிமுக விசாரிப்புகள் முடிந்து, நண்பனின் மரணம் பற்றிய தன் வருத்தத்தையும் ராகினியிடம் தெரிவித்துக் கொண்டான்.

அந்த சம்பாஷணையின் முடிவில்.

"நீங்க ஸல்வார் அணிந்தால் சௌகர்யமாயிருக்கும், ராகினி." என்றான் கேரி.

இவள் விழித்தாள்.

"என்ன... எதுக்கு?"

"ஸாம் போறோமில்லையா? நேற்று ரவி உங்ககிட்ட சொல்லியிருக்கணுமே? பயணத்தின் பெரும் பகுதி 'ஜீப்'லதான் என்றாலும், பாலை மணல்ல ஒட்டகச் சவாரியும்தான்."

"ஸாரி - நான் எங்கேயும் வரலை, மிஸ்டர் கேரி."

"வெறுமே ப்ரமோத் இல்லை கேரி - எது உங்களுக்கு வசதியோ அப்படிக் கூப்பிடுங்க - மிஸ்டரெல்லாம் அவசியமில்லை."

புன்னகைத்தபோது முறுக்கிய மீசையின் கீழே அவன் ரோஜா உதடுகள் கவர்ச்சியாய் வளைந்தன.

"நான் வந்த நோக்கம்... வேறு..."

"ரெண்டு நாள் பயணம் செய்து இத்தனை தொலைவு வந்தபிறகு 'ஸாம்'கூடப் போகலைன்னா எப்படி? உங்களை ஜெய்ப்பூர், ஜோத்பூர் எல்லாம் அழைச்சுப் போகலாம்னு நினைச்சேன். ஜோத்பூரின் அரண்மனை பிரமாதமாய் இருக்கும். சில மாதங்களுக்கு முன்னே சிம்ரன் அதுக்கு முன்னே ஆட, ஸினிமா ஷூட்டிங் நடந்தது - அதையெல்லாம் நீங்க நேரிலே பாக்க வேண்டாமா?"

அவன் படித்ததுசென்னையில் என்பதால் தமிழ் பேசினான் - ஆனால் அவன் நாவில் சற்று சங்கீதம் போலக் குழைந்து ஒலித்தது தமிழ்.

"மன்னிக்கணும் - எனக்கு ஊர் சுற்றிப் பார்க்கும் ஆர்வமேயில்லை."

"உங்களை வரவழைச்சது நான் - மறுபடியும் அழைப்பை ஏற்று வந்ததிற்கு நன்றி தெரிவிச்சுக்கறேன் - ஆனால் வந்தது வீட்டில இப்படி முடங்கிக் கிடக்கறதுக்கா?"

"இதுவே உறுத்துது - அழையாத வீட்டில் வந்து உட்கார்ந்திருக்கேனே..."

பலமாய்க் கைகளை ஆட்டினான் -



"நோ - அந்த எண்ணம் தப்பு. ரவி உங்ககிட்டே விளக்கம் சொல்லியிருப்பாரே - பானுமதி இங்கே இல்லாததால் எங்கிட்டேயும் கலந்தாலோசித்து, அந்தத் தந்தி அனுப்பினோம். சில வாரங்கள் கழிச்சு வாங்கன்ற அழைப்போடு..."

"இப்போதைய நிலைமை தெரிஞ்ச நீங்க அழைப்பு விட்டிருக்கக் கூடாது. பதில் கடிதம் வருமுன்னே அவசரடியாய் நாங் கிளம்பி வந்தது அதைவிடத் தப்பு. இது... தணல் மேல் நிற்கிற மாதிரி அவஸ்தை..."

"ராஜன் உங்களைப் பற்றி அடிக்கடி பேசுவான். ரொம்ப பாசமாய்... நீங்களும் அவனை ரொம்ப 'மிஸ்' பண்ணுவீங்க. தெரியும். ஒரு மாற்றம் ரணங்களை ஆற்றும்ங்கற எண்ணத்திலே அழைச்சேன்..."

"எனக்கு இப்ப வேறெதும் வேணாம் - அண்ணன் மேலுள்ள பழி நீங்கினால் போதும்."

கேரியின் முகம் சற்று வெளிறியது.

"நீங்க முதல்ல உடை மாற்றிக் கிளம்புங்க - ஏன்னா ஜீப் ஒன்றை வாடகைக்கு எடுத்து வந்திருக்கேன் - இங்கேருந்தே ஒட்டகம்கூட ஒப்பந்தம் செய்யப்பட்டுவிட்டது."

அவளுக்கு இனியும் மறுப்பது முறையாகத் தெரியவில்லை.

போகவும் மனமில்லை -

"மனசு சரியில்லைன்னு..."

"மாற்றம் சரியாக்கிடும்"

சிவப்பில் வெள்ளைப் புள்ளிகளிட்ட ஸல்வாருக்கு மாறினாள். வெள்ளை ஜார்ஜெட் துப்பட்டா நளினமாய் அவள் தோள்களில் கிடந்தது.

"அம்சமாயிருக்கீங்க!" - பாராட்டிய கேரியுடன் கிளம்பினாள்.

"இங்குள்ள கோட்டை உலகப் பிரசித்தம் - 12 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது - முதல்ல உன்னை... நான் ஒருமையிலே

கூப்பிடலாம்னு நினைக்கிறேன் - என் நண்பனின் தங்கையை?'' அனுமதி கோரினான்.

''நானே சொல்லலாம்னு இருந்தேன்.''

''முதல்ல உன்னை அங்கதான் அழைச்சிட்டுப் போறதாய்த் திட்டம். ஆனா ரவி உன்னை, தானே நாளை அங்கே அழைச்சுப் போகப் போறதாய்ச் சொல்லிட்டார்.''

சற்று ஆச்சரியப்பட்டாள்.

நேற்றிரவு இருவரும் சற்றுக் காட்டமாய்ப் பேசிக் கொண்ட பின்பு ஒன்றாய் ஊர் சுற்றிப் பார்ப்பது சற்றுச் சிரமம்தானல்லவா?

ஆனாலும் அழைத்துப் போவதாய்ச் சொன்னது ரவியின் பெருந்தன்மைதான் என்பதையும் மறுப்பதற்கில்லை.

சதா அவனைத் தேடி மனிதர்கள், தொலைபேசி அழைப்பு என்றிருப்பவக்கு நேரம் ஒதுக்கித் தன்னை ஊர் சுற்றிக் காட்டுவதென்றால் - நேற்றைய மனக்கசப்பு குறைந்து போனது!

ஜீப்பில் வறண்ட சாலையில் பயணப்பட்டது நூதன அனுபவம்தான்.

பசுமையே கண்ணில் படவில்லை. அவ்வப்போது சின்னக் குத்துச் செடிகள் பரிதாபமாய் நின்றன.

''தார் பாலைவனத்தின் விளிம்பு இது.''

ஜீப் நின்றது.

''இறங்கு ராகினி - அதோ பார்த்தியா - ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட 'செனட் ஹவுஸ்.''' - சுட்டிக் காட்டினான்.

பெரிய பரப்பு முழுக்க விதவிதமான மண்டபங்கள் நின்றன. அழகிப் போட்டி மேடையில் ரகரகமான பெண்கள் 'யார் அழகு? நீயா - நானா?' என்ற சவாலுடன் நிற்பதுபோல ஒவ்வொரு மணிமண்டபமும் கர்வத்துடன் நின்றது.



''500 ஆண்டுகளுக்கு முன்பு ராஜஸ்தான் அரசாங்கம் இங்கிருந்து செயல்பட்டது. பல தலைவர்கள் இங்குதான் கூடியிருப்பார்கள்.''

''அற்புதமாயிருக்குது - நாள் முழுக்க நின்றாலும் இத்தனை கம்பீரத்தைப் பார்த்துக் கண் நிறையாது...''

சிரித்தான் - ''ராஜனும் இப்படியேதான் சொன்னான். முதன் முறை நாந்தான் அவனை இங்கே அழைச்சு வந்தேன் - பிறகு பலமுறை இங்க தனியா வந்திருக்கான் - பல ரோல் ஃபிலிமைச் செலவழிச்சிருக்கான்.''

அண்ணன் ரசித்த இடம் என்பது அவளை மேலும் உந்த, ஆசையாய்ச் சுற்றிப் பார்த்தாள்.

''இப்ப 'குல்த்ரா' போறோம். இது 13 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கிராமம்.''

''ராஜன் அதுபற்றிக்கூட எழுதியிருந்தான் - பாலிவால் பிராமணர்கள் கட்டிக் குடியேறின சிற்றூர் - இல்லியா? நம்ப பாரம்பரியம் எத்தனை பழமையான அழகுடையது என்று பரவசமாய்க் கடிதம் எழுதியிருந்தான்.''

''உண்மைதான். அறநூறு வீடுகளும், இரண்டாயிரம் மக்களும் வாழ்ந்த ஊர். நடுவே கோயில் - குடிநீருக்காகப் படிகிணறு என்று அம்சமாயிருக்கும்.''

கிராம எல்லையில் 'செக்-போஸ்ட்' இருந்தது.

பணம் கட்டி அனுமதி பெற்று முன்னேறியது ஜீப்.

எங்கும் சந்தன நிறப் புழுதிச் சாலைகள். வாகனச் சக்கரத்தில் அரைபட்ட புழுதி எம்பிப் பறந்தது.

கிளம்பிய புழுதியே மாயாஜாலத்தில் கட்டிடங்களாய் இறுகி, பின் உறைந்து நின்றுவிட்டாற்போலத் தொலைவில் தெரிந்தன சில வீடுகள். இறங்கி நடந்தனர்.

சிதிலமான பின்பும் திட்டமிட்ட சீரான அமைப்பில் இருந்த கிராமம் என்பது புரிந்தது.

535 ஆண்டுகள் மக்கள் வாழ்ந்து, பின் அரசியல் தொல்லைகளால் அவர்கள் துறந்துவிட்டு வெளியேறிய சிற்றூர்.

பாழடைந்து நின்ற கல் சுவர்களைத் தொட்டவளுக்குச் சிலிர்த்தது.

கிருஷ்ணன் கோயில் படியேறினாள் - விக்ரகம் ஏதுமில்லை என்றாலும் பக்தியுடன் வணங்கினாள்.

மந்திரங்கள் ஒலிப்பது போன்ற பிரமை...

'இங்குதான் கோயில் பிரசாதம் தயாரிக்கப்பட்டு பின் மொத்த ஊருக்கும் விநியோகிக்கப்பட்டது' என்ற அறிவிப்பை ஆர்வமாய் வாசித்தாள்.

'பாவரி' என்ற படி கிணற்றுள் இறங்க முடியாவிட்டாலும் எட்டிப் பார்த்துக் குதூகலித்தாள்.

அடுத்து ஒரு மணி நேரப் பயணத்தில் அவர்கள் 'ஸாம்' எனப்படும் பாலைவனப் பகுதிக்கு வந்திருந்தனர்.

கண்ணுக்கு எட்டிய தொலைவு வரை தங்க மணற் பரப்பு.

அதில் ஆயிரக் கணக்கான பாம்புகள் நெளிந்து ஓடியது போல நெளி நெளியாய்த் தடங்கள் - காற்று வரைந்த கலைக்கோலங்கள்.

ஆங்காங்கே குன்று போல நின்றன ஒட்டகங்கள்.

"இதிலேதான் ஏறிப் போறோம்..." கேரி நேசமுடன் ஒன்றைத் தட்ட, அந்த ஒட்டகம் சாதுவாக மணலில் மண்டியிட்டு அமர்ந்து அவர்கள் ஏறக் காத்திருந்தது.

அதில் ஏற ரொம்பத் தயங்கினாள்.

"இதுக்காகத்தான் உன்னை ஸல்வார் போட்டு வரச் சொன்னேன்? பாலை மணல்ல ஒட்டகச் சவாரி வேறெங்கும் கிடைக்காத அனுபவம் - ஏறு."



அச்சத்துடன் ஏறினாள்.

ஒட்டகம் முதலில் முன்னங்காலையும் பின் பின்னங்காலையும் நிமிர்த்தி நிற்பதற்குள் இவளுக்கு ராட்டினத்தில் சுழன்றதுபோலத் தலை சுற்றியது.

"ஐயோ..." என்ற அலறலுடன் சேணத்தை இறுக்கப் பற்றினாள்.

ஆனால் அதன்பிறகு ஒட்டக நடை சுகமாய்தான் போனது.

மற்றுமொரு ஒட்டகத்தில் கேரி இவளுக்குப் பின்னேயே வந்தான். பல ஒட்டகங்களில் வெளிநாட்டவர்கள்தான்.

அத்தனையும் தொலைவிலிருந்த மணற்குன்றை நோக்கி நகர்ந்தன.

"அங்கே எதற்காய்ப் போறோம்?"

"அங்கேருந்து சூரிய அஸ்தமனம் அழகாய்த் தெரியும்."

"கடற்கரையிலிருந்து பார்த்தால் நீலக்கடலுக்குள் சூரியப் பந்து அமிழுவது போல - இங்கு தங்க மணலுக்குள் புதைந்து கொள்கிறான் சூரியன்."

இறங்கி மணல் மேட்டில் அமிழ்ந்தார்கள்.

மிருதுவான மணல். ஒட்டகங்களும் இவர்களை விட்டுப் பத்தடிக்குள் அமைதியாய் உட்கார்ந்து விட்டன.

கதிரவன் தகதகவென்று சுழன்று இறங்கிக்கொண்டிருந்தான்.

தன் ஜொலிப்பான வானம் முழுக்க சிவப்பு பூசினான். பொற்கட்டியாய் மணல் விளிம்பில் அவன் புதைந்து கொள்ளத் துவங்க, அத்தனை காமராக்களும் மின்னலாய் வெட்டி, தங்களுக்குள் அவ்வரிய காட்சியை ஒட்டிக் கொண்டன.

வெண்ணெய்க் கட்டியாய் வழுக்கி மறைந்தான் கதிரவன்.

காமிராக்கள் ஓய்ந்தன.

"ராஜன் வாழ்வும் இப்படித்தான் 'சட்டு'னு முடிஞ்சிட்டது இல்லையா?"

"நிறையத் திறமைகளும், திட்டங்களும் அவனிடம் இருந்தன. அத்தனையும் போச்சு..." உடன் வருந்தினான் கேரி.

"இப்ப அதுகூடப் பரவாயில்லைன்னு தோணுது. நம்பிக்கைத் துரோகின்ற அவப்பெயரைச் சேர்த்துட்டுல்ல போயிட்டான். அதை நினைச்சால் ஆறலை..."

அவளை ஊன்றிப் பார்த்தான்.

"நேற்று ரவி அதபற்றி உங்கிட்ட பேசினாரா?"

தலையாட்டினாள்.

"ஆனால் நா அதை நம்பலை. ராஜனுக்கு எப்பவுமே பெண் சபலம் இருந்ததில்லை - அவன் சிந்தை முழுக்க கட்டிடங்கள்தானே தவிர... கல்யாணம்னு அவன் பேச்செடுத்ததே எனக்கு ஆச்சரியம்... அதிர்ச்சின்னே வைங்களேன். பானுமதி அழகான பெண்தான் - ஆனா சென்னையில் இல்லாத அழகிகளா? யாரையும் நிமிர்ந்துகூடப் பார்த்ததில்லை அவன்..."

கேரி மௌனமாய் மணலை அள்ளிக் கைமாற்றிக் கொட்டி அளைந்திருந்தான்.

"நான் இதை இப்படியே விட்டுரப் போறதில்லை, கேரி.."

"ராகினி - நீ ஒன்னை மனசிலே வைக்கணும் - ராஜனைக் குற்றஞ்சாட்டன்னு இதையெல்லாம் யாரும் ஜோடிக்கலை - பானு மேல் அவனுக்கு ஈர்ப்பு வரக் காரணம் - அவங்க ரெண்டு பேரும் ஒரே வீட்டில் தங்க நேர்ந்ததாய் இருக்கலாம்னு நினைக்கிறேன், அவன் உடம்பு சரியில்லாமல் ரவி வீட்டிற்குப் போக, பானு பல மணி நேரங்கள் அவனுடன் அமர்ந்து பேசுவா - சேர்ந்தே சாப்பிட்டாங்க, சுற்றினாங்க ... அது ஒரு காரணம் - அது தவிர யாரோ ஒருத்தர் நம் மனசில காதலை விதைக்கணும் இல்லியா..? அப்படி நேர்ந்திடுச்சு."

"அது சரி. அவன் வேறு ஒரு பெண்ணோட..."

"ஜோத்பூர் போனபோது ஏற்பட்டதுதான் அந்த விபத்து - அந்த உண்மை எங்களையுமே உலுக்கிடுச்சு..."



"அது உண்மைன்னு நான் நம்பலை - நீங்க நம்பினீங்க சரி. ஊர் முழுக்க எங்கண்ணன் அயோக்கியன்னு நம்பி வாயில போட்டு மென்னிருக்கும் - ஆனா... அது உண்மையில்லை."

அந்தி வானத்தின் செந்நிறத்தில் அவளின் முகம் தகதகத்தது.

உள்ளே கனற்ற ஆத்திரத்தின் வெளிப்பாடு.

"ஊர் இப்ப அதை யெல்லாம் மறந்திடுச்சு, ராகினி.ரெண்டு மாசமாய் ஒரே அவலை யாரும் மெல்றதில்லை - அந்த விபத்து பற்றி விதவிதமாய்ப் பேசிய பேச்சு அடங்கிப் போச்சு - இப்ப மறுபடி அத்தனையையும் கிளறணுமா? கிளறினாலும் ஒவ்வொருத்தராப் போய்ச் சொல்லப் போறீங்களா? சொன்னாலும் எத்தனை பேர் நம்புவாங்க? என்ன நிரூபணம் உங்களிடம் இருக்குது? ஆக சும்மா விட்டுரு. ராகினி..."

"நீங்க என் அண்ணனோட நண்பர் - இதிலே எனக்கு உதவுவீங்க, இல்லை ஆதரவாய்ப் பேசுவீங்கன்னு எதிர்பார்த்தேன்.." கோபத்துடன் பேசினாள்.

தோளைக் குலுக்கினான்.

"இங்குள்ள நிலமையைச் சொன்னேன்."

மறுபடி ஒட்டகத்தின் மேல் ஏறினார்கள்.

ஒட்டகக் குலுங்கல் இம்முறை அவளைப் பயப்படுத்தவில்லை.

அவள் மனம் துணிந்து விட்டது.

## 9

'கழுதை கெட்டால் குட்டிச் சுவர்' என்பதுபோல, ராகினி மறுபடி வீட்டின் பின்புறமுள்ள தெருவில் இறங்கினாள்.

இருபுறமும் வீடுகள் மௌனமாய் நின்றன.

அந்த அமைதி ஏனோ அச்சுறுத்தியது.

பத்து, இருபது ஏன் நூறு, இருநூறு ஆண்டுகளுக்கு முன்புகூட இந்த இடம் பேச்சும் ஜீவனுமாய்க் குலுங்கியிருக்கும்.

இன்று ஜீவகளை தொலைத்த மரண அமைதி.

இதைக் கலைக்க மரங்கள்கூட இங்கில்லை.

உயரமான கட்டிடங்களின் வேலைப்பாடான சாளரங்கள் கண்மூடி நின்றன.

பலகணிகளில் முக்காடிட்ட முகங்களில்லை.

திண்ணைகளில் தோல் சுருங்கிய முதியவர்களில்லை.

மண்சாலையில் ஓடித்திரியும் கோழிக் குஞ்சுகள், ஆடு மாடுகள் எதுவுமில்லை. வெற்று வெறுமை.

மனக் கண்ணில் அம் மயானத் தெருவில் ஜீவன்களை உருவாக்க அவள் முயன்று கொண்டிருந்தபோதுதான், முதுகில் ஏதோ விழுந்தது.

திடுக்கிட்டுப் போனாள் - புறாச் சிறகானது நெஞ்சம்.

மெள்ள சுற்றிலும் பார்த்தாள்.

வீடுகள் அவளை மௌனமாய் முறைத்தன.

திரும்பி விட வேண்டியதுதான்.

திரும்பி நடக்க, மறுபடி முதுகில் 'டொப்' என்று ஏதோ விழுந்தது.

உதறியவள் குனிந்து பார்த்தாள்.

சின்னப் பாசிமணி.

குனிந்து பொறுக்க, சன்னமாய்ச் சிரிப்பொலி கேட்டது.

துணுக்குற்றுச் சுற்றிலும் பார்த்தாள்.

மாயாவியின் மாயாஜாலமா?



காலை எட்டிப்போட, மறுபடி ஒரு பாசிமணி வந்து விழுந்தது.

இம்முறை குறி தவறி அவள் முன்னே...

இதற்கு அஞ்சி ஓடுவது மடமை.

ஒவ்வொரு ஜன்னலாய், இரண்டு இடுக்குகளை உன்னிப்பாய்க் கவனித்து நடந்தாள் - பரட்டைத் தலையும் நீல ரிப்பனும் கண்ணில் பட்டுவிட்டது.

"மோனா - உன்னைப் பாத்துட்டேன் - வெளிய வா!" - உரக்கச் சொன்னாள்.

பதிலில்லை.

"விளையாட்டு போதும் - வாயேன்." குரலில் சற்று இனிப்புத் தடவி.

மோனா பதில் தந்தாள்.

"வரேன்க்கா."

சின்ன இடைச் சந்திலிருந்து வெளிப்பட்டாள் குழந்தை - வெளிரிய முகம் மேலும் வெளுத்துக் கண்கள் பயந்து முழித்தன.

ராகினிக்குப் பாவமாய் இருந்தது -

"அடடே... பிரமாதமான ஒளிப்பிடம் வச்சிருக்கியே மோனா? என்னையும் கூட்டிப் போய்க் காட்டறியா?" சிரிப்புடன் கேட்டாள்.

சிறுமியின் கண்கள் தெளிந்தன.

"உங்களுக்கு ஆசையாயிருக்கா?"

"ஆமா, ஆனா நீ ஸ்கூல் போகலியா?"

"ம்ஹூம்..."

"தப்பாச்சே, குட்டி."

"ரவி மாமாவும் இப்படியேதான் சொல்லுவாங்க. ஆனா எனக்கு இங்கிருந்து விளையாடத்தாம் பிடிக்கும்."

"பிடிக்கிறதையே எப்பவும் செய்திட்டிருக்க முடியாதே. குட்டி படிக்கற வயசில் பிடிக்குதோ இல்லையோ - படிக்கறதுதான் நல்லது."

"இப்ப ஸ்கூல்ல வகுப்பு நடக்கலைக்கா - வர்ர வெள்ளிக் கிழமை விளையாட்டுப் போட்டி. நேத்திலிருந்து அதுக்காகப் பயிற்சிதான் நடக்குது. எனக்கு ஓடினால் மூச்சிரைக்குது - கடைசியா வருவேன் - அதான் இங்க உட்கார்ந்து விளையாடறேன்."

"பாரதி - 'ஓடி விளையாடு பாப்பா'ன்னாரே! அதுதான் உடம்புக்கு வலு. முடியலைன்னா - ஏம் முடியலைன்னு டாக்டர்கிட்ட போய்ப் பார்த்துச் சரி செய்துக்கணும்..."

"ம்ப்ச்... ஊசி போடுவாரு... கை வலிக்கும்..."

"சரி. இப்ப உன் வீட்டைப் பார்க்கலாமா? இத்தனை தூரம் வந்தவளை வீட்டின் உள்ளே கூப்பிட மாட்டேங்கறியே!"

"கூப்பிடலாம்... ஆனா இதுவரை இங்க யாரும் வந்ததில்ல..."

"ரகசிய வீடாக்கும்!" குரலைத் தணித்துக் கேட்டாள் ராகினி.

"ம்ம்... யாருகிட்டேயும் சொல்லமாட்டீங்கன்னா உள்ள கூட்டிப் போவேன். ஏன்னா உங்களை எனக்குப் பிடிச்சிருக்குது..."

"யார்கிட்டவும் சொல்லலை..."

"சாமி சத்தியமா?"

"சரிங்க பெரியம்மா - நிச்சயமா சொல்லலை."

இவள் கைப்பிடித்துச் சந்துக்குள் அழைத்துப் போனாள் மோனா.

ஒரு வீட்டின் சாளரத்தைத் தள்ளித் திறந்து ஏறிக் குதித்தாள்.

"ஐயோ... இது யார் வீடு - இப்படி திருட்டுத்தனமாய் நுழையறது... வேணாம்டீ..."

மோனாவின் முகத்தில் மறுபடி ஒரு கலவரம் தெரிந்தது.



"நா... நான் எதையும் எடுத்துட்டுப் போலியேக்கா? - சும்மா விளையாடுவேன். உள்ள சோவி, செப்பு சாமானெல்லாம் வச்சிருக்கேன் - வந்து பாருங்களேன்..."

சிறுமியை ஏமாற்ற மனமில்லாமல் ராகினியும் வீட்டினுள் ஏறிக் குதித்தாள். காற்றோட்டமில்லாத அடைசல் நெடி.

ஒடுங்கிய மரப்படிகளில் ஏறினார்கள்.

"மேலேருந்து பால்கனி வழியாப் பார்த்தா குஷியா இருக்கும். ஆனா அதுக்காய் திட்டு வாங்கியிருக்கேங்க்கா."

"அங்கேருந்து பாசிமணி எறிஞ்சிருப்பே."

"இல்ல... ராஜன் மாமாவும் பானுக்காவும் இங்க வந்து பேசினதை நா ரவிமாமாட்ட சொன்னேன் - பிறகுதான் அவங்களுக்குக் கல்யாணம் பேச ஆரம்பிச்சாங்க."

ராகினி சுவாரஸ்யமானாள்.

"பெரிய மனுஷி வேலையெல்லாம் செய்திருக்கே."

"முதல்ல ரவிமாமா பானுக்காவைத் திட்டினாங்க. பிறகு பரவால்லைன்னு நிச்சயம் பண்ணிட்டாங்களாம். ஏன்னா ராஜன் மாமா ரொம்ப நல்லவங்கல்ல?"

காதில் தேன் பாய்ந்தாற் போலிருந்தது ராகினிக்கு.

ஆக இருவரிடையே ஏற்பட்ட காதல் மோனா மூலமாய்த் தான் வெளிச்சங் கண்டிருக்கிறது.

"ஆனா நீ எங்கேயும் இனிமே ஏறி நின்னு வேவு பாக்க வேணாம்னுட்டாங்க ரவிமாமா... நீங்க இதை... அவங்ககிட்ட சொல்ல மாட்டீங்களே?"

"பெரியவங்க பேச்சு கேட்காதது தப்பு, மோனா - அவங்க வேண்டாங்கறதை நாம் ஏன் செய்யணும்?"

"தப்பில்லயே... நா பாட்டுக்கு விளையாடறேன்... நீங்களும் என்னைத் திட்டாதீங்கக்கா."

சிறுமியின் செப்பு உதடுகள் துடிக்க, கண்கள் கலங்கின.

"சரி, இப்ப சொல்லலை - ஆனா நீ வீட்டிலேயே இருந்து விளையாடு - இங்கு உனக்கு ஏதும் ஆச்சுன்னா... யாருக்கும் நீ எங்க இருக்கேன்னுகூடத் தெரியாதே..."

"இதவிட சூப்பரா ஒரு இடமிருக்கே - அங்க நாம் போனா யாருமே கண்டுபிடிக்க முடியாது..." வீம்பு பேசினாள் மோனா.

"தனியே போகாதேன்னு சொன்னேன்." கண்டித்தாள் மூத்தவள்.

"சரிக்கா - ஆனா அங்கியும் விளையாட்டுச் சாமான்கள் நிறைய வச்சிருக்கேன் - உங்களுக்கு மட்டும் காட்டட்டுமா?"

ரகசியத் தொனியில் கேட்டாள்.

"இப்ப வேணாம். பால்கனியில் உக்காருவோம். வா. காற்றாவது வரும்."

"உக்காந்தா ஜில்லுனு இருக்குங்க்கா."

பால்கனியை ஒட்டிக் கட்டப்பட்டிருந்த கல் தலைமுறைகள் உட்கார்ந்து பளபளப்பேறி வழவழவென்றிருந்தது.

அமர்ந்தனர்.

"அது சரி - டாக்டர்கிட்ட ஏன் போகமாட்டேங்கனும் நீ?"

"சும்மாதான் - போனால் ஏதேனும் சொல்லுவாங்க..."

"அப்படீங்களா? அப்படி என்ன சொல்லுவாங்க?"

"எங்கூட கௌரவ்னு ஒரு பையன் படிச்சான். போன வருஷம் ஸ்கூல்ல டாக்டரெல்லாம் எங்களை வந்து டெஸ்ட் பண்ணாங்க அவனுக்கு... நெஞ்சுல... ம்ஹூம்.. இதயத்துல ஓட்டைன்னு கண்டுபிடிச்சு... பிறகு ஆபரேஷன்கூட ஆச்சு... ஆறுமாசம் ஸ்கூல்க்கு வரவேயில்லை அவன்..."

"இப்போ எப்படியிருக்கான்?"

"தெரியலை... அவங்கப்பாவுக்கு குஜராத்துக்கு மாத்த லாயிடுச்சு."



"நல்லாயிருப்பான் - முன்னையை விட ஆரோக்கிய-மாயிருப்பான்."

"ம்ம்..."

"ஒழுங்கா சாப்பிட்டாலே மருந்து தேவையிருக்காது."

"எனக்குப் பருப்பு சாதம்னா பிடிக்கும்... அக்காதான் சமைக்கறதேயில்லையே - எப்பவும் ரொட்டி ஜாம்தான். ராத்திரிக்கு பழம் பால்... இப்படி."

"இன்னைக்கு உன் வீட்டில் நாம சமைக்கலாமா?"

"நிஜம்மாவா... இல்ல, சும்மா விளையாட்டுக்கா?"

"சாப்பிடற மாதிரி ஏதேனும் சமைக்கலாம்!"

சொன்ன பிறகுதான் இதை யெல்லாம் இழுத்துப் போட்டுச் செய்வது அதிகப் பிரசங்கித்தனம் என்று பட்டது.

ஆனாலும் மோனாவின் ஆனந்தமான ஆச்சரியம், பின்வாங்க முடியாமல் அடித்தது.

"இப்ப... என் சமையலை மூட்டை கட்டிடறேன்."

"அதென்ன உஞ்சமையல்?"

"சோவி, பாசி, சாக்கட்டி எல்லாங் கலந்து கூட்டாஞ்சோறு ஆக்கிட்டிருப்பேன்." தன் சொப்புகளைச் சேகரித்து ஒரு பனைபோல பெட்டிக்குள் வைத்து மூடினாள்.

"யாருக்கும் உன் ரகசிய இடம் தெரியாதா குட்டி?"

"ம்ஹூம்... யாரும் இந்தப் பக்கம் வர்றதில்லை... பானுக்காவைத் தவிர..."

பால்கனியை ஒட்டிய கல் இருக்கையில் தாயம் வரைந்திருந்தார்கள். மாலைப் பொழுதுகளில் பல பெண்களின் பொழுது இங்குதான் கழிந்திருக்கும்.

கீழே வேடிக்கை பார்த்து, தங்களுக்கும் பேசிக் களித்தபடி விளையாடியிருப்பார்கள்.

தொலைவில் ஸ்கூட்டர் சத்தம் கேட்டது.

"ஐயோ! சுரேந்தர்ண்ணா வந்தாச்சு போல... நாம போலாங்க்கா இந்த இடத்தைப் பத்தி மூச்சு விடாதீங்க. சரியா?"

"விடலை."

தடுமாற்றத்துடன் படிகளில் இறங்கி, சாளரம் வழியே ஏறி வெளியே குதித்தனர்.

"என்வீடு பிடிச்சிருந்துதாக்கா?"

கிசுகிசுப்பாய்க் கேட்டாள் மோனா.

"ம்ம் - ஆனா இனி நா இங்க வர்ரதாயில்லை."

மிக விரைவில் தான் இங்கு ஒரு இரவைச் சஞ்சலத்துடன் கழிக்கப் போவது தெரியாமல் இப்படிச் சொன்னாள் ராகினி.

## 10

மறந்து வைத்துப் போன ஏதோ ஒரு பொருளை எடுக்க வீடு வந்த சுரேந்தர் ஐந்தாம் நிமிடம் கிளம்பிவிட, ராகினி சமையலில் இறங்கினாள்.

பருப்பு, பெருங்காயம், தக்காளி என்று இவள் கேட்டதை எல்லாம் மோனா தேடி எடுத்து நீட்ட, அரைமணியில் சாம்பார் கமகமத்தது.

உருளைக் கிழங்கு வறுபடும்போதே மோனா அவ்வப்போது ஒரு துண்டை எடுத்து ஊதி ஊதி விழுங்கினாள்.

"நீங்களும் சாப்பிடணுங்கா!" கெஞ்சிய சிறுமிக்காகத் தானும் இரண்டு வாய் சாப்பிட்ட பின், மோனா வரைந்த படங்களைப் பார்த்தாள்.

சித்திரம் கைப்பழக்கந்தானே - பழகியதால் சித்திரக் கலை சிறுமிக்கு வசப்பட்டிருந்தது - பூக்களும், வீடுகளும், பிராணிகளும் அழகாகவே வந்திருந்தன காகிதத்தில்.



பாராட்டுடன் ஒவ்வொன்றாய்ப் பார்த்தபோதுதான் அது கண்ணில் பட்டது. மோனா வரைந்த முயல் படத்தின் பின்புறம் தெரிந்த எழுத்துக்கள்.

'தகவல்கள் கிடைத்தன - நன்றி.'

- பானு

மிகச் சிறிய துண்டுச் சீட்டில் பளிச்சென்ற கையெழுத்து.

"மோனா, இதை எப்ப வரைஞ்சே?"

"முயலை நேத்துதான் போட்டேன் - நல்லாயிருக்கா?"

"கொஞ்சலாம் போலேயிருக்குது."

"சோனாக்கா கழுதை மாதிரியிருக்குன்னாங்க. காது சரியில்லையோ?"

ஆக பானு வெகு தொலைவில் இல்லை. அவளுக்குத் தினம் அல்லது அடிக்கடி தகவல்கள் போகின்றன - சுரேந்தர் மூலம்.

அண்ணனை விட்டுவிட்டு வேறொருவரைத் தகவல்களுக்காக ஏன் பானு நாட வேணும்?

இதை ரவிசந்திரனிடம் காட்டினால்...?

முழுத் தவறும் ராஜன் மீதில்லை என்பதை இது ருசுப்படுத்துமோ?

"க்யூட் முயல் - இதை நான் வச்சுக்கலாமா, மோனா?"

என்ற ராகினி அத்துண்டுச் சீட்டை அமுக்கிக் கொண்டாள்.

மதியம் இரண்டரை போல வீடு திரும்பினாள்.

மூன்று நிமிட நடைதான்.

நேற்றிலிருந்து ரவிசந்திரன் வீட்டில் விருந்தாளியாகத் தங்கியும்கூட அவனைத் தவிர்த்தாயிற்று. இனியும் ஒருவாரம் இங்கு தங்குவது... சிரமம்தான். ரயில் நிலையம் போய் ஊர் திரும்ப பயணச் சீட்டு கிடைக்குமா என்று பார்த்தால் என்ன?

போனதும் பரிமளத்தைக் கேட்டால் ஒரு ஆட்டோ வரவழைத்துத் தருவார்கள் - போய்ப் பார்த்து விடுவது.

இதே யோசனையாய் வீட்டினுள் நுழைந்தவளை வரவேற்றது ரவிசந்திரன்தான்.

"சாப்பிடலாமா?" என்றவனை வியப்பாய்ப் பார்த்தாள்.

"நீங்க சாப்பிட்டிருப்பீங்கன்னு நினைச்சேன்..."

"காலைல ரொம்ப சீக்கிரமாய் அலுவலகம் போக வேண்டியிருந்தது. வெளிநாட்டுக்கு ஏற்றுமதி ஆகவேண்டிய ஒரு ஆர்டர் சம்பந்தமாய் நாமே பார்த்துச் செய்தால்தான் நல்லது அதான் சொல்லிட்டுப் போக முடியலை. மன்னிக்கணும்."

"ப..பரவாயில்லை."

"ஒன்றரைக்கெல்லாம் வீடு வந்துட்டேன்."

"இத்தனை நேரம் எனக்காகவா காத்திருந்தீங்க?"

"பரவாயில்லை, ராகினி - ஜெய்ஸல்மர் கோட்டை உலகப் பிரசித்தம். உங்களைக் கூட்டிப் போய்க் காட்டணும்னுதான் காத்திட்டிருக்கேன்."

"இல்ல... நேற்று 'ஸாம்' போய் வந்ததே களைப்பா இருந்தது" தவிர்க்க முயற்சித்தாள்.

"சாப்பிட்ட பிறகு படுங்க - ஆறு மணிபோல போகலாம். இருட்டினதும் கோட்டையைச் சுற்றி விளக்குகளை எரிய விடுவாங்க. பார்க்கறவங்க அசந்து போவாங்க. ஆறாயிரம் பேர் உள்ளே வசிக்கிறாங்க. உள்ளே பள்ளி, கடைங்க, சில ஹோட்டெல்கள்கூட உண்டு."

"அடடே... அப்ப வீடுங்ககூட இருக்கணுமே?"

"நூறு குடும்பங்களுக்கு மேலே உள்ளே வசிக்கிறாங்க. தவிர அங்கேயிருக்கற ஜெயினர்களின் ஆலயம் ரொம்ப விசேஷம். அசாத்திய வேலைப்பாடு - அவசியம் பார்க்கணும் நீங்க... நீ..."



"நன்றி - உங்க வேலையெல்லாம் கெடுத்துட்டு... நான் இப்ப ஸ்டேஷனுக்குப் போகலாம்னு இருந்தேன். ஊர் திரும்ப கொஞ்ச முன்னமேயே டிக்கெட் கிடைக்குமான்னு பார்க்க..."

"இன்னும் ஒரு வாரத்தில் கிளம்பறதாய் இருக்கீங்க?"

"ஆமா... அதுக்கு முன்னயே..."

"அத்தனை மோசமா எங்க விருந்தோம்பல்?"

சற்றே புருவம் தூக்கி அவன் கேட்டது அவளைச் சங்கடப்படுத்தியது.

"இல்லையில்லை... இங்க ராஜன் நினைப்பு அதிகமாய் வருது. தவிர ஊரிலே அப்பா எப்படியிருக்காங்கன்ற கவலை."

"தினம் ஃபோன்ல பேசுங்க..."

"பரவாயில்லை - எனக்குமே வீடு திரும்பினால் தேவலைன்னு... நான் ஹாஸ்டல்ல கூடத் தங்கினதில்லை... அதான்..."

"கல்யாணமான பிறகு எத்தனை தொலைவுன்னாலும் அவரோடதான போவீங்க?"

குறுஞ் சிரிப்புடன் வந்த கேள்வி அவளைக் கூச்சப்படுத்தியது.

"ம்ம்... சென்னையிலேதான் ஸெட்டில் ஆகிற மாதிரி பார்க்கணும் - அப்பாவைத் தனியே விட்டுட்டு நிம்மதியா என்னால இருக்க முடியாது."

ஒரு நிமிடம் யோசித்தான்.

"நீங்க ஒரு நல்ல மகள் - நல்ல தங்கையுங்கூட..."

"குடும்பத்தில் இந்தப் பாசம் இயல்புதானே?"

மேஜைமேல், கேஸரோல்களில் உணவு சூடாக இருந்தது. பரிமளத்தைக் காணவில்லை. இருவரும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டு சாப்பிட ஆரம்பித்தனர்.

"தெரியலை. என் பெற்றோர் இல்லாததால நான் பானுவுக்கு அதிகச் செல்லங் கொடுத்திட்டேனோன்னு தோணுது. அவளுக்கும்

எனக்கும் ஏறக்குறையப் பத்து வயசு வித்தியாசம் - ஆக அவள் தன் இஷ்டம் போல வளர்ந்துட்டா."

"பிறந்த வீட்டிலே பெரும்பாலான பெண்கள் செல்லமாத்தான் வளருவாங்க - அதுல தப்பில்லை..."

அவன் மேலும் ஏதோ சொல்ல நினைத்து, பின் மனம் மாறியது போலப் பேச்சை மாற்றினான்.

ஒருவருக்கொருவர் தங்களது படிப்பு, வேலை, விருப்பு வெறுப்புகள் பற்றி பேசப் பேச நெருங்கி விட்டாற் போலத் தோன்றியது.

உடன் பிறந்த ராஜனைத் தவிர பிற இளம் ஆண்களுடன் அவள் இப்படி இயல்பாய்ப் பேசிப் பழகினதில்லை.

சற்று நேரம் முன்பு வரை அவனைத் தவிர்க்க முயன்றவள் இப்போது நேரம் போவது தெரியாமல் பேசினாள்.

அவன் தொழில் நுணுக்கங்களை ஆர்வமாய்க் கேட்டறிந்தாள்.

இவளது கேள்விகளுக்கு அவன் உற்சாகமாய்ப் பதில் சொல்ல, பரிமளம் இருவருக்கும் காபி கொண்டு வரவும்தான் மாலையாகி விட்டது உறைத்தது.

"ஐயையோ... உங்க வேலையைக் கெடுத்திட்டேன் போல..."

"இல்லை... எனக்கிது தேவையான மாற்றம். ஏழு மணிக்குத் தயாராயிருங்க. வெளியே போய் அப்படியே சாப்பிட்டு வரலாம்."

அவன் இருந்தபோது நிமிஷமாய்க் கழிந்த பொழுது இப்போது ஊர்ந்தது.

பத்து நிமிடங்களுக்கு ஒரு முறை தான் கடிகாரத்தைப் பார்ப்பதை உணர்ந்த போது... நெருடியது.

நேற்று ஏறக்குறைய சண்டையிட்டவனுடன் இன்று சேர்ந்திருக்க ஏனிந்த விநோத ஆசை?



புரியாத உணர்வு... ஆனால் பிடித்திருந்தது. அப்பாவிடம் பேச வேண்டும் போலிருக்க, தொடர்பு கொண்டாள்.

இவள் சொன்னவற்றைக் கேட்டுக் கொண்டவர், நெடுநாட்கள் கழித்துப் பார்க்க நேர்ந்த தன் பால்ய நண்பனைப் பற்றி சற்று உற்சாகமாகவே பேசினார்.

நிம்மதியாய்ப் போனது.

அங்கிருந்த ஸி.டி.யில் பழைய பாடல்கள் கொண்ட டிஸ்க்கை செருகிவிட்டுப் படுத்தாள்.

வெறும் நீல நிற விடிவிளக்கு மட்டும்தான்.

அதன் வெளிச்சத்தில்,

"உன்னை நான் சந்தித்தேன்

நீ ஆயிரத்தில் ஒருவன்"ஐக் கேட்டவளின் உடம்பு முழுக்க குறுகுறுத்தது.

இத்தனை தொலைவில் இருப்பவனைச் சந்திச்சுப் பேசிப் பழகுவதுதான் தெய்வ சங்கல்பமோ?

ஏழிற்குத் தயாராக வரவேற்பறைக்கு வந்தாள்.

அவள் முகம் தனி சோபையுடனிருந்தது.

முகத்திற்கு அழகு ஊற்று மனசுதானே...!?

அதன் சந்தோஷமோ, சஞ்சலமோ தானே முகத்தில் தெரியும்...

செய்தித்தாளை வாசித்துக் கொண்டிருந்தவன் இவளைக் கண்டதும் துடிப்பாய் எழுந்தான்.

அவன் பார்வை அவளை முழுமையாய் அளைந்தது.

"சேலைதான் பெண்களுக்கு அழகு!" என்றான்.

"ம்ம்... நான் எப்பவும் சேலைதான் - பிரயாணத்துக்காக ஒரு ஸல்வார் கொண்டு வந்தேன் - அதுகூட ராஜன் வாங்கித் தந்ததுதான்."

“ஸல்வார்தான் வசதியான உடை... இல்லியா?”

காரில் ஏறியபடி சம்பாஷணை தொடர்ந்தது.

“நான் அப்படி நினைக்கலை - சேலை கட்டிப் பழகினா அதைவிட வசதி வேறில்லை...”

“பிரயாணத்திற்கு வசதின்னு?”

“இந்த ஸல்வாரைப் பயன்படுத்தணுமேன்னு எடுத்து வந்தேன். மற்றப்படி எப்பவும் சேலைதான் சௌகர்யம். தோள்பட்டையிலே ‘பின்’ பண்ணி, முந்தானையின் ஒரு முனையை எடுத்துச் செருக்கிட்டா பஸ்ஸிலே போகவும் வசதி. வீட்டு வேலை செய்யும்போது மொத்தமாய் இழுத்துச் செருகிக்கிடலாம். குளிர்ந்தால் இழுத்துப் போர்த்திக்கலாம் - வெயிலடிச்சா முக்காடாய்ப் போடவும் தோது...”

“இத்தனை முழப் புடவையிலே வியர்க்குமே...?”

“முந்தானையை விசிறியாக்கிடலாம்!” - விசிறிக் காட்டினாள்.

சிரித்தான்.

“சேலையா - ஸல்வாரா?ன்னு பட்டிமன்றம் நடந்து உன்னைச் சேலை அணியின் தலைவியாப் போட்டுட்டா வெற்றி நிச்சயம்...”

“எங்க சேலை அணிக்குத்தானே?”

“ஹா...ஹா! நிச்சயமா!”

வாய்க்கொள்ளாத சிரிப்பில் வெகு இளையவனாய்த் தோன்றினான். பொதுப்படையான பேச்சு இருவரையும் தளர்த்தி விட, தோன்றியதை எல்லாம் பேசினர்- கருத்துக்களை உற்சாகமாய்ப் பகிர்ந்தனர்.

கோட்டையைப் பார்த்து மலைப்பில் உறைந்துவிட்டாள் ராகினி. மஞ்சள் ஒளியில் குளித்து நின்ற அப்பிரமாண்ட கோட்டையின் கம்பீரம் உன்னதமாயிருந்தது.

“உள்ளே அரண்மனையும் இருக்குமில்லையா?”



“ஆமா - அரண்மனையின் ஒரு வாசல் மிக முக்கியமானது. அது ராணிகள் முதன் முறையாய் ... அதாவது மணப் பெண்ணாய் நுழையும்போதும், கடைசிமுறையாய்ப் போகும்போதும் மட்டும் பயன்பட்டதாம்.”

“கடைசி முறைன்னா... அவங்க இறந்த பிறகா?”

“ஆமா... இல்லைன்னா கணவர் இறந்த பிறகு சதிக்காக அவர்கள் வெளியேறும்போது...”

“கடவுளே... கணவனை இழப்பதே கொடுமை. அதில் இது வேறா?”

“சதிக்காக அலங்கரிக்கப்படுவார்கள் போல. மருதாணியிட்ட அவர்களின் கைத்தடயங்கள் இன்னும் அந்த வாசல் சுவர்களில் பதிந்திருக்குது.”

“இப்ப... நாம பார்க்கலாமா?”

“ஓ! கோட்டை 24 மணி நேரமும் திறந்தே இருக்கும். அதினுள்ளே இருக்கும் உணவகத்திலேயே நாம சாப்பிடலாங்கூட...”

கோபுர உச்சியிலிருந்த உணவகத்தில், அவ்வூரின் இரவு நேர ஜாலத்தோற்றத்தை ரசித்தபடி சாப்பிட்டபோது அவள் மனம் நிரம்பிக் கிடந்தது.

ரவியின் கண்கள் தன் மேல் நிலைக்கும் போதெல்லாம் உடம்பு சிலிர்த்தது.

அந்நிமிடத்தின் நிறைவைத் தவிர வேறு உணர்வே யில்லை.

## 11

காலை அவனிடம் துணிந்து கேட்டுவிட்டாள்.

“ரவி...நா...நம்ப... பானுமதியைப் போய்ப் பார்க்கலாமா?”

கோபப்படுவானோ?

'இனுக்கு இடம் தந்தால் முழுக்கத் தலையில் ஏறிக் கொள்கிறானே!' என்று சலிப்பானோ...?

"வேண்டாம்." - முறுவலித்தான்.

"சரி, வேணாம்."

"அதற்கு அவசியமில்லைன்னு சொல்றேன், ராகினி."

அவன் தன் பெயரை உச்சரிக்கும்போதெல்லாம் தனியே ஒரு தித்திப்பு தனக்குள்ளே படருவதையும் உணர்ந்தாள்.

"நான் அங்கே ராஜனைப் பற்றியெல்லாம் பேச மாட்டேன்."

"அப்படியா? அப்ப ஏன் போகணும்?"

"பானுமதியைப் பார்க்க - எங்கண்ணன் நேசிச்ச பொண்ணைப் பார்க்க - அவ்வளவுதான் - யாராவது ராஜன் நல்லவன், குற்றமற்றவன்னு நம்பணும்னா... அது நீங்க மட்டுந்தான்."

"என் அபிப்ராயம் உனக்கு அத்தனை முக்கியமா, ராகினி?"

காரணம் தெரியாவிடினும் தலையசைத்தாள்.

"நாம போக வேண்டாம்னு சொன்னதற்குக் காரணம் வேறு பானு நாளைன்னைக்கு இங்கே வர்ரா..."

"ஓ... சந்தோஷம், அப்ப அவங்களுக்கு முழுமையாய்க் குணமாயிடுச்சா?"

"நோய்னு அவளுக்கு ஏதுமில்லை - அமைதியான சூழலில் அவ மனசு சீக்கிரம் ஆறும்னுதான் எங்க குடும்ப டாக்டர் பண்ணை வீட்டில் அவளைத் தங்க வச்சேன், நேற்றிரவுதான் இந்த முடிவுக்கு வந்தேன்."

"ஏன் - திடீர்னு?"

"உங்கிட்ட பேசிப் பழகினது என் மனசுக்கே ஆறுதலாயிருந்துச்சு, ராகினி - பானுவும் உங்கிட்ட பேசணும், பழகணும்... அது நல்லதுன்னு தோணுச்சு... தவிர பானு வந்தால் நீ



இப்படி 'உடனே போகணும்'ன்னு பறக்கமாட்டேன்னு சின்ன நம்பிக்கை."

கண் சிமிட்டலுடன் புன்னகைத்தான்.

அப்பார்வையும் புன்னகையும் அவளுக்குள்ளே ஊசியாய் இறங்கி இம்சித்தன.

நேற்றுவரை கூண்டில் சிக்கின கிளி போல வெளியேறத் துடித்தவளுக்கு இன்று இது பறவையின் கூடாகத் தெரிகிறது. இன்பமும் பாதுகாப்புமான கூடு - ஏன்?

"அப்பாட்ட பேசினியா, ராகினி?"

"ம்ம்... உற்சாகமாய்கூடப் பேசினாங்க..."

"நல்லது - ஆக, இனி ஊருக்கு உடனே கிளம்பணுங்கற அவசரமில்லை?"

இப்போதே பாதி நாட்கள் கழிந்தாயிற்று - ஊருக்குக் கிளம்பும் நாள் சீக்கிரமே வந்துவிடும் - கலவரமூட்டியது இந்த உண்மை!

அதைவிட அவள் போய்விடக்கூடாது என்பதில் ரவி காட்டிய ஆர்வம் நெகிழ்த்தியது.

"என் அலுவலகம் வரை வாயேன், ராகினி - பிறகு மறுபடி கோட்டைக்குள் போய்ப் பார்க்கலாம், காலையில் நிறையக் கடைகள், ஆள் நடமாட்டம்னு கலகலன்னு தெரியும்."

"இப்ப... இப்பவா?"

"ஏன் - இது ராகு காலமா?"

"ச்சே - எனக்கதெல்லாம் தெரியாதே - மோனா வீட்டுக்கு வர்ரதாச் சொல்லியிருந்தேன்."

"ம்ம்... நேத்து சாப்பிட்ட சாம்பார், கிழங்கு கறி ஜோருன்னா!"

இவனுக்கு இதுகூடத் தெரிய வந்துவிட்டதா?

"என்ன - எல்லாம் தெரிந்த பரப்பிரம்மம் போல பார்க்கிறே?"

'இவன் தங்கை அனுப்பின துண்டுச் சீட்டு பற்றிக்கூட தெரியுமா?' என்று நினைத்தவள் -

"காலையிலே வந்து உப்புமா கிளறித் தர்ரதாய்ச் சொன்னேன்."

"சொன்னாள் - மோனாக்குப் பூரிக்கிழங்கு அனுப்பிட்டேன். பானுவைப் பற்றின கவலையிலே மோனாவைச் சரியா கவனிக்கலை, நான். இப்ப .... குழந்தை ரொம்ப மெலிஞ்சு தெரியறா?"

"ரெண்டு நாளாய் பள்ளிக்குப் போகலை - விளையாட்டுப் போட்டிக்கான பயிற்சிகள்தான் நடக்குதாம் - தன்னால் ஓட முடியலை - ஓடினால் மூச்சிரைக்குதுன்றா..."

ரவியின் முகம் சுருங்கியது.

"ரொம்பவே அவளைப் புறக்கணிச்சுட்டேன் போலிருக்குது. சுரேந்தருக்கும் நிலையான வேலை கிடையாது - எங்கீழே வேலை செய்ய அவன் விரும்பலை - சோனாவுக்குத் தங்கை மேல் அக்கறை கிடையாது. ஆக மோனா ஏறக்குறைய அநாதைதான்."

"அப்படி ஏன் சொல்றீங்க? நாம... நீங்க டாக்டர்கிட்ட அவளைக் கூட்டிப் போலாமே? பொதுவான பலவீனம்னு நினைக்கிறேன் - நேரத்துக்குச் சத்தாய்ச் சாப்பிடறதில்லை, சரியா தூங்கறதில்லை - அதான்."

"சரி அப்ப - இன்னைக்குச் சாயங்காலமே போயிடலாமா? ஒரு நிமிஷம் - நம்ப டாக்டர்கிட்ட எப்ப வர்றதின்னு கேட்டுடறேன்."

தொலைபேசியில் தொடர்பு கொண்டவன்,

"நாளை சாயங்காலம் வரச் சொல்றார், ராகினி," என்றான்.

"அப்படின்னா இப்ப மோனாட்ட அதுபற்றி ஏதும் சொல்ல வேணாம் - நாளைக்கு மெள்ள சொல்லிக்கறேன்."

"சரி, வரட்டுமா?"

அவன் கேட்ட விதம் அவளுக்குப் பிடித்திருந்தது.

"எனக்குத்தான் உப்புமா கிளறுற வேலையில்லையே - நானும் உங்களோடு வரட்டுமா?"



அவள் கேட்ட விதம் அவனுக்கும் பிடித்திருந்தது என்பது அவனது சிரிப்பில் தெரிந்தது.

பழங்காலப் பொருட்களை விற்கும் தன் அங்காடிக்கு அவளை அழைத்துச் சென்றான்.

மிக சுவாரஸ்யத்துடன் சுற்றி வந்தாள்.

80 வருடப் பழமையான அஞ்சறைப் பெட்டியின் அழகு கவர்ந்தது -

ஒவ்வொரு மசாலா சாமானின் அறைக்கும் ஒரு சின்னப் பூட்டு. அதில் ஒரு யாழி நாவசைத்தபடி -

"நாக்குக்குச் சுவையாய்ச் சமைக்கணும்னு சொல்லுதாம் இந்த யாழி!" விளக்கினான்.

"பித்தளையில்லையா... நல்ல கனம் - என்ன விலையிருக்கும் இது?"

"இருவத்தஞ்சாயிரம்."

பெட்டியை அதிர்ச்சியில் நழுவவே விட்டிருப்பாள் - "நிஜமாவா?"

"தொன்மைக்கு விலை அதிகம்தான் - அதிலும் இது போன்ற நூதனமான வேலைப்பாடெல்லாம் இப்ப கிடையாதே."

ஒரு நூற்றாண்டுக்கு முந்தைய ஜெர்மானிய லஸ்தர் விளக்குகள், காண்டாமணிகள், பூஜை விளக்குகள், புத்தகங்கள், தந்தச் சீப்பு... என்று தொட்டுத் தொட்டு ரசித்தாள்.

ஆனால் எதற்கும் விலையைக் கேட்டுக் கொள்ளவில்லை.

கேட்டால்தான் நெஞ்சடைக்கிறதே...!

கோட்டைக்குள் போய்ச் சுற்றி வந்தவர்கள் அங்கிருந்த கடைகளில் ஒருவருக்கொருவர் பரிசு வாங்கித் தந்து கொண்டார்கள்.

ராகினி அவனுக்காக ஒரு அலங்கார மேஜை விளக்கை வாங்க, அதே நேரம் அவனும் அவளுக்காகத் தொன்மை அமைப்பிலிருந்த கால் சதங்கைகளை வாங்கியிருந்தான்.

வெள்ளியில் இழைத்த கனத்த கொலுசுகள்.

"எதுக்கு... இதெல்லாம்?"

"நீ எதுக்கு எனக்கு வாங்கினே?"

"உங்க வீட்டிலே சுகமாய்த் தங்கி, நேரத்துக்கு விதவிதமாய்ச் சாப்பிட்டுப் பொழுதைக் கழிக்கிறேனே - அது தவிர இப்படி வெளிவாசலுக்கு வேற கூட்டிப் போறீங்க... அதற்கு நன்றி சொல்வது போல... என் நினைவுக்காய்..."

"உன் நினைப்பு எப்பவும் இருக்கும், ராகினி."

அவளைப் பார்த்துச் சொன்னான்.

இவளுக்குத்தான் அந்தப் பார்வையை எதிர்நோக்கும் திராணியில்லை. குனிந்து கொண்டாள் - பிடரியில் விநோதக் குறுகுறுப்பு...!

"இந்தக் கொலுசுச் சத்தம் என்னை நினைவூட்டுமில்லையா?"

'எனக்கு மட்டும் மறந்தா போகும்?' என்று நினைத்தாலும், சொல்ல நா எழவில்லை.

"ம்ம்... நன்றி!" மட்டும்தான் சொல்ல முடிந்தது.

அன்று மாலையும் அவன் வெளியே போகவில்லை - டி.வி.யை ஓடவிட்டு விட்டு இலக்கின்றி ஏதேதோ பேசியபடி இருந்தனர்.

"செஸ் விளையாடுவியா, ர்கினி?"

"சுமாராய். ராஜனளவு தெரியாது."

"நானும் ராஜனும் தினமும் விளையாடுவோம்."

ஆக இருந்தவரை இருவரும் நட்புடன் பழகியிருக்கிறார்கள். ராஜனின் திடீர் மரணம் - அதைச் சுற்றிய குழப்பம் - ரவிக்கும் அதிர்ச்சிதான் - என்ன இருந்தாலும் ராஜன் இவ்வீட்டின் மாப்பிள்ளையாய் வந்திருக்க வேண்டியவனில்லையா?



"விளையாடினால் - யார் ஜெயிப்பா?"

"மாறி மாறித்தான். ஆனா பானு பக்கத்திலிருந்தா நான் ஜெயிச்சிடுவேன் - ராஜனின் புத்தி அவமேலதான் இருக்கும்."

சொன்ன பிறகுதான் அவ்வாறு சொல்லியிருக்கக்கூடாதோ என்பது போல விழித்தான்.

ராகினி சமாளிக்கும் விதமாய் -

"காதல் வந்தால் அவ்வளவுதான்!" என, ஏனோ இருவர் முகங்களும் சற்றுச் சிவந்து போயின.

அந்நேரம் நுழைந்த சோனாலி இச் சூழலைச் சிறிதும் ரசிக்கவில்லை.

"என்ன ரவி, காலையிலே சீக்கிரமே போயிட்டீங்க போல... அவசரமாய் ஓடி வந்தேன் - பார்த்தா நீங்க இல்லை.." சிணுங்கினாள்.

"ம்ம்... வேலையிருந்தது, சோனா..."

விளையாட்டிலேயே கவனமாய் அவன் பதிலளித்தது. அவளை மேலும் எரிச்சலூட்டியது போலும்.

"கூட இவங்களும் வந்தாங்க போல.."

"அடடே, உங்களை அறிமுகப்படுத்த மறந்துட்டேன். மன்னிக்கணும். இது ராகினி - ராஜனுடைய தங்கை - இது சோனாலி. மோனாவுடைய அக்கா!"

"தெரியும்! உங்களைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டேன். முறையாய் அறிமுகமாகலை - அவ்வளவுதான்."

"எப்படியிருக்கு எங்க ஊர்?" - உரிமையாய் ரவியின் இருக்கையில் சாய்ந்தபடி கேட்டாள் சோனாலி.

"அற்புதமான ஊர் - மோனா இருக்கறதால எனக்குப் பொழுது போகுது..."

"உங்களுக்குப் பொழுது போறதில் என்ன சிரமம்? அதான் சதா ரவி உங்ககூட இருக்காரே! இத்தனை பவிசும் பணமுமாய் ஆண்பிள்ளை கூடவே இருந்தா நாளெல்லாம் நிமிஷந்தான்..."

விரல் சொடுக்கி சோனாலி சிரித்தது இருவருக்குமே பிடிக்கவில்லை.

"ரவி! நாளைக்கு நா உங்களோடதான் வரேன்..."

"ஆட்டோவுக்குப் பரிமளம்மாவைச் சொல்லி வைக்க சொல்றேன். சோனா. எனக்கு வேலையிருக்குது."

"யாரு... இவங்களோடவா?" நக்கலாய்க் கேட்டாள்.

ரவி அதைப் பொருட்படுத்தவில்லை.

"சாயங்காலம் வேணும்னா நீ எங்களோட வரலாம்."

"எங்க?"

"மோனாவை டாக்டர்ட்ட சின்ன செக்கப்பிற்காய் கூட்டிப் போறோம்."

"ஆளை விடுங்க - எனக்கு வைத்தியர், மருத்துவ மனைன்னாலே ஆகாது - அலர்ஜி."

தோளைக் குலுக்கிய சோனாலியைப் புருவம் சுருங்கப் பார்த்திருந்தான் ரவி.

## 12

ஒன்று, நிகழ்காலத்தை ரசித்து அனுபவிக்க வேண்டும். இல்லை, எதிர்காலத்தைப் பற்றியாவது திட்டத்துடன் கனவு காணலாம்.

இரண்டையும் விட்டுவிட்டு இறந்த காலத்திலேயே கிடந்து உழலுவதால் பிரயோஜனமில்லை - இது வெகு உண்மை - இதை மனதில் பதிய வைத்துக் கொண்டாள் ராகினி.



ராஜன் பேரில் விழுந்த அபவாதத்தை நீக்க வேண்டும்தான் -

ஆனால் அதற்காக நிகழ்கால நிம்மதியைத் தொலைத்து விடுவது புத்திசாலித்தனமில்லை. எதிர்காலத்திற்குரிய லட்சிய மாகவும் அது ஒன்றையே வைக்க முடியாது.

இந்தத் தெளிவு கிடைக்க, மனம் அடங்கிவிட்டது.

இறைவன் மீது பாரத்தை வைப்பது இலகுவாயிற்று!

கடவுளின் பொறுப்பு என்று விட்ட பிறகும் பாரத்தை நம் தோளில் சுமப்பானேன் என்ற ஆஸ்வாசம்.

மறுநாள் - பரிமளத்துடன் சேர்ந்து செட்டிநாட்டு உணவு வகைகளைத் தயாரித்தாள் ராகினி.

மோனாவை ஒழுங்காகச் சாப்பிடச் செய்து, கையில் நல்ல சாப்பாடு கட்டி, பள்ளிக்கு ரவியுடன் அனுப்பினாள்.

பானுவின் அறையைத் தானே முன்நின்று அலங்கரித்தாள்.

மாலை நான்கு மணிக்கெல்லாம் இருட்டிவிட்டாற்போலிருக்கு. பரிமளத்திடம் கேட்டாள்.

"இத்தனை நாளாய் இல்லாம இன்னைக்கு ஏனம்மா சீக்கிரம் இருட்டிடுச்சு?"

"புயல் வரும்னு... பேசிக்கிறாங்கம்மா."

"அது என்ன?"

"பேய்க் காத்து எதிர் எதிராய் நின்னு கபடி விளையாண்டால் எப்படி இருக்கும்? அது போல ஒரு ராவு அடிச்சுத் தள்ளும். மண்ணைச் சுழட்டி விசிறும்மா. அந்நேரம் வெளியே போனா வம்பு - கண்ணுல மண்ணு புகுந்துக்கும் - நாசில புகுந்தா அடுக்கடுக்கா தும்மல்தான் - யாரும் வெளியே போகமாட்டாங்க."

"இன்னுங்கூட இந்த ஊரில பாரம்பரிய உடையைப் போட்டுக்கறாங்களேன்னு ஆச்சரியப்பட்டேன். ஆனா இந்த சீதோஷ்ணத்துக்கு ஏற்ற உடை அதுதான். பொன்னுங்க முகத்தை

மறைச்சாப்பல முக்காடை இழுத்து விட்டுக்கறாங்க. ஆம்பிள்ளைங்க முழு சேலை தலையில் முண்டாசாகச் சுத்திக்கிறாங்க..."

"நீங்க சொல்றது சரிதாம்மா."

"அடர்த்தியான மீசைகூட இந்த மணலும் தூசும் நாசிக்குள்ள புக முடியாதுன்னு வச்சிட்டதுதானோ?"

இருவரும் சிரித்துக் கொண்டனர்.

செய்திருந்த பால் பணியாரத்தை மூடியிட்ட கிண்ணத்தில் எடுத்துக் கொண்டு கிளம்பினாள் ராகினி.

"பரிமளம்மா, இன்னைக்கு மோனாவை டாக்டர்கிட்ட அழைச்சிட்டுப் போறோம் - டிபன் கொடுத்து, உடுப்பு மாற்றி அவளை இங்க கூட்டிட்டு வந்திடறேன்."

"சும்மா பரிசோதிச்சுப் பாக்கவாம்மா?"

"ஆமா - பலகீனமாத் தெரியறா."

"நல்ல காரியம்மா. எப்படியிருந்த குட்டி - சதா பாட்டும் சிரிப்புமா மானாட்டம் வீடெங்கும் குதிச்சுத் திரியும்."

"இப்ப இங்க வர்ரதில்லையே..?"

"அதாம்மா ஏன்னு தெரியலை. உடம்பும் பாதியாப் போச்சு. வைரமாட்டம் முன்னை கண்ணு மின்னும் - இப்ப மங்கிடுச்சே."

"டானிக் குடிச்சா... சரியாயிடும்னு தோணுது."

"வேளை வேளைக்கு திருப்தியாச் சாப்பிட்டாப் போதுமேம்மா... ஒரு பருப்பு... காய்கறி... ம்ஹூம்... எதுவும் சமைக்காது சோனாலி. அது ஒட்டல்ல வேண்டியதைச் சாப்பிட்டுக்கலாம் - சுரேந்தர் தினம் இருநூறுக்குக் குறையாம சம்பாதிக்கற ஆம்பளை. அவனுக்குக் கிடைக்கறதைச் சாப்பிட்டுக்குவான். இந்தக் குட்டி முன்னே இங்க வரும் - இப்ப வர்ரதில்லை - ஆக வெறும் வரட்டு ரொட்டிதான் - நல்ல காரியம் - போங்கம்மா."



ஆனால் அடுத்த அரை மணி நேரத்தில் வீடு அமளிப்பட்டது. ஆளாளுக்குப் பதட்டத்துடன் அலைந்தார்கள்.

தனூர் பள்ளிக்கு ஓடினாள்.

"மணியடிச்சதுமே மோனா கிளம்பிட்டாளே!" என்றார்களாம். பள்ளியில் வந்து இறங்கியதும் விவரம் அறிந்த ரவி, தொலைபேசியில் பல எண்களைத் தட்டிப் பேசினான் - எதுவும் பலனில்லை.

"எங்க போனான்னு புரியலியே, ரவி - இத்தனைக்கும் நா சொல்லவேயில்லை - அதாவது அவளை டாக்டர்கிட்ட கூட்டிப் போறதை..."

"சோனாலிட்ட நாம சொல்லியிருக்கக் கூடாது."

அதற்குள் வெகுவாய் இருட்டிவிட்டது. காற்றின் வீச்சும் கூடியிருந்தது.

"இன்னைக்குப் புயல் காத்து போல ஏதோ..."

"ஆமா, ராகினி. இந்த முட்டாள் பொண்ணு எங்க போனான்னு தெரியலை - இனி தனியே திரும்பவும் முடியாது. ராத்திரி வெளியே இருக்கறதும் ஆபத்து..."

"ஐயோ... அப்ப கிளம்புவமே - ஆளுக்கொரு பக்கமாத் தேடலாம்."

"நீ எங்கேயும் கிளம்ப வேண்டாம், ராகினி - உனக்குப் பரிச்சயமில்லாத ஊரும், காற்றும் இது - வீட்டிலேயே இரு..."

ஏழு மணிக்கெல்லாம் முழு இருட்டு.

டார்ச்சும் போர்வையுமாய்ப் பல ஆண்கள் கிளம்பி விட்டனர்.

ராகினியுள் நெருடல். எங்கே போயிருப்பாள் குழந்தை? ஏதோ மறைவிடம் பற்றிப் பேசினாளே... வைத்தியரிடம்போகப் பயந்து அங்கு போய் ஒளிந்து கொண்டாளோ?

'இதைவிட ரகசியமாய் இன்னொரு இடமிருக்குது... சொப்பு சாமானெல்லாம் அங்கேயும் வச்சிருக்கேன் - எடுத்து வரவா?' என்று கேட்டாளே... ஒளிந்தால் ஆளில்லா அந்த வீட்டிலேயோ அல்லது அதை ஒட்டிய வேறொர் இடத்திலோ இருப்பதுதான் சாத்தியம்.

வெளியே குழந்தையைத் தேடப் போன ஆண்களிடம் சொல்லியிருக்க வேண்டும் - ம்ப்ச் - இப்போதும் என்ன... மூன்று அல்லது நான்கு நிமிட நடைதானே. போனால் போயிற்று.

ரவியின் எச்சரிப்பு நினைவு வந்தது.

கூடப் பரிமளத்தைச் சேர்த்துக் கொள்ளலாமா?

சமையலறைக்குப் பெண்களைத் தேடிப் போனாள் - 'கடாமுடா' சத்தங்கள் வந்த அங்கிருந்து.

பெரிய பாத்திரங்களில் சமையல் ஆகிக் கொண்டிருந்தது.

தனூர் மூக்கு உறிஞ்சியபடி வெங்காயம் அரிந்து தள்ளினாள்.

"என்ன பரிமளம்மா... அண்டாவெல்லாம் அடுப்பில் ஏத்திட்டீங்க?"

"தேடிப் போன மனுஷங்க எந்நேரமும் வரலாமேம்மா. போட்டது போட்டபடி போயிட்டாங்க. வெந்நீர் விளாவி திண்ணையில் வைக்கனும். வர்ரவங்க மண்ணு தூசியைக் கழுவிக்கத் தோது - ஏ - தனூர்! நாலு வெளுத்த துண்டை தயாரா எடுத்து வையி - தவிர அவங்க பசிக்கு ரொட்டி, தால், சப்ஜி தயாராகுதும்மா."

தொலைபேசி அலறலாய் அழைக்க, கையைத் துடைத்தபடி ஓடினாள் பரிமளம்.

"கர்த்தாவே ... நல்ல சேதி கேக்கணுமேப்பா..." என்றபடி

இரு பெண்களும் இப்போது வெளியே நகரமுடியாது. வீடு அவர்கள் பொறுப்பில்தான் - ஆக தான் தனியாகப் போய்விடுவது - என்று முடிவு செய்தாள் ராகினி.

வீட்டின் வாசல்கள், சன்னல்கள் யாவும் சாத்தப்பட்டிருந்தன. தான் தனியே போவதும்கூட ஒரு விதத்திற்கு நல்லதுதான் - பல



குரல்கள் கேட்டால் மோனா நத்தையாய் அஞ்சிச் சுருண்டு கொள்வாள்.

நைச்சியம் பண்ணி அவளை மீட்டுவர, தான் தனியே போவது உசிதம். சால்வையைப் பிரித்துச் சுற்றிக் கொண்டவள், வெள்ளைத் துப்பாட்டாவை முக்காடாக இட்டு, டார்ச்சுடன் கிளம்பினாள்.

பூனைப்பாதம் வைத்துப் பின்பக்கம் நகர்ந்தாள்.

பின் கதவை மெள்ளத் திறக்கவும்தான் காற்றின் வலிமை புரிந்தது.

இவளைப் பிய்த்தெறிந்துவிடும் ரௌத்திரத்துடன் ஆடினான் வாயு.

பயந்துவிட்டாள். இத்தனை கடுமையாய்ச் சுழலும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

மையிருட்டில் காற்று ஊளையிட்டது.

மோனா வீட்டின் முன் வாசலில் வெளிச்சமிருந்தது-

மின்சாரமும் விரைவில் வெட்டுப்படலாம்.

மனதுள் துணிவை நிரப்பினாள் - வெளிப்புறமாய்க் கதவைத் தாழிட்டு விட்டுப் படியிறங்கினாள் - மணல் பறந்து உடல் முழுக்க ஊசியாய்த் துளைக்க முயன்றது. மெல்லிய வெள்ளைத் துப்பாட்டாவின் வழியே மசமசப்பாய்த் தெரிந்த வழியில் நடந்தாள்.

துணியால் விழிகளைத் திறந்து முன்னேறினாள்.

இன்னும் சிறிது தூரம்தான் என்று தனக்கே தைரியம் சொல்லிக் கொண்டவள் அடர் இருட்டில் எல்லா வீடுகளும் ஒன்று போலவே தெரிந்தன. எந்தச் சந்தில் திரும்புவது?

திரும்பினாலும் சாளரத்தின் உள்ளே கொக்கியிட்டு மூடப்பட்டிருந்தால்?

"கடவுளே..." கண்களை இறுக்கிப் படைத்தவரைத் துணைக்கழைத்தாள். துழாவியபடி சந்துக்குள் நுழைந்தாள்.

பத்தடி எடுத்து வைக்க முழுசாய் இரண்டு நிமிடமாகியது.

இந்தச் சாளரம்தானே...? தள்ளிப் பார்த்தாள்.

ம்ஹூம்... பலங்கொண்ட மட்டும் குத்தினாள் - கை நொந்தது நான்கு குத்துக்களுக்கு மசிந்து கதவு விலகியது - உள்ளே ஏறிக் குதித்துச் சாத்தியதும் காற்றின் இரைச்சல் அறுந்தது.

"மோனா!"

வீட்டின் அமைதியில் இவளின் அழைப்பு எதிரொலித்தது.

இப்போது மூர்க்கமான காற்றில்லை - ஆனால் ஆளற்ற தெருவில், மௌனம் மட்டுமே நிறைந்த வீட்டில் இருப்பது அச்சுறுத்தியது.

டார்ச் ஒளியில் படி ஏறினாள்.

'க்றீச்'சிட்ட மரப்படிகள் கலக்கமூட்டின.

"மோனா!"

தன் குரல் தனக்கே அந்நியமாய்க் கேட்டது.

சுற்றி வந்தாள் - 'ஹோ' என்று மல்லாந்து கிடந்தன அறைகள்.

அத்தனை குளிரிலும் வியர்க்க ஆரம்பித்தது.

கால்கள் நடுங்கின - இல்லை - மோனா இங்கில்லை.

போய்விடலாமா?

வேறெதும் அறைகள்... அல்லது நிலவறை இருக்குமோ? பாதத்தால் சற்று சப்தமெழுப்பியபடி நடந்தாள் - குரலையும் உயர்த்தினாள் - பழைய முக்காலி ஒன்றில் இடித்துக் கொண்டு தடுமாறிய போதுதான் அந்தச் சத்தம் கேட்டது... சன்னமாய்.

இருதயம் ஒருகணம் நின்று பின் படபடத்தது.

"மோனா... நீதானா?"

"அக்கா... நாந்தான்..." குரலில் அழுகை கலந்திருந்தது.



"எங்க... எங்க இருக்கே நீ?"

"கீழ..."

"எப்படி வரணும்?"

"ஸ்டூல் பக்கமா தரையில் ஒரு கதவிருக்கும்."

முழங்காலிட்டுக் கைகளால் துழாவினாள் - தடவிப் பார்த்தாள். சத்தம் வேறுபட்ட இடத்தில் சிறு குழி கண்டுபிடித்து அதில் கை வைத்துத் தூக்கினாள் - பழங்கால மரக்கதவு."

உள்ளே சன்னமாய் வெளிச்சமிருந்தது.

"மோனா?"

"தோ இருக்கேன்."

"மேல வா"

"வர முடியலை..." கண்ணீரில் குழைந்திருந்தது குரல்.

"ஏன்... நீதானே இறங்கிப் போன - வழக்கமாய் வர மாதிரி ஏறி வா."

"இல்ல... இறங்கும்போது விழுந்திட்டேன் - காலு வலிக்குது. வீங்கிருக்குது."

'ஐயையோ... எலும்பை முறித்துக் கொண்டாளோ?'

"சரி... இரு வரேன் - கீழே டார்ச் இருக்குதா?"

"சிம்னி விளக்கு."

பால்கனிக்குப் போய் அதன் கைச்சுவரில் தன்னுடைய துப்பட்டாவைக் கட்டிவிட்டாள். சுவர் இடுக்கில் டார்ச்சையும் செருகி நிறுத்த அதன் ஒளியில் துணியின் வெண்மை பளிச்சென்று 'படபட'வென கொடி போலப் பறந்தது - முழு இருட்டில் துழாவி மோனாவின் இருப்பிடம் நோக்கி நகர்ந்தாள்.

ஒரு நபர் மட்டும் இறங்கக்கூடிய ஒடுங்கிய ஏணி. ஒரு வழியாய் இறங்கி மோனாவைப் பார்த்த ராகினி இளகிவிட்டாள். மோனா

மேலும் பரிதாபமாய்த் தெரிந்தாள். கண்ணீர் காய்ந்த குழந்தையின் கன்னங்களை வருடிவிட்டாள்.

"எங்க, காலைக் காட்டு?"

"வலிக்குதுக்கா?"

கணுக்காலின் பக்கம் நன்கு புடைத்திருந்தது.

தொட்டாலே சிறுமி அலறினாள் - பாதம் ஊன்றி நடக்க முடியாதுதான்.

"எதுக்கும்மா இங்கே வந்தே - டாக்டர்ட்ட போகணும்னா இப்படி ஒரு அசட்டுப் பயமா? இப்ப உன்னைத் தேடி எத்தனை பேர் இந்தப் புயக் காத்துல அலையறாங்க தெரியுமா? வா - இடுப்புல வச்சு மேலேறிடுவேன்..."

"இல்ல... வேணாம்..."

"சரி - டாக்டர்ட்ட போகலை - வீட்டுக்குத்தான் போய் உடம்பு கழுவி சூடாய் சாப்பிட்டுட்டு படுத்துக்கலாம்."

"டாக்டருக்கெல்லாம் பயமில்ல..."

"சரி - அப்ப?"

"நாளைக்கு வர்ராங்கல்ல?"

"யாரு?"

"பானுக்கா... வீட்டுக்கு வர்ராங்கல்ல?"

"ஆமா."

"அதுக்குப் பயந்துதான் நா வந்து ஒளிஞ்சுக்கிட்டேன்."

இதென்ன புதுக்கதை?!

"அவங்களுக்குத்தான் உன் ரகசிய பால்கனி எங்கயிருக்குன்னு தெரியுமே..."

"ஆனா இந்த இடம் யாருக்கும் தெரியாது. ஆனா இப்படி இன்னொருத்தர் வீட்டுக்குள்ளே நுழையறது தப்புன்னு திட்டுவாங்க."



"அது சரிதான். இப்படி ஜன்னலின் வழியே இன்னொருத்தர் வீட்டுக்குள்ளே ஏறி குதிக்கறது தப்புதான் - இதுல சிம்னி விளக்கு வேறு தீப்பிடிச்சதுன்னா என்ன பயங்கரம் - ம்ம்?"

"அதுக்காக பானுக்கா திட்டலை - நான் அவங்களை மேலேருந்து பார்த்துட்டேனல்ல... அதான் அவங்களுக்குக் கோவம்."

"என்னையுந்தான் பார்த்தே - பாசிமணி எறிஞ்சு கூப்பிட்டியே?"

"ஆனா நீங்க தனியா நின்னீங்க - பானுக்கா கேரி அங்கிளைக் கட்டிப் பிடிச்சுட்டு நின்னாங்களே..!"

வெளியே புயலில் படபடத்த மெல்லிய மேலாடையைப் போல ராகினியின் மனதும் துடித்துத் திமிறியது.

## 13

"ஜெயிலுக்குப் போறதுன்னா எனக்குப் பயங்கா.."

"உன்னை யாரும் ஜெயிலில் போடமாட்டாங்க - சின்னக் குழந்தைகளை எதுக்கு அங்கே அடைக்கணும்?"

"பிள்ளைங்களுக்குன்னு தனியா ஜெயில் இருக்காமே? நீ எங்களை இப்படிப் பார்த்ததாய்ச் சொன்னே - இப்படி திருட்டுத்தனமாய் மத்தவங்க வீட்டுக்குள் குதிச்சு நாசம் பண்றேன்னு போலிசில் சொல்லி ஜெயிலுக்குள்ளே தள்ளிருவேன்னு திட்டினாங்க..."

வாய் உலர்ந்து விட்டது ராகினிக்கு.

இதென்ன கொடுங்கதை?

"இதை... அவங்களை எப்போ பார்த்த மோனா?"

"ம்ம்... முன்னாடி... தூக்கத்துலகூட நீ இதுபத்தி உளறக் கூடாதுன்னாங்க பானுக்கா - அதனால் சரியா தூங்கக்கூட மாட்டேன் - உளறிடுவோமோன்னு பயம்மாயிருக்கும்."

"அதான் நீ ரவி மாமாவின் வீட்டுக்குப் போறதில்லை - சரியாய்ச் சாப்பிடறதில்லையா?"

"அங்க போய் ஏதாச்சும் மறந்து போய்ச் சொல்லிட்டா? நான் ராஜன் மாமாட்ட பேசறதுகூட அக்காக்கு பிடிக்காது. என்ன பேசினாலும் -

"இரு... இந்த வீட்டுச் சொந்தக்காரங்க பரோடாவில் இருக்காங்க - இப்பவே எழுதிப் போட்டு வரவழைக்கரோம்பாங்க."

"ரவிமாமாக்கு உங்கிட்ட எத்தனை பிரியம் - பிறகு உனக்கென்ன பயம்?"

"அவங்களுக்குப் பானுக்கா சொந்தத் தங்கச்சி - தங்கச்சி சொன்ன பேச்சதான கேக்கணும்?"

கலைந்த கேசமும், அழுத முகமுமாய் மோனா தலையாட்டிப் பேசியதைப் பார்க்க வெகு பாவமாய் இருந்தது.

சிறுமியை அணைத்து முடியைக் கோதினாள்.

இதுவரை அடக்கி வைத்திருந்தவற்றைக் கொட்டித் தீர்த்தாள் மோனா.

"ராகினி..." அசரீரி போலக் கேட்டது அந்த அழைப்பு.

"மோனா... நம்மைக் கண்டு பிடிச்சிட்டாங்கன்னு நினைக்கிறேன்."

"ஐயோ... எப்படிக்கா?"

"ஒரு பயமுமில்லை இனி - புரியுதா? நான் வெளியே என்னுடைய டார்ச்சை விட்டு வந்திருந்தேன் - அந்த வெளிச்சத்தை வச்சு கண்டுபிடிச்சிருப்பாங்க."

"என்னால மேல ஏற முடியாது."



"வேணாம். நான் போய் அவங்களை அழைச்சிட்டு வரேன்."

மேலேற, குரல் மேலும் தெளிவாகக் கேட்டது.

ரவிசந்திரனின் அழைப்புதான் -

"ரா...கி...னி..."

இவள் போய்ச் சாளரத்தைத் திறந்துவிட, காற்றையும் மிஞ்சிய வேகத்தில் ரவி உள்ளே நுழைந்தான்.

"நீ... உனக்கேதுமில்லையே?"

அவளின் தோள்களில் இரு கைகளையும் வைத்து மேலும் கீழுமாய்ப் பதறிப் பார்த்தவனின் பார்வை சுட்டது.

"இல்லை... மோனா இங்கதான் இருக்கா..."

"நல்லது - உன்னை வெளியேற வேண்டாம்னு சொன்னேன்." - குரலின் சுருதி கூடியது.

"ஆனா குட்டியைக் கண்டுபிடிச்சது நாந்தான் - ஆக மன்னிச்சு விட்டிருங்க."

"அவளை எங்கே?"

"கீழே நிலவறையிலே இருக்கா - அவளைத்திட்ட வேண்டாம், ரவி. அந்தப் பிஞ்சு மனசிலே ஏற்கெனவே என்னென்னவோ பயம் - நாம அவளிடம் ஆதரவாய்ப் பேசி நடந்துக்கணும்."

"டாக்டருட்ட போக இப்படிப் பயந்தா - அது சரியேயில்லை."

"அதுக்கில்லை - வேறெதுக்கோ பயந்திட்டா. தயவு பண்ணி இப்ப திட்ட வேணாம் - அது பற்றியே பேசாமல் முதல்ல அவளை டாக்டர்ட்ட கூட்டிப் போலாம்."

"ஏன்...என்னாச்சு?"

இதற்குள் மேலும் சில ஆண்கள் ப்ளாஸ்கும், போர்வை-களுமாய் ஏறி நுழைந்தனர். காற்றின் மூர்க்கம் சற்றுத் தணிந்திருந்தது.

"நீங்க சொன்னதையெல்லாம் எடுத்து வந்திட்டோம் ஸார்."

"மோனா தடுமாறி விழுந்ததில் கால் பிசகி வீங்கியிருக்குது. அசைக்கவே முடியலை. எலும்பு முறிவா. இல்லை சுளுக்கா தெரியலை."

ராகினி வழிகாட்ட, ஐந்தாம் நிமிடம் மோனா அவள் வீட்டில், தன் சின்னப் படுக்கையில் இருந்தாள்.

சுரேந்தர் தன் தொலைந்த தங்கைக்காக இன்னும் அலைந்து கொண்டிருந்தான் போலும் - அவனுக்குத் தகவல் தரச் சொன்னான் ரவி.

"சோனாலி, ஹார்லிக்ஸ் கலக்கு."

"அதெல்லாம் இல்லையே."

"சூடான பால் போதும். நா கொண்டு வரேன்." என்றபடி சமையலறைக்குள் புகுந்தாள் ராகினி.

"வீட்டிலிருந்து ரெண்டு நிமிஷ தொலைவில்தான் உந்தங்கை இருந்திருக்கா - நாங்க ஊர் முழுக்க சலிச்சுட்டோம். அடிக்கடி இங்க போவாளா?"

ரவி கடுமையாய்க் கேட்க, சோனாலி சிடுசிடுத்தாள்.

"சொல்லிட்டா போறா? எங்கேயாவது போய் ஊமைக் கோட்டானாட்டம் உக்காந்து படம் வரைவா."

"அப்ப அவளின் மறைவிடம் ராகினிக்கு எப்படி தெரிஞ்சுது?"

"அது அவளைத்தான் கேட்கணும். நா வெளியே வேலைக்குப் போறேன், ரவி."

"வீட்டையும் பாத்துக்கணும். ஆணோ, பெண்ணோ வெளியே எத்தனை வேலை பார்த்தாலும் வீட்டையும் கவனிக்கணும். இன்னிக்கு டாக்டர்ட்ட மோனாவை அழைச்சிட்டுப் போறோங்கறதையாவது குழந்தைட்ட சொல்லாமல் இருந்திருக்கலாம் நீ..."

"நான் சொன்னேனா? எனக்கது நினைப்பிலேயே இல்லை - சரி. முழுசா வந்து சேர்ந்தாளே. விடுங்க - உங்களுக்கு எதுவுமில்லையே?"



தன் தோளைப் பற்றியவளை உதறினான்.

அந்தக் கடுமை சோனாலிக்குப் பிடிக்கவில்லை என்பதை அவளது முகச் சுளிப்பு சொன்னது.

பரிமளம் மோனாவின் உடம்பைத் துடைத்து. உடை மாற்றியிருந்தாள்.

"பரிமளம்மா, நீங்க ராகினியை அழைச்சிட்டு நம்ப வீட்டுக்குப் போங்க - அவளும் சோர்ந்து தெரியறா..."

ரவி குரலின் பரிவு, ராகினியை நெகிழ்த்தியது.

"டாக்டர் வந்த பிறகு போறேனே..."

"ப்ளீஸ் - உன் நலம் எனக்கு முக்கியம். ராகினி - தயவுசெய்து படு. முடிஞ்சா தூங்கு... நான் பிறகு வந்து உனக்கு விவரமெல்லாம் சொல்றேன்."

கெஞ்சியவனின் பேச்சிற்குக் கீழ்ப்படிந்தாள்.

உடல் கழுவி, பால் பருகிப் படுத்த பிறகும் புத்தி துறுதுறுவென அலைந்தது. தெரிய வந்த விஷயம் லேசில்லையே..!

ஆக ப்ரமோத் கேரிக்கும் பானுவிற்கும் இடையே ஏதோ தொடர்பிருந்திருக்கிறது. ஆளரவமில்லாத இடத்தில் இளம் ஆணும் பெண்ணும் கட்டி அணைத்தபடி நிற்பதென்றால்...

அப்படியே அது வேறெதோ சந்தர்ப்பத்தில் நேர்ந்திருந்தால் பானு அதனைப் பதறி மோனாவின் வாயை அடைத்திருக்க வேண்டியதில்லை.

இதென்ன மர்ம நாடகம்?

இந்த நாடகத்தில் ராஜனின் பாத்திரம் என்ன?

தன் அண்ணனைப் பானு ஏமாற்றி விட்டாளா?

இந்த உண்மை முழுக்க மறைக்கத்தான். வேறு பெண்ணோடு ராஜன் தொடர்பு கொண்டிருந்ததாய் ஒரு புதுக்கதையைத் திரித்துப் பரப்பினார்களா?

ஏனோ ரவிக்கு இந்தச் சதியில் பங்கிருப்பதாக மனம் ஏற்கவில்லை.

இந்தச் சில நாள் பழக்கத்திலேயே ரவிசந்திரன் யோக்கியமானவன், நியாய புத்தியுள்ளவன் என்பது புரிந்திருந்தது.

தங்கையின் மேல் அதீத பாசம் -

ஆக பாசம் அவன் கண்களை மறைத்திருக்குமோ?

கேரி பாலைமணலில் அமர்ந்தபடி தன்னிடம்,

'இனி எதையும் கிளறாதே - விட்டுவிடு!' என்று சொன்னதற்கு அர்த்தம் இப்போதுதான் புரிகிறது.

கேரி தன் நண்பனுக்கு அதாவது ராஜனுக்குத் துரோகம் செய்திருக்கிறான். தன் துரோகம் வெளிவராமல் இருக்க, இவளையும் மௌனியாக இருக்கச் சொல்லியிருக்கிறான்.

கோபம்... அலையலையாய் அவளது உடம்பு முழுக்கப் பரவிக் கொதித்தது.

நாளை பானு வரப் போவதால்தான் ஒளிந்து கொண்டதாய் மோனா சொன்னதிலிருந்து எத்தனை உண்மைகள் சரசரவென்று வெளிவந்துவிட்டன.

மோனாவிற்கு அத்தனை விவரமும் தெரிய வந்தது எப்படி? பானுவின் தகவல்கள் சுரேந்தரின் மூலம் வருவதால் அவன் தன் தங்கையிடம் சொல்லியிருக்கக்கூடும்.

பானுவிற்கு இந்த விஷயமெல்லாம் மறந்தே போயிருக்கும். 'இதுக்காகவா வந்து ஒளிஞ்சுட்டே?' என்று ராகினி ஆறுதல் சொன்ன போது -

'இல்லைக்கா - சுரேந்தர்ண்ணாட்ட போன மாசம்கூட பானுக்கா சொல்லிவிட்டிருந்தாங்க...'

'என்னன்னு...'

'மோனா நா சொன்னதை எல்லாம் நல்லா நினைப்பு வச்சிருக்காளா? மறந்துற வேண்டாம்னு சொல்லுன்னு.'



என்ன குரூர புத்தி! இப்படிப்பட்ட ஒரு கல்நெஞ்சக்காரியையா ராஜன் நேசித்தான்?

தன் வாழ்நாள் முழுதுக்கும் துணையாய் ஏற்றுக் கொள்ளவிருந்தான்?

உடம்பு உதறியது.

அதே நேரம் தன் நிலைக்காக ரவி பரிதவித்ததும் ஏனோ நினைப்பு வந்தது. முந்தின இரவு தன்னைத் தேடிக் கண்டதும் தோள் பற்றி பார்வையால் விழுங்கியதை அவஸ்தையாய் நினைத்தாள் -

வெளியே ராகினியைப் போர்வைக்குள் ஒரு குழந்தை போல போர்த்தி அணைத்துக் கூட்டி வந்ததும் அவன்தான். ஒருவரின் மூச்சுக் காற்று மற்றவர் மீது படுமளவு நெருக்கத்தில்... நடந்து வந்திருந்தனர்.

தன்னிடம் பேசும்போது அவன் குரலில் ஏற்படும் இளக்கம்... பரிவு அதை உதாசீனப்படுத்த முடியவில்லைதான்.

அவனது அன்பில் வஞ்சனை இல்லை.

ஊர் முழுக்கப் 'பரோபகாரி, நல்லவன், நாணயஸ்தன்' எனப் போற்றும் ரவிக்கு இப்படியொரு தங்கை.

எப்போது தூங்கினோம் என்பதறியாமல் தூங்கிப் போனாள்.

மறுநாள் விழிப்புத் தட்டியது. எழ முடியவில்லை.

கண்களில் உறுத்தல் - உடம்பு கொதித்தது -

"படுத்திரும்மா - பரிமளாவை வரச் சொல்றேன். பாத்ரூம் போறதுக்கு எழ முடியுமா? காபி வேணுமா இல்ல பாலா?"

கேட்டது ரவிசந்திரன்தான்.

"நீங்க... இப்ப மணி என்ன?"

"பத்தாச்சு."

"காலையிலா?"

"அப்படித்தான் போல - சூரியன் நல்ல பளபளங்கறான்." குரல் நகைத்தது.

"கண்ணைத் திறக்க முடியலியே. மோனா எப்படியிருக்கா?"

"கண்ணுக்குச் சொட்டு மருந்து தந்திருக்கார். டாக்டர் விடட்டுமா? ரொம்ப உறுத்துதா? அதான் உன்னை உள்ளேயே இருக்கச் சொன்னேன் - சரி. நடந்ததை மறந்துவிடலாம்..."

"நீங்க போகலியா?"

"எங்க - உன்னை இப்படி விட்டுட்டா?"

"பானு வர்ர நாளாச்சே?"

"அவளை இப்போதைக்கு வர வேணாம்னுட்டேன் - ரெண்டு நாளாகட்டும். இதெல்லாம் பார்த்தால் மனசு சங்கடப்படுவா."

"பரவால்ல - வர வேண்டாம்னா..."

"பானு வந்த பிறகு உனக்கு நான் இப்படி சிசுருஷை செய்றதைப் பார்த்தா பொறுக்கவும் மாட்டாள் - அதுவுங் காரணம்."

"மோனாவுக்கு?"

"கால் பிசகியிருச்சு. அவ்வளவுதான் - எலும்பு ஏதும் முறியலை."

"நல்லவேளை - அவ ஏற்கெனவே நோஞ்சான் குழந்தை."

"ராஜன் அதிர்ஷ்டசாலி, ராகினி."

"ஏன்... திடீருன்னு அப்படி சொல்றீங்க?"

"ஒரு வாரம்கூடப் பழகாத குழந்தைட்ட இத்தனை அன்பு காட்டற நீ... அண்ணங்கிட்ட எத்தனை பாசம் வச்சிருப்பே!"

"உங்களுக்குந்தான் தங்கை இருக்காங்க."

அவனிடமிருந்து பதிலில்லை.

"பரிமளத்தை அனுப்பறேன் - நா பிறகு வரேன்."

"நீங்க உங்க வேலையைக் கவனிங்க, ரவி.."



"இதைவிட இப்போதைக்கு முக்கியமான வேலை வேறென்ன... அப்பாக்கு போன் பண்ணிடும்மா..."

உடம்பு சுட்டாலும் மனம் குளிர்ந்தது போலிருந்தது அவளுக்கு.

## 14

இரண்டாம் நாள் உடம்பு தெளிந்துவிட்டது.

காலையே தலை குளித்துவிட்டு, இலைப்பச்சை ஷிபான் கட்டியிருந்தாள்.

"இன்னைக்கு இடியாப்பமா பரிமளம்மா - நான் சம்பல் செய்யட்டுமா?" என்று பரிமளம் தடுத்தும் கேட்காமல், ராகினி தேங்காய் துருவிக் கொண்டிருந்தபோது, ரவி உள்ளே வந்தான்.

"அறையில் காணும் - அதான் தேடிட்டு இங்கே வந்தேன்."

இரண்டு நாட்களும் தன்னைத் தாயாக இருந்து கவனித்துக் கொண்டவன் இப்போது குழந்தையாய் மாறிவிட்டது போலத் தோன்றியது.

தாயன்பு அறியாதவளின் மனம் இளகிவிட்டது.

"ஒரு நொடியில் சாப்பாடு தயாராயிடும்."

"பரவாயில்லை. பானுவை அழைச்சிட்டு வரக் கிளம்பினேன்."

"நல்லது - நாளைக்கு நானும் ஊருக்குக் கிளம்பணுமே. அவங்களைப் பார்க்க நானும் ஆவலாயிருக்கேன்..."

இரு ஜோடிக் கண்களும் சில கணங்கள் கோர்த்துக் கிடந்தன.

எச்சில் விழுங்கிக் கொண்டனர்.

ராகினிக்குப் புரியவேயில்லை.

தன் சகோதரனைப் பற்றி ஏடாகூடமாய்ப் பேசியவன் என்பதால் ரவியின் மீது காட்டமாயிருந்த மனம் ஏனிப்படி மாறியது?

அவன் நல்லவன், கண்ணியமானவன் என்பது புரிந்ததாலா?

இல்லை, ஆள் அழகன் என்பதால் ஏற்பட்ட வாலிபத் தடுமாற்றமா?

பிறரிடம் பாசம் காட்டுபவன் என்ற கரிசனையா?

ஊர் ரவியுடன் சோனாலியை முடிச்சிட்டுப் பேசியது தெரிய வந்திருந்தது. ஆக கண்டபடி ஏங்கிக் குழப்பாதிருப்பது உசிதம் நாளை ஊர் திரும்ப வேண்டுமென்ற நினைப்பு உவகையாயில்லை உவர்ப்புதான் - கசப்பும்கூட -

"எல்லாம் தயாராய் வச்சிருக்கேன்- பானு வரவும் நாம் சேர்ந்தே சாப்பிடலாம்."

"ம்ம்..."

"நீயும் வர்ரியா?"

"சம்பல் செய்யலாம்னு ஆரம்பிச்சேன் - உங்களுக்குப் பிடிக்கும்."

"சரி, அப்ப..."

பள்ளி போக முதல் வாரம் தயங்கி, தாயை அண்டி நிற்கும் குழந்தையைப் போல நின்றிருந்தான்.

பிறகு கார் கிளம்பும் உறுமல் கேட்டது.

கடந்த இரண்டு நாட்கள் இவளுடனேயே கழித்திருந்தான் - ஆக இச்சிறு பிரிவும்கூடத் தன்னைப் போல அவனுக்கும் பிடிக்கவில்லையோ? நாளை ஏற்படவிருக்கும் நிரந்தரப் பிரிவில் கலங்கினாள்.

இந்தப் புது ஏக்கம் புரியாது குழம்பினாள்.

பானு நினைத்ததை விட அழகாயிருந்தாள். உயரமும் உருவிவிட்ட உடலும் அதற்கு முகப்பாக முழுநிலவு முகமும் பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத தோற்றம்தான்.



ஆனால் அவளது கண்கள் அலை பாய்ந்தன - ஆரவாரமாய்ச் சிரித்தபோது அதன் மலர்ச்சி அவளது கண்களை எட்டவில்லை.

ராகினி முயன்றும் பானுவுடன் இயல்பாய்ப் பேச முடியவில்லை.

"சம்பல் பிரமாதமான ருசி. நாளையிலிருந்து அண்ணன் நீங்க இல்லாம, அதாவது இந்த சமையலுக்காய் ஏங்கப் போறார்!" என்றாள்.

"பரிமளாம்மாட்ட சம்பல் செய்றதைக் காட்டித் தந்திட்டேன்."

"சமையல் மட்டுமா? உங்க வீர தீரத்தைப் பற்றியும் ரவிண்ணா ஓயாது பேசிட்டே வந்தார்."

கேள்வியுடன் நிமிர்ந்தாள் ராகினி.

"அதான்... நீங்க மோனாவைப் புயலோட போய்க் காப்பாத்தினது பற்றி..."

"யாராயிருந்தாலும் செய்திருக்கக் கூடியதுதான் அது..."

"டாக்டர்னா அந்தக் குட்டிக்கு அப்படியொரு பயமா?"

ராகினி இதற்குப் பதில் சொல்லாமல் காபியை உறிஞ்சினாள்.

அடிநாக்கு வரை இனந் தெரியாத கசப்பு!

காய்ச்சல் கண்டு தேறின உடல் ஓய்வுக்காகக் கெஞ்சியது.

பானு அவளது அறைக்குப் போனதும் மோனாவைப் போய்ப் பார்த்து வந்தாள்.

"எல்லா டெஸ்டும் எடுத்தாச்சுக்கா... காலு உடையலை..." அறிவித்தாள் குழந்தை.

"வலிக்குதா ரொம்ப...?"

"மாத்திர முழுங்கின பிறகு வலிக்கலை... ஆனா தூக்கமா வந்து..."

"அப்ப தூங்கு..."

மதிய உணவிற்குப் பின் தானும் படுத்து விட்டாள், ராகினி முந்தின இரவு ஆழத் தூங்காததால் இப்போது கண்ணைச் சுழட்டியது.

பேச்சுக் குரல்கள் அவள் தூக்கத்தைக் கலைத்தன.

மணி நான்காகி யிருந்தது.

அவசரமாய் எழுந்து முகம் கழுவி, முடி கோதிப் பின்னலிட்ட போதுதான் பேசிய குரல்களில் ஆத்திரம் இருப்பது புரிந்தது.

யார் வந்திருப்பது?

ஏன் இத்தனை கோபமாய்ப் பேசுகிறார்கள்?

கதவைச் சற்றுத் திறக்க, குரல்கள் தெளிவாயின.

இது சுரேந்தரனது குரல்... கூடவே சோனாலியும் வந்திருக்கிறாள்.

காலை அவர்களின் வீட்டிற்குப் போனபோதுகூட சுமுகமாய்த் தானே தன்னிடம் பேசினார்கள்.

மோனாவின் உடல்நிலை மோசமாகிவிட்டதோ?

வரவேற்பறையை நோக்கி விரைந்தாள்.

"பெரியவங்க செய்த புண்ணியந்தான் - மோனா இந்த ஆபத்திலிருந்து தப்பினது - இத்தனை மாசமாய் ... ஏறக்குறைய ஒரு வருஷமாய் குழந்தை சித்ரவதைப் பட்டுட்டா. அத்தனைக்கும் காரணம் உங்க தங்கை..."

ராகினிக்குப் பக்கென்றது.

தான் சொல்லாமல் விட்டாலும் உண்மை உறங்கியே கிடக்காது போலும்.

தன் அண்ணனைப் பற்றிக் கேட்ட அபவாதத்தில் தான் துடித்தது போதும் - அதே கொடுமையை ரவிக்குத் தர வேண்டாம் என்று தன்னையே அடக்கிக் கொண்டது வீண் - இதோ... பானையை உடைத்துக் கொண்டு பூதம் வெளி வந்து நிற்கிறது!



"எல்லாப் பரிசோதனையும் நார்மல். குழந்தையைத் தேய்ச்சு, உருக்குலைச்சது பய உணர்ச்சிதாங்கறார் டாக்டர். அந்தப் பயத்துக்குக் காரணம் பானுவோட மிரட்டல்..."

"அந்தக் குட்டியின் பேச்சைக் கேட்டுட்டு என்னை மிரட்டறது நல்லாயில்லை, சுரேந்தர்!" பானுவின் குரல் க்றீச்சிட்டது.

"சும்மாயிரும்மா - மோனா மொத்தமும் சொல்லிட்டா. தன்னைக் காப்பாத்தின ராகினிகிட்ட முதல்ல சொல்லியிருக்கா. அவங்க தந்த தைரியத்தில்தான் குழந்தை கொஞ்சம் தெளிஞ்சா - மற்றப்படி தினம் ராத்திரி அலறி எழுந்துக்குவா -

"ஜெயில்ல பூரான் கடிக்குது - மூச்சடைக்குது - ஐயோ, தேள் ஓடுது!"ன்னு என்னென்னவோ பிதற்றுவா - எல்லாம் ஏன்னு இப்பத்தான் புரியுது."

ரவிசந்திரனின் குரலே கேட்கவில்லை. அவனுக்கு இது பெரும் அதிர்ச்சி.

அவர்கள் இருந்த அறைக்குள் நுழைந்தாள் ராகினி.

இவளைப் பார்த்த ரவி எழுந்தான்.

"வா ராகினி - உன்னை எழுப்பலாமான்னு யோசிச்சேன். வந்துட்டே - உட்கார் - காபி சாப்பிட்டியா?"

"இல்ல... வேணாம்."

அதைப் பொருட்படுத்தாமல் இண்டர்காமில் காபிக்குச் சொன்னான்.

"ஆக உனக்கும் எல்லாந் தெரியும்?"

"ம்ம்.."

"ஏன் எங்கிட்ட சொல்லலை?"

"நீங்க வருத்தப்படுவீங்கன்னுதான் - பானு மேலே ரொம்ப பாசம் வச்சிருந்தீங்க."

"குருட்டுப் பாசம் யாருக்கும் நல்லதில்லை..."

"தவிர காரணம் என்னன்னு தெரிஞ்சுட்டதால மோனாவுடைய பயத்தைப் பேசியே போக்கிடலாம்னு நம்பினேன்."

"ஆக குழந்தை, பானுவைக் கேரியோட... நெருக்கமாய்ப் பார்த்ததால வந்த பிரச்சனை இது..."

"பொய்..." கத்தினாள் பானு.

"பொய் சொல்ல எட்டு வயசுக் குழந்தைக்கு என்ன அவசியம்? உன் கள்ளக் காதலை மறைக்க எந்தங்கச்சிய பொய்க்காரி ஆக்காத, பானு!" சுரேந்தர் பதிலுக்குக் கத்தினான்.

காபி வர, கோப்பையை வாங்கிக் கொண்ட ராகினியின் விரல்கள் நடுங்கின.

"ராகினி - உங்கிட்ட ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்தனும். நான் சொல்லாம மறைச்சது ரொம்ப தப்பு..." ஆரம்பித்தான் ரவி.

"நானும் அவரை விரும்பினேன்... நாங்க ஒருத்தரை ஒருத்தர் காதலிச்சோம்..."

கோபம் அடங்கி விசும்பலுடன் பேசிய பானுவை அதிர்ச்சியுடன் பார்த்தாள் ராகினி.

"ஆனா, நான் அதை விரும்பலை. ஜாதி மதம்னு இல்லைன்னாலும் ஒரு தமிழ் மாப்பிள்ளை பானுக்கு அமைஞ்சா நல்லதுன்ற ஆசை... இதைச் சொல்லி, கேரியை வேண்டாம்னு நான் தடுக்க, கொஞ்சம் அடங்கினாங்க. சரி நம்ம பேச்சுக்கு மதிப்பிருக்குன்னு நா நிம்மதியா இருந்த சமயம் ராஜன் ஜெய்சல்மர் வந்தார். இங்கே தங்க நேர்ந்தது - ராஜனைப் பார்க்கும் சாக்கில் தினம் கேரி இங்கே வர ஆரம்பிச்சான் - மறுபடி இவர்களிடையே தொடர்பு துளிர்விட்டது போல... பானுவும் தனக்கு ராஜனை ரொம்பப் புடிச்சிருக்கிறதாய்ச் சொல்ல... எனக்கதில் திருப்திதான்."

எல்லாரையும் ஒரு முறை பார்த்து, பின் தொடர்ந்தான் ரவி.



பானு விசும்பலும் அடங்கி இறுகிச் சிலை போல உட்கார்ந்திருந்தாள்.

"ராஜன் நல்லவன்... நம்ப பையங்கற எண்ணம். ஆக நான் கேரி இங்கே வர்ரதைத் தடுக்கலை - மூணு பேருமாச் சேர்ந்து போக வர இருந்தாங்க."

"மோனா எங்கிட்ட தான் பார்த்துச் சொன்னதாலதான் உங்களுக்கு ராஜன், பானுவின் நெருக்கம் தெரிய வந்ததுன்னு சொன்னாளே..."

"சின்ன வயசில இந்த உளவு வேலையெல்லாம் எதுக்குன்னு கண்டிச்சேன். பிறகு ஊர் முழுக்கப் பேச்சு பரவும்... அது வேண்டாம்னு பார்த்தேன். இவங்க காதலுக்கு நானே பச்சைக் கொடி ஆட்டினேன்."

"ஆனா, சம்மதம் பார்த்துக் காதல் வர்ரதில்லண்ணா. உறவின் பச்சைக் கொடியைப் பார்த்துக் காதல் வாகனம் கிளம்பறதில்லை... பார்க்கப் போனால் கேரியைவிட ராஜன் உத்தமர் - அருமையான கணவர் - எந்தப் பெண்ணுக்குமே. கேரிக்குச் சபல புத்தி உண்டு. காலேஜ்லியே அவருக்கு அந்தப் பெயர் உண்டாம் - அவரே பெருமையாய் அதுபற்றி சொல்லிச் சிரிச்சுக்குவார்... இங்க வர்ர அழகான பெண் டூரிஸ்டுகளிடம்கூட அதிகமாய் நெருங்கிப் பழகுவார் - எனக்கது பிடிக்காம சண்டை போடுவேன் - அந்நேரம் ராஜனின் அன்புதான் எனக்கு ஆறுதல். கேரியை வெறுப்பேத்த நான் ராஜனைப் பயன்படுத்தினேன்னுகூடச் சொல்லலாம்..."

"ஆனா இந்த நாடகத்தில்... எங்கண்ணனை முழுசாய் ஏமாத்தியிருக்கீங்க!" கசந்து சொன்னாள் ராகினி.

"அவர் எம் மேல இத்தனை பிரியம் வைப்பார்னு எதிர்பார்க்கலை நான்!" உதட்டைக் கடித்துக் கொண்டாள் பானு.

"பிரியம் வைத்தவன் மேல் பழியும் சுமத்தினீங்களே - நடந்தது விபத்துதானா... இல்லை...?"

"முழுக்க விபத்து, ராகினி - அது சத்தியம் - ஏன்னா அப்ப ராஜனோட பயணம் செய்த பெண்... நாந்தான்!"

பானு சொன்னதில் ரவி மிக அதிர்ந்து போனான்.

"முழுசாய்ச் சொல்லு. உன்னைச் சின்னப் பொண்ணு, அறியாதவள்னு நினைச்ச என்னை எப்படி யெல்லாம் ஏமாத்தியிருக்கே..."

"சொல்றேண்ணா - ஏன்னா மறைச்சா - அது என்னை அரிச்சுப் பிடுங்குது. தூக்கத்தில்கூட துர்சொப்பனம் - சொல்லிடறேன்."

மென்று விழுங்கிப் பானு பேச ஆரம்பித்தாள்.

"எனக்கும் கேரிக்கும் காதல் தொடர்ந்தது - அண்ணன் கண்டிச்ச போதும்கூட எங்களுக்கிடையே கடிதங்களைப் பரிமாறிக்கிட்டோம். ரெண்டு பேரும் ராஜனை ஏமாற்றினோம் - ஒரு விநோதமான கண்ணாமூச்சி ஆட்டம் அது. கேரியையும் என்னையும் மோனா பார்க்க, அவளை நான் பயமுறுத்தி வாயை மூட வச்சேன்... ஆனா எத்தனை நாள் காதலை மூடி மறைக்க முடியும்? நா... நானும் கேரியும் பரிமாறிக்கற துண்டுச் சீட்டு ஒன்று ராஜன் கையில மாட்டிடுச்சு - ஆசை முத்தங்களுடன் உங்கள் பானுன்னு கேரிக்கு எழுதிய கடிதம்..."

ரவி முகம் சுளித்தான். தங்கையின் பேச்சில் குறுக்கிடாமல் இருக்க அவன் பெருமுயற்சி செய்வது புரிந்தது.

நெஞ்சில் வாளைச் செருகினது போன்ற வேதனை ராகினிக்கு.

"அந்நேரம் எனக்கும் கேரிக்கும் நடுவே கொஞ்சம் பலமான ஊடல். நபீஸான்ற பாகிஸ்தானியப் பெண்ணோட ரொம்ப நெருங்கிப் பழகறான்ற தகவல் எனக்குக் கிடைச்சுது..."

பானுவின் பார்வை சுரேந்தரைத் தொட்டது.

"ஆங்... ஒத்துக்கறேன் - சில நூறு ரூபா நோட்டுகளுக்காய் நீங்க கேட்ட தகவல் எல்லாம் பீராய்ந்து தந்தவன் நாந்தான்..."



"நான் இப்ப மருத்துவமனையிலே இருந்தப்பமும் சுரேந்தர் தான் எனக்கு இங்கே நடப்பதை எல்லாம் தெரியப்படுத்தியது."

"எல்லாம் காசுக்காக - ஆனா சின்னத் தங்கையின் உயிரையும் தருவேன்னு யாரும் எதிர்பார்க்க வேணாம்..."

"அப்படின்னால் பல விஷயங்கள் உனக்கும் தெரிஞ்சிருக்குது சுரேந்தர். இந்த நாடகத்திற்கு உடந்தையாவும் இருந்திருக்கே - எங்கிட்ட ஒரு வார்த்தை சொல்லலை நீ..."

"சொன்னால் காசு தந்திருப்பீங்களா?" குரூரமான சிரிப்புடன் கேட்டான் அவன்.

"அப்ப... நன்றி... பாசமெல்லாம் ஒரு பொருட்டில்லையா?"

"நாய்க்கு நன்றி போதும் - நானும் அடிமையாய் எத்தனை நாள்தான் இருக்கிறது? எங்கப்பா, உங்கப்பாக்கு சேவகம் செய்ததுக்கு ஏதோ வீடு தந்தீங்க - அதுக்காக நான் சதா சலாம் போட்டுட்டே இருக்கணும்னு எதிர்பார்க்கக்கூடாது. எல்லாத்தையும்விட காசு முக்கியம் - தகவல் சொல்றதுக்கும் உங்ககிட்ட போட்டுத் தராம இருக்கறதுக்கும் காசு கிடைச்சது."

அடிபட்டவன் போலக் கண்மூடிக் கொண்டான் ரவி.

"ரொம்ப முக்கியம்னு நீங்க சொன்ன காசு, மோனாவின் உயிரைக் காப்பாத்தலை சுரேந்தர் - அந்தக் குழந்தை மேலுள்ள பாசத்தால நான் போனேன் - அதற்குச் சன்மானமாய் எனக்கு ஏதும் காசு தரப் போறீங்களா... அப்படின்னா எவ்வளவு?"

அமைதியாக ஆனால் அழுந்த ராகினி கேட்டதில் சுரேந்தரின் முகம் சிறுத்தது.

தன் தந்தையிடம் ஊழியம் செய்தவரின் வாரிசுகளுக்காக வீடு மட்டுமில்லாமல் அன்பும், அக்கறையும் காட்டியவன் ரவி. சில நாட்களே கவனித்திருந்த ராகினிக்குப் புரிந்த இவ்வுண்மை ஏன் சுரேந்தருக்குப் புரியவில்லை?

...ச்சே... என்றானது.

சோர்ந்து தெரிந்த ரவியை அணைத்துத் தேற்ற வேண்டும் போல அவளுக்குள்ளே தாய்மை ஊறியது.

அது புரிந்தாற்போல ரவியும் இவளைப் பார்த்தான்.

## 15

"வேறொரு பெண்ணுடன் கேரி நெருக்கமாய்ப் பழகறார் என்றது எனக்குள்ளே வெறியைக் கிளப்பிடுச்சு. அதே சமயம்தான் எங்க தொடர்பு ராஜனுக்குத் தெரிய வந்தது. என்னை எவ்வளவு நேசிக்கிறேங்கறதைச் சொன்னார் - அழுதார். கேரியோட சபலபுத்தி எங்க வாழ்க்கையிலே அடிக்கடி சூறாவளியைக் கிளப்பும். அவர் வித்தியாசமான மனுஷர் - வசதியான வாழ்க்கை முறை அவருக்கு ஒத்துக்காது - பாலைவனத்திலே, ஏன்... பனிக்கட்டியிலேகூட கேரி ஆனந்தமாய்த் தங்கத் தயார். என்னால அதெல்லாம் முடியுமா? அவரோட என் வாழ்வு இணைஞ்சால் நிறையச் சிரமங்கள் எனக்குண்டு. ஆனா ராஜன் தங்கமானவர் - ஏனோ... எம்மேல காதல் கொண்டுட்டார். ஆக அந்நேர வெறியில நான் ராஜனைக் கல்யாணம் செய்துக்க முடிவு செய்தேன்.."

"எங்கிட்ட அதுபற்றி ஒரு வார்த்தை சொல்லாமல்?"

"மன்னிச்சிடுங்கண்ணா. என் மனசே மாறிடுமோன்ற தவிப்பிலே நானிருந்தேன். கேரியைப் பார்க்கும் துணிவுமில்லை. ராஜன்தான் தனக்கு ஜோத்பூரில் தெரிந்தவர்கள் இருப்பதாயும் - அங்கே சொல்லிப் பதிவுத் திருமணம் செய்ய எல்லா ஏற்பாடுகளையும் செய்றதாயும் சொன்னார் - அவர் முன்னயே என்னைப் பற்றி தன் குடும்பத்திற்குத் தெரிவிச்சுட்டதால அவங்களின் சம்மதம் உண்டுன்னார்... நானும் ஒத்துகிட்டேன். அது புத்தி எடுத்த முடிவு. ராஜனை இனியும் ஏமாத்தறது முறையில்லன்ற குற்ற உணர்ச்சியிலே தந்த சம்மதம். ஆனா மனசு - தவிச்சுது... அது இன்னும் கேரியிடம்தான்..."



அதுவரை பானுவின் கண்களில் தேங்கி நின்ற நீர்... கன்னங்களில் வழிந்தது.

"எங்களை எல்லாம் ஏமாத்தினதை விட, நீ உன்னையே ஏமாத்திக்கிட்டது அதிகம்."

"உண்மைதான். அது ராஜனோட ஜோத்பூர் கிளம்பின பிறகுதான் புரிஞ்சுது. என் வாடிய முகம், ராஜனைச் சஞ்சலப்படுத்தினது. நாங்க அதிக தூரம் போகலை - அதுக்குள்ளே அந்த விபத்து நேர்ந்திடுச்சு. இரண்டு லாரிங்க ஒன்னை ஒன்னு முந்த விரைகையிலே, இடதுபுறமாய் ஒதுங்கியே வந்த எங்க கார் மேலே படுவேகமாய் மோதிடுச்சு - பேயாய் வந்த லாரிக்காரங்க நிறுத்தாம போயாச்சு... எனக்கு அதிர்ச்சியைத் தவிர வேறு சேதமில்லை. ராஜனுக்கும் வெளிப்படையான காயம் தெரியலை - ஆனால் அவர் சாய்ந்து கிடந்த கோணத்திலேயே எனக்குப் புரிஞ்சிடுச்சு... அலுங்காமல் போயிட்டார்னு - நாடித் துடிப்பைப் பார்த்தேன்... நின்னிருந்துச்சு... ஏற்கெனவே சஞ்சலமாய்த் தவிச்ச எனக்கு என்ன செய்யன்னு புரியலை... தெளிவில்லை... நான் எடுத்துப் போயிருந்தது ஒரு சின்னப் பைதான் - அதை எடுத்துட்டு ஓடினேன். அரைமணி நேரத்துக்குப் பிறகுதான் தொலைபேசி இருந்த ஒரு கடையைப் பார்த்தேன்."

"அப்பவும் எனக்கு நீ விபரம் சொல்லலை - எங்கிட்ட பேசலை...?"

"தைரியமில்லலண்ணா... கேரிட்ட பேசினேன்..." தலை குனிந்து சின்னக் குரலில் தொடர்ந்தாள் பானு.

"ஆம்புலன்ஸிற்காக என் தந்து என்னை விவரம் சொல்லச் சொல்லி அங்கேயே இருக்கச் சொன்னார். பத்து நிமிஷத்துக்குள்ளே என்னைக் கூட்டிப் போக வந்துட்டார்."

"ஆக, கேரி உன்னை அழைத்து வீட்டில் விட, நான் சொன்ன விபத்தின் செய்தியை நீ அப்பதான் கேட்கறது போல கேட்டுகிட்டே... ம்ம்...?"

"வேறுவழி தோணலை. அப்போதைக்கு அமுக்கி வைத்த அதிர்ச்சி, நாளாக ஆக என்னை அலைக்கழிச்சது... தாள முடியலை... அது ராஜனோட மறைவினாலேன்னு நினைச்ச நீங்க என்னைத் தனியிடத்தில் கொண்டு வச்சதும் நல்லதிற்குத்தான்... எனக்கது தேவையாயிருந்தது..."

"அப்படீன்னா... பானு, நீங்க எங்கண்ணனை விரும்பவே யில்லை. இல்லையா?"

"மன்னிச்சிருங்க, ராகினி - ராஜன் நல்லவர் - அவர்மேல எனக்கு மதிப்பு, மரியாதை இருந்ததே ஒழிய... காதல் இல்லை."

ராகினி பெருமூச்செறிந்தாள்.

'என் முட்டாள் சகோதரனே - கேட்கிறதா உனக்கிது?' என்பது போல மேலே பார்த்தாள்.

"என்னை வீட்டிலே விட்ட கேரி, சந்தேகம் கிளம்பாதிருக்க, தானும் பக்கத்து ஊருக்குப் போயிட்டார்."

ஆக இறந்த நண்பனுக்குத் 'துரோகி'ப் பட்டம் கட்டிவிட்டு ஓடிப் போன கோழை கேரி - இத்தனை தெரிந்துமா இந்தப் பெண் அவனை நேசிக்கிறாள்? அவனது நிறமும், கவர்ச்சியான தோற்றமும்தான் காரணம்! எத்தனை நாள் தாக்குப் பிடிக்கும் இந்த ஈர்ப்பு?

"இப்போது... மோனா விபரங்களைச் சொன்னது நல்லதுக்குத்தான்னு படுது. இல்லை, இத்தனையையும் சொல்ல எனக்குத் துணிவு வந்திருக்காது.."

"ஆனா எந் தங்கையைச் சாவின் விளிம்பு வரை தள்ளிவிடற துணிவிருந்தது.."

"மோனாவிற்கு எதுவும் ஆகலியே, சுரேந்தர்."

"ஆனால்... ராஜனின் வாழ்வு... முடிஞ்சிருச்சே..." ராகினி விம்மினாள்.

"அது... அது விபத்தினால... ராகினி..."



"ப்ப்ச் - தன்னைக் காதலிக்காத பெண்ணைக் கல்யாணம் செய்துக்கிறதைவிட ஒரே நொடியில் அவன் உயிரைப் பறிச்ச விபத்து பரவாயில்லைன்னு நா... நாங்க மனந்தேறிக்க வேண்டியதுதான்."

மறைக்க நினைத்தும் மனதின் கசப்பு ராகினியின் வார்த்தைகளில் வெளிப்பட்டுவிட்டது.

அதற்கு மேல் என்ன சொல்வது என்பது புரியாமல் அவரவர் மௌனமாய் நகர, ராகினியும் தன் அறைக்கு வந்தாள்.

மனம் ரணப்பட்டிருந்தது.

ஆனால் சகோதரனின் மீது ஏற்பட்ட பழி நீங்கின ஆசுவாச ஆறுதல்.

ஒரு மணி நேரம் போலக் கட்டையாய்க் கிடந்தாள் - கேட்டதை, பேசினதை எல்லாம் ஜீரணிக்க அந்த அவகாசம் தேவைப்பட்டது.

கதவு தட்டப்பட்டது.

"வாங்க..." எழுந்து அமர்ந்தாள்.

வந்தது ரவிசந்திரன்.

"என்னை மன்னிச்சிரு, ராகினி..."

தலையசைத்தாள் - "இதைத் தவிர்க்கணும்னுதான் மோனா சொன்னதை உங்ககிட்ட சொல்லலை - மறைச்சு - பிறகு மறந்திடலாம்னு நினைத்தேன்."

"நீ கூட எங்கிட்ட ஏதும் சொல்லலியேன்னு - வருத்தப்பட்டேன்..."

"'மன்னிச்சிடு'ன்னு நீங்க எங்கிட்ட வந்து குறுகி நிற்க வேண்டாமேன்னு பார்த்தேன்..."

அவளைப் புதிதாய் அப்போதுதான் பார்ப்பது போலப் பார்த்தான்.

"நடந்தது விபத்து - ராஜன் ஆயுள் இத்தனைதான்னு கடவுள் நிர்ணயம் பண்ணியிருந்தால் நான் அதுபற்றி விவாதிக்கறது அறியாமை - மனசு முழுக்க வேதனைதான் - ஆனா அது எங்கண்ணனை மீட்டுத் தராது..."

"நீ அழகான பெண்ணுன்னு உன்னைப் பார்த்த அன்னைக்கே நினைச்சேன் - இப்ப நீ அற்புதமான பெண்ணுங்கறதும் புரியுது."

"அன்றாட நடப்பு புரிஞ்சவ - அவ்வளவுதான்..."

"அன்பானவளும்கூட.... சோனாலிகூட மோனாவுக்காக அப்படிப் பதறித் தேடலை... இங்கே வந்து பானுவை ரெண்டு விளாக விளாசிட்டுப் போனா... அவ்வளவுதான்..."

"ம்ம்... அவங்க சத்தமும் கேட்டது... உங்க மேல அவங்களுக்குப் பாசம்..."

"தன் மேல மட்டுந்தான் அவளுக்கு அன்பு. ராகினி. இந்த தோற்றமும் அந்தஸ்தும் இல்லைன்னால் என்னைத் திரும்பியும் பார்க்கமாட்டா... அவளையே கல்யாணம் செய்துக்கலாம்னு நான் நினைச்சது உண்டு - அது சௌகர்யமான திருமணமாய் இருந்திருக்கும் - இந்த ஊரின் கடும் வெயிலுக்கும். பழக்க-வழக்கங்களுக்கும் மொழிக்கும் பழகின பெண். அவ. ஆனால் எங்களிடையே... பரிவில்லை... அன்பில்லை... வந்து... மோனா அங்கேயிருப்பான்னு எப்படி யூகிச்சே...?"

"ஒரு முறை அவளை அங்கே பார்த்தேன்... நீங்க சொன்னதுபோல ஒரு யூகம்... அவ்வளவுதான்..."

"எல்லாப் பெண்களும் இத்தனை தன்னடகத்துடன் இருப்பாங்களா? சந்தேகந்தான்!" குறுஞ்சிரிப்புடன் சொன்னான்.

"எல்லா ஆண்களும் சதா உங்களைப் போலப் பெண்களைப் புகழ்ந்தால் எங்களுக்குத் தன்னடக்கம் தானாய் வந்திடும்!" என்றாள் பதிலுக்கு.



அவள் புன்னகையில் மயங்கியவனாய் நெருங்கினான். ராகினியின் கைகளை எடுத்துப் பத்திரமாய்த் தன் கைகளுக்குள் அடக்கினான்.

"எங்கம்மா பானு ரொம்ப சின்னவளாய் இருந்தப்ப தவறிட்டாங்க..."

"ம்ம்..."

அவன் கைகளின் கதகதப்பு அவளுக்கு இதமாயிருந்தது -

"அப்பா எனக்கு வியாபாரம் கற்றுத் தந்தார் - ஆனா பரிவு பாசத்துக்கெல்லாம் - பாவம்! அவருக்கும் நேரமில்லை. நான் அதுக்காக ரொம்ப ஏங்கினவன். சரி. நாம நம் அன்பைப் பிறருக்குத் தந்தால் போச்சுன்னுதான் எத்தனையோ சேவை, இயக்கங்கள்னு என்னை ஈடுபடுத்திக்கிட்டேன். நல்ல விஷயந்தான். ஆனா எனக்கது முழு நிறைவைத் தரலை... சுரேந்தர் வீட்டார் மேல பிரியம் வச்சேன். என்னால முடிஞ்சவரை உதவியா இருந்தேன். அப்பா இருந்தவரை அவங்ககிட்ட வசூலிக்கப்பட்ட வாடகையை இனி நான் வேண்டாம்னேன் - வீட்டை அவங்க பேருக்கே எழுதித் தந்தேன்... சோனாலி என்னை வளைச்சுப் போட முயல. சுரேந்தர் கேக்கிறான் - நா உனக்கு அடிமையா... நன்றியெல்லாம் நாய்க்குத்தான்னு... நன்றியை நான் எதிர்பார்க்கலை... பாசம். பரிவுகூட..."

"ஷ்... அதையெல்லாம் யோசிக்க வேணாம். விடுங்க!" தன் வலது கையை அவன் பிடியிலிருந்து உருவியவள் அவனது தோளைத் தொட்டாள்.

"ம்ம்... உலகம் இதுதான் ராகினி. புரியுது. ஆனால் பானுவுடைய துரோகத்தைத் தாங்கத்தான் ரொம்ப சிரமமாயிருக்குது - உடன் பிறந்தவள் - என் பாசத்தையெல்லாம் கொட்டி வளர்த்த குட்டிப் பொண்ணு... என்னவெல்லாம் செய்திருக்கா... எங்கிட்ட ஒரு வார்த்தை சொல்லலியே... வந்து நின்னு நேர்மையாய்...

"நான் கேரியைத்தான் கல்யாணம் செய்துக்குவேன்!'னா... நா மனம் மாறிச் சம்மதிச்சிருப்பேன் - வேறு வழி?"

"உங்களை எதிர்த்துப் பேசற அந்தத் துணிவில்லை அவளுக்கு அதுவும் ஒரு விதமான பாசந்தான்னு வைங்களேன்."

கசப்பாய்ப் புன்னகைத்தான்.

"சரி... நம்ப முயற்சி பண்றேன். அதிலேதான் நீ என்னை ஆச்சரியப்படுத்தறே ராகினி. ராஜன் மேல் உனக்கு அன்பு - அவன் தப்பு பண்ற ஆளில்லைங்கற ஆழ்ந்த நம்பிக்கை - அதுகூட எனக்குப் புரியுது - அது ரத்த பாசம் - ஆனால் இங்க வந்தபிறகு பழகினவங்களிடம்கூட நீ நிஜமான பாசம் காட்டினே. பரிமளம்மாவாகட்டும், மோனாவாகட்டும் - உன்னைப் பற்றிக்கூடக் கவலையில்லாமல் புயலில் போய் குழந்தையைக் காப்பாற்றினே. இல்லைன்னா ஏறிவர முடியாம அந்த நிலவறையிலே குழந்தை சமாதி ஆகியிருப்பா..."

"வேணாம்..."

அவன் வாயை மிருதுவாய் மூடினாள்.

அந்தக் கையை அப்படியே தன் கையால் அழுத்தி முத்தமிட்டான்.

"பிறகு எம்மேல நீ காட்டின பரிவு... பானுகூட அத்தனை கரிசனை காட்டலை எம்மேல்..."

"என்ன... சொல்றீங்க?"

"பானுவைப் பற்றி உனக்குத் தெரிய வந்தவை பானுவிற்குப் பாதகம் ஆனாலும் உனக்கு... அதாவது உன் அண்ணன் ராஜனுக்குச் சாதகமானவை. மோனா சொல்லும் முன்னரேகூட உனக்குப் பானுவைப் பற்றி ஏடாகூடமாய் விவரம் கிடைத்திருக்கக்கூடும்..."

ராகினிக்கு, மோனா முயல் படம் வரைந்த அத்துணூண்டு சீட்டின் நினைப்பு வந்தது - அதன் பின்புறம் பானு எழுதியிருந்தாளே -

ஆமோதிப்பாய்த் தலையசைத்தாள்.



"ஆனா, நீ எங்கிட்ட வந்து மல்லுக்கு நிற்கலை - இதோ விஷயம் இப்படியிருக்க, நீங்க எப்படி எங்கண்ணனைப் பற்றி பேசப் போச்சுன்னு குற்றம் சுமத்தலை - அது ஏன் ராகினி?"

ரவிசந்திரன் நல்லவன், ஏமாற்றுபவனில்லை என்பதை மீறி வேறொரு காரணமும் உண்டு - தனக்கே அவள் பலமுறை கேட்டுத் தெளிவான பதில் புரியாமல் தவித்த கேள்வியில்லையா இது...!

"என்மேல உனக்கு அன்பு - அப்படித்தானே? அன்பில்லாத பாலைவனமா கிடக்கற இவனுக்குக் குளிர் மரமாய் நிற்போம், நாமும் இவனை வெயிலாய்த் தகிக்க வேண்டாங்கற கருணைதானே?"

இவளது முகத்தை மலராய் இரு கைகளில் ஏந்திக் கேட்டான்.

"தெரியலை!" குமுறினாள்.

"தெரிஞ்சுக்க முயற்சி பண்ணேன்."

செந்தாமரை நிறத்துக்கு மாறியது அவள் முகம் - விழிகள் நிமிரத் திராணி இழந்து கவிழ்ந்து கிடந்தன.

"நீங்க எலலாரிடமும் காட்டின அக்கறை பிடிச்சிருந்தது. உங்களைப் புண்படுத்த - ஏனோ மனசு வரலை - பிறர் நோகடிச்ச போதும் தாங்கலை..."

"இந்த அன்பு எனக்கு எப்போதுமே வேணுமே, ராகினி."

அவள் பார்வை நிமிர்ந்தது.

"கிடைக்குமா?" கெஞ்சினான்.

"என்ன கேட்கறீங்க?"

"நாளை இந்நேரம் நீ இங்கிருக்க மாட்டே. அந்த நினைப்பைக்கூட என்னால தாங்க முடியலை. பாலை வனத்திலே பன்னீர் ஊற்று மாதிரி வந்தே... நாளைக்கு அது வற்றி... வெறும் கானலாய்ப் போகப் போகுதுன்றது... கஷ்டமாயிருக்குது..."

தன் வெட்கத்தை மறைக்கச் சிரித்தாள்.

"கவிதையாய்ப் பேசறீங்க - பாலைவனம்... பன்னீர் இளநீர்னு..."

பொன்கம்பியை நகையாய் மாற்றித் தருவது போல அந்த வெட்கச் சிரிப்பு சம்மதத்திற்கு உருத் தருவதாய் உணர்ந்தான்.

"காதல் வந்தால் அதுவும்கூடவே வந்திடுதே..."

"எது?"

அவனிடம் மேலும் ஒட்டியபடி கேட்டாள்.

"அ... வந்து பன்னீர்... இல்லையில்ல, கவிதை...!"

"இப்ப உளர்றீங்க..."

"ரொம்ப கிட்டே வந்துட்டியா... ஒரு மாதிரி மயக்கம்..."

"ஸாரி."

வெட்கி விலக முயன்றவளை மேலும் இறுக்கினான்.

இருவரது உடல்களும், மூச்சுக் காற்றும் தகிக்க, அதில் நெகிழ்ந்திருந்தனர்.

"நாளை நானும் உன்னோடு வரேன், ராகினி..."

"ஐயோ... இப்ப வேணாங்க... முதல்ல அப்பாவிடம் உங்களைப் பற்றிப் பேசி, மாமியிடமும் விவரம் சொல்லி, சம்மதம் வாங்கறேன். அப்பாட்ட, எங்கண்ணன் ஏமாற்றப்பட்டதை எல்லாம் சொல்லவே கூடாது... தாங்க மாட்டார்... ஞாபகத்தில் வைங்க..."

இருவரின் முகங்களும் சற்று இறுகின.

"பிரமோத் கேரி... அவனை போலிஸில்பிடிச்சுத் தரக்கூடிய ஆதாரங்கள் ஏதும் நம்மிடம் இல்லையே... ம்ப்ச்..."

"பானு அவரை விரும்பறா... அதுதான் முக்கியம்..." நினைவூட்டினாள்.

"அவனுக்கு அந்தத் தண்டனையே போதுங்கறியா? பானு மாதிரி கயமைத்தனமுள்ளவ மனைவியாய் வாய்ச்சா - வாழ்க்கை முழுக்க நரகந்தான்..."



கசந்து கூறினான்.

"கேரியின் பெண்களுக்கான பலவீனமும் பானுவிற்குத் தெரிஞ்சிருக்குது. இருந்தும்..."

"அது அவளுக்கான தண்டனை. ரெண்டு பேரும் ஒரே நுகத்தடியில் சிக்கிச் சுழலட்டும்..."

"நீங்க அவங்களைச் சபிக்கக் கூடாது, ரவி. எல்லாரும் நிறைவாய் வாழணும்னு மனசார நினைப்பதுதான் நம் சந்தோஷத்திற்கான அடிப்படை. அதிலும் அவ உங்க தங்கை..."

அவளைப் பெருமிதத்துடன் பார்த்தான்.

அப்பன்னீர்ப் பார்வையில்தான் எத்தனை பாசக் குளிர்வு.

"தாங்க்ஸ், ராகினிமா. உன்னைப் பார்த்தாவது பானு கத்துக்கட்டும், திருந்தட்டும்... இப்ப நம்ப விஷயம். உங்கப்பாவிற்கு ஃபோனில் நம் விஷயத்தைச் சொல்லிடேன்... ஃபிளைட்டில் சேர்ந்து போய் இறங்குவோம்..."

"அப்பாவுக்கு அதிர்ச்சி ஆகாதுப்பா... மெள்ள பேசறேன்... அப்புறமா?" அவளது கெஞ்சலில் இளகினான்.

"புரியுது... நம் கல்யாணத்திற்குப் பிறகு அவரும் இங்கே வந்து இருக்கக் கேட்டிரு, ராகினிமா... கோடையில் வேணுமானால் நீயும் அப்பாவோடு சென்னை போயிடலாம்... உனக்குமே இந்த வெக்கை தாளாது..."

"அப்ப நீங்க...?"

"நிச்சயம் உன் முந்தானையைப் பிடிச்சபடி வந்திடுவேன்! சென்னையிலும் நல்ல வீடாய் ஒன்னு வாங்கிடலாம்..."

அந்தக் கரிசனையால் நெகிழ்ந்தவளின் கண்ணோரம் பன்னீராய்த் துளிர்த்தது நீர்...

அதை முத்தமிட்டுத் துடைத்தன அவன் இதழ்கள்...